# அய்யாதுனை

# மூன்றாம் பருவம்

# பகுதி-I

**அகில வாசகம்**:
திருமால் சிவனிடம் மேல்நடப்புரைத்தல்
ஆதியே நாதி ஆனந்த மைத்துனரே
சோதியே சான்றோராய்த் தொல்புவி ஏழிலுள்ளே
சங்கமுதல் தெய்வ சத்திபர லோகம்வரை
அங்கவரைச் சாணாராய் அவதரித்தார் பூமியிலே
என்மக்க ளான இப்பூமி ஏழிலுள்ள
பொன்மக்க ளெல்லாம் பொறுமையுள்ள சாணாராய்ப்
பிறந்தார் புவிதனிலே புகலுமையா நம்மள்செய்தி
இறந்தவழியாக இருக்கும் பாவக்கலியில்
கலிக்குள் ளகப்பட்டோர் கடந்துகரை யேறவென்றால்
வலிக்கு வலுவான வகையல்லோ வேணுமையா
தீட்டுக்குள் சென்றால் திரும்பக் குளியாமல்
வீட்டுக்குள் போவாரோ மேதினியோர் நாமறிய
இனிமேல் செய்தி இன்னதென் றீசுரரே
கனியான மைத்துனரே கட்டுரைக்க வேணுமென்றார்
அப்போது ஈசர் அச்சுதரைத் தான்பார்த்துச்
செப்புவது நாமறியோம் செய்கரும மங்கேயல்லால்
நம்மோடே சொல்ல நாரணரே ஞாயமில்லை
தம்மோடே சொன்ன சத்தியத் தின்படியே
நடத்தும் நீரென்று நவின்றாரங் கீசுரரும்
திடத்திருமா லானோர் செப்புவார் பின்னாலே

## அகில வாசக விளக்கம்:

### திருமால் சிவனிடம் மேல் நடப்பு உரைத்தல்

கலியழிப்பதற்காக மேலுலக வாசிகளை சான்றோர் மக்களாக பூவுலகில் பிறவிச் செய்தார் நாராயண மூர்த்தி. இவ்வாறு நடந்தச் சிறப்புமிக்கச் செய்திகளை எல்லாம் சிறந்து விளங்கும்

படியாகச் சிவபெருமானிடம் நாராயணர் சிரித்தபடியே கூறினார். ஆதியிலே தோன்றியவரே! அனாதியாய் நிற்பவரே! ஆனந்த தாண்டவம் ஆடுகின்ற சிற்றம்பலமே! என் அருமை மைத்துனரே! தீச்சுடராய் நின்று திருவருள் புரிபவரே! மேலுலகமாகிய ஏலோகத்தில் உள்ளவர்கள் அனைவரையும் சான்றோர்ராக, பரலோகச் சங்கத்தார் முதல், தேவர்கள் வரை எல்லோரும் பூலோகத்தில் சென்றுச் சான்றோர் மக்களாக மானிடப் பிறவி எடுத்து விட்டார்கள். சிவபெருமானே!

மேலும் மேலோகத்தில் உள்ளவர்களை சான்றோர் மக்களாக ஏன் பிறவிச் செய்தேன் என்ற காரணத்தையும் சிவப்பெருமானிடம் எடுத்துச் சொல்லுகின்றார். காரணம் என்னவென்றால் கலிக்குள் அகப்பட்டோர் கரை ஏற வேண்டுமென்றால் வலுவுக்கு வலுவான வகை ஒன்று வேணும். மாய்கையாகிய கலியை அழிக்க நல்ல குணமுடையோர் அதிகம் இப்பூலகில் தோன்ற வைக்க வேண்டிய காரணத்தால் கலியழிக்கும் வல்லமையுடைய சான்றோர் மக்களை நான் பிறவி செய்திருக்கிறேன். எப்படி தீட்டுக்குள் சென்றவர்கள் திரும்ப குளியாமல் வீட்டுக்கு போவாரோ மேதினியோர் தாமறிய அதுபோல கலியுகத்தில் தீட்டாக இருக்க கூடிய காமம், குரோதம், லோபம், மதம், மாச்சரியம், மோகம் என்ற அக அழுக்குகளை மாற்ற வேண்டுமென்றால், அந்த அகத்தீட்டை வெல்லும் குணமாகிய அன்பு , பொறுமை, தர்மம் என்ற கலியிலிருந்து விடுபடுவதற்கு ஏற்ற வகையில் உள்ள ஒரு வலு உள்ள சக்தி பெற்ற மக்களை உருவாக்க வேண்டும் என்று நான் இப்போது சான்றோர் மக்களை பிறவிச் செய்திருக்கிறேன் என்று கூறினார். அகப்பகையாகிய அழுக்கை வென்றால் தான் தர்மயுக வாழ்வைப் பெற முடியும் என்றார்.மேலும் ஏதாவது செய்தி இருந்தால் கூறுங்கள் என்று நாராயண மூர்த்தி சிவப்பெருமானிடம் கேட்டார்.

உடனே சிவபெருமானும் நாராயண மூர்த்தி கூறிய நற்செய்தியைக் கேட்டு ஆனந்தம் அடைந்து, மைத்துணரே! கலிமாய்கைக்குள் மாட்டிக்கொண்ட எல்லோருமே, அதில் இருந்து விடுபட்டு வெளியில் வரவேண்டும் என்றால் நீர் செய்யும் செயலான இந்த ஒரே ஒரு வழிதான் உண்டு. இது மாயக்கலி. இந்த மாயக் கலியை அழிக்க, மாயப் பெருமான்

போன்ற மகாசக்தி தான் வர வேண்டும் வேறு வழி கிடையாது என்று சிவபெருமான் பெருமையுடன் கூறினார்.

அதற்கு நாராயணர் சிவபெருமானிடம் அடுத்து நாம் என்ன செய்வது உங்களுடைய செய்திதான் என்ன? என்று ஈஸ்வரிடம் கூறுங்கள் என்று கேட்டார். ஈஸ்வரன் மைத்துனராகிய நாராயண மூர்த்தி பார்த்து என்னச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லைச் செய்ய வேண்டிய செயல்கள் எல்லாம் இப்பொழுது உம்மை சார்ந்தது. நீங்கள் என்னிடம் தாங்கள் சொல்ல வேண்டும் என்று சொல்வது சரியல்ல. காரணம் கலியை அழிப்பதற்குரிய அத்தனை வல்லமையும் உமக்கு நான் தந்துவிட்டேன். மாய கலியை அழிப்பதற்குரிய வழியை தாங்கள் தேடிக் கொள்ள வேண்டும் என்று சிவபெருமான் நாராயணமூர்த்தியிடம் கூறினார் ஏனென்றால் உமது சக்தியால் தான் கலியழிக்க முடியும்.

நான் ஏற்கனவே உங்களிடம் சொல்லியதைப் போன்று இந்த குறோனியினுடைய உயிரானது அழிகின்றது வரையிலும் அவனை நல்லவராக நீர் தோன்றி அழிக்க வேண்டும் என்று முதல் யுகமான நீடிய யுகத்திலே நான் உமக்கு கூறியிருந்தேன். அந்த சத்தியத்தின் படி இப்போது அந்த குறோணியினுடைய கடைசி பிரிவாகிய கலியை அழிப்பதற்குரிய வழியை தங்களே செய்ய வேண்டும் என்றுச் சிவபெருமான் நாராயண மூர்த்தியிடம் கூறினார். நான் உம்மோடுச் செய்துக் கொண்ட ஒப்பந்தத்தின் படியே உம்முடைய செயலில் நான் தலையிட மாட்டேன். உம்முடைய விருப்பப்படியே செயல்படுத்தும் என்று மாயப் பெருமானாகிய நாராயணமூர்த்தியிடம் ஈஸ்வரர் பதில் கூறினார்.

## வினா விடை

1. பொறுமையுள்ள சான்றோராய் தோன்றியவர்கள் யார் யார்?
   மேலோகத்தார்கள்

2. கலிக்கலாகப்பட்டோர்கரைந்துகடைஏறுவதற்குகூறியவழியாது?
   வலிக்கு வலுவான வகை ஒன்று வேண்டும்.

3. வலிக்கு வலுவான வகை என்பது என்ன?
கலித்தன்மைக்கு எதிராக செயல்படக்கூடிய அன்பு பொறுமை தர்மம் உறுதி தைரியம் போன்றவை ஆகும்.

4. செப்புவது நாமறியோம் செய்கருமும் அங்கே அல்லால் யார் யாரிடம் கூறியது?
சிவப்பெருமான் நாராயணமூர்த்தியிடம்

## அகில வாசகம்

தர்மயுகச் சிறப்பு

இவ்வுகமும் நீசன் இனக்குலமும் நாமழித்துச்
செவ்வுகத்த நம்மனுவோர் சிறந்ததர்மத் தாரணியும்
புதுயுகம் புதுவிருச்சம் புதுமனு புதுநினைவும்
நெதிவுசற்று மில்லாது நின்றிலங் கும்பதியும்
புதுவாயு புதுவருணன் புதுமுகில் புதுமதியும்
புதுமிருகம் புதுப்பறவை புதுவூர் வனங்கள்முதல்
தர்ம யுகத்துக்குத் தானேற்ற வஸ்துவெல்லாம்
நன்மையினித் திட்டித்து நடத்திடவும் வேணுமல்லோ
இப்படியே ஞாயம் இருப்பதுவு மல்லாமல்
முப்படித்தா னுள்ள முறைகேளு மீசுரரே
துரியோ தனனைத் தொலைத்துக் கலிவருமுன்
பதிரங்க மேவிப் பள்ளிகொண்டு நானிருந்தேன்
ஸ்ரீரங்க மீதில் சிறந்திருக்கு மப்பொழுது
நீதங்கள் கெட்டகலி நீணிலத்தில் வந்ததினால்
நீதநெறி மானுபமும் நிசமான தர்மமதும்
சாந்தமுள்ள வெள்ளானை தலையைந்து கொண்டதுவும்
வெள்ளன்னம் வெண்குயில்கள் வெண்புறா வெள்ளைமயில்
கள்ளமில்லா வெண்சாரை கடியபெல வெண்கருடன்
நல்ல அனுமன் நாடுங்காண் டாமிருகம்
வல்ல வெண்ணரிகள் வளரும்வெண் காக்கைகளும்
ஆழியோடு சிங்கம் ஆனையிறாஞ் சிப்புள்ளும்
வேளிசை வெண்கலைமான் வெண்புள்ளு வெண்ணணில்கள்
வெண்கற்றா வெண்போத்து வெண்தோகை வெண்பறவை
பண்புற்ற பட்சி பலமிருக மூர்வனமும்
இத்தனையும் நீசனுக்கு எற்றுக் கொடாதபடி

புத்தி யறிவோடு புவனமதை விட்டேகிக்
கானகமே நடந்து கதறி யெனைவருந்தி
மானுவமாய் நின்று வருந்தித் தவம்புரிந்தார்
ஆனதா லூர்வனத்தில் ஐந்துதலை வெண்சாரை
ஈனமில்லா மிருகம் ஏற்றவெள் ளானைகற்றா
வெண்ணாடை வெண்ஞாளி வெண்முத்தி வெண்மிருகம்
வெண்பட்சி யான மேல்பட்சி யானதிலே
பொன்பட்சி வெண்பட்சி பூணுநிறத் தானபட்சி
தென்பட்சி அன்பட்சி செந்தா மரையின்பட்சி
இப்பட்சி யோடு இம்மிருக மூர்வனமும்
அப்பட்சி யோடே அனைத்து மனுகூலமுமாய்க்
கூடிக் குழையும் கொடிப்பிதிரு மொன்றதுபோல்
தேடரிய அந்தத் தேதிதனில் தோன்றிவரும்
விருச்சம் படைக்க வேணு மதுவிபரம்
புரச்ச மதுபார்த்துப் புகலுது ஆகமந்தான்
என்பிள்ளை ஏழும் இயாபிக்க நாமீந்த
மின்விருச்ச மான மிகவிருச்சம் நிலையாய்
வன்னமது பூகம் வாசமது விருச்சம்
தென்னை விருச்சம் செறியும்புன் னைவிருச்சம்
ஆதி விருச்சம் அடர்ந்த பெருவிருச்சம்
சோதி விருச்சம் சுபசோபன விருச்சம்
தேச விருச்சம் செம்பொன் னிறவிருச்சம்
ஆகமத்தி லுள்ள அனேக விருச்சமதும்
வந்து மிகத்தோன்றும் வைத்திருக்குந் தேதிதனில்
சிந்து பயில்வானம் சிறந்தவொரு வெண்வானம்
வான மதிலுறையும் வளர்நிலவும் நேராக
ஈனமில் லாததுதான் இலங்குமெந் நேரம்வெளியாய்
வானமீதிலிருக்கும் வளர்நிலவும் சூரியனும்
தானமது மாறாமல் தான்வருகும் தியதியிலே
உவரியிலே தோன்றும் உயர்தரும அப்பதிதான்
கவரமுடியாது கண்காணா திருப்பதினால்
சேத்திரங்க ளொன்று தினமு மதுவிளக்காய்
சாத்திர வேதம் சமயமொன்றாய் நின்றிலங்கும்
வாயுவே பூப்போல் மலரெடுத்து வீசிநிற்கும்
ஆயுங் கலைதமிழும் அறிவொன்று போல்பரவும்
நம்மனுவோர் தர்மபதி நாளுமிகத் தழைக்கும்
தம்மனுவோர் போலே தழைத்திருந்து வாழ்வார்கள்

ஒக்க ஒருஇனம்போல் உவந்திருந்து வாழ்வார்கள்
மிக்கத் திருச்சாதி மேற்சாதி சான்றோராய்
இருப்பார் வயது எண்ணிக்கையில் லாதபடி
பருப்பார் பழமும் பாலு மிகஅருந்திப்
புண்ணிய முள்ளோராய்ப் பூமிதனை யாண்டிருப்பார்
மண்ணெல்லாந் தர்ம வயல்போல் விளைந்திருக்கும்
தர்ம புவியிலுள்ள தண்ணீர் கலைக்கியானம்
நன்மைவெள்ளங் காட்ட நாடுங் கருணைவெள்ளம்
இப்படியே தர்மபதி இராச்சியமொன் றுண்டாக்கிச்
செப்படிய பொன்பதிகள் திட்டித்து வைக்கவென்றும்
முன்னமே யென்றனக்கு உகந்ததுவ ராபதியில்
பொன்னம் பதியும் பெரியதங் கப்பதியும்
உண்டுகா ணப்பதியும் உவரியதுக் குள்ளிருக்கு
கண்டு கொள்ளார்கள் கலிமாசு கொண்டவர்கள்
ஆனதா லப்பதிதான் ஆகுவது மக்களுக்குத்
தான முடனமைக்கத் தர்மசாஸ்திரத்தி லுற்றிருக்கு
தர்ம புவிகண்டு தானிருக்கு மக்களுக்கு
வர்மமில்லை நோவுமில்லை மறலிவினை தானுமில்லை
தர்மபுவி வாழ்வார்க்குச் சத்தி விதிக்கணக்கும்
நம்மிடத்தி லல்லால் நாட்டில் கணக்குமில்லை
எம்மிடத்தில் இருக்கும் இயல்கணக்கு அத்தனையும்
சாத்திர வேதம் சமயம்போ தித்தருளி
சேத்திரவிப ரிப்புரைக்கச் செல்லநம் மனுவோரும்
காலனெனுஞ் சித்திரக் கணக்கனெனும் பேர்களுக்கு
ஏலமே தவசு இடறாக நிற்கிறார்காண்
ஆனதா லவர்கள் அழிவாகிப் போகுமையா
ஊனக் கிரகம் ஒன்பது பேர்களையும்
அழித்துவே றொன்றுக்குள் அருள்கொண் டிருக்குதுகாண்
முழித்து எழுந்து மூடொன்று தானாக்கி
முன்னூலின் சாத்திர முறையெல்லாந் தப்பவைத்துப்
பின்னூல்பு ராணமொன்று போதிப் பொருவனுமாய்
இந்தப் படியேயான் நிச்சித் திருப்பதினால்
அந்தப்படி யுள்ளதெல்லாம் ஆகுமந்தத் தேதிதனில்
அதுக்குமுன்னே நாம் அமைப்பதெல் லாமமைத்துக்
கதுக்கெனவே பார்ப்போம் கலியை யழிப்பதற்கு

## அகில வாசக விளக்கம்:

### தர்மயுகச் சிறப்பு

ஈஸ்வரனார் கூறிய நல்ல உரைகளைக் கேட்டு திடமான மனம் கொண்ட திருமால் நடக்கப்போகின்ற விவரத்தை பற்றி தெளிவாக கூறுகிறார். சிவபெருமானே! நான் இந்த கலியுகத்தையும் அதற்குள் மூழ்கிக் கிடக்கின்ற கலி நீசர்களையும் அடியோடு அழிக்கவேண்டும். அதன்பிறகு நேர்மையான வழியில் வாழுகின்ற சான்றோர் மக்களைச் சிறப்பு வாய்ந்தவர்களாக தர்மயுகப் பூமியில் வாழ்வதற்கு ஏற்றவாறு புதியதாக மரம் , செடிக் கொடிகளையும், விலங்கினங்களையும் யாருக்கும் எந்த தீங்குவிளைவிக்காத வகையில் புதியப்பிறவிச் செய்து , புது சிந்தனையோடும் நல்லறிவோடும் தெய்வக் கைலாயம்போல் ஜொலிக்கின்ற துவரம் பதியை ஒளிவீசும்படிச் செய்து அதில் வாழவைப்பேன்.

புதிய காற்று, புதிய மழை, புதிய அறிவு, புதிய மேகம் போன்ற இயற்கை களையும் இயல்பாக படைக்க வேண்டும். புதிய விலங்கினம், புதிய பறவை, ஊர்வன, பறப்பன முதல் அனைத்தும் புதிதாகப் பிறவிச் செய்ய வேண்டும். தர்மயுகத்தில், தர்ம சிந்தனையோடு அதற்கு ஏற்றபடி உள்ள புனிதமான சொத்து, சுகங்களை உருவாக்கவேண்டும். நன்மையான காரியங்கள் மட்டுமே திட்டமிட்டு இனிச் செயல்படுத்த வேண்டும் என்று நாராயணர் ஈஸ்வரரிடம் சொன்னார்.

இன்னும் மிக கவனமான முறையில் கடைப்பிடிக்க வேண்டிய நியாயமான காரியங்கள் நிறைய இருக்கிறது. அது மட்டுமல்லாமல் இதற்கு முன் உள்ள இடங்களில் நடந்த முறைகள் என்னவென்றால், துவாபரயுகத்தில் நான் கிருஷ்ணராக அவதாரம் எடுத்து துரியோதனனை வென்று, கலி தோன்றும் முன்னால் ஸ்ரீரங்கம் சென்று ஸ்ரீரங்க நாதராகப் பள்ளிக்கொண்டிருந்தேன். அப்போது எனக்கு சிறப்பான வழிபாடுகள் செய்து, சீரோடு என்னை வைத்து இருந்தார்கள்.

அந்த சமயம் இராச நீதம், தெய்வ நீதம் , மனுநீதம் எதுவுமே இல்லாத கலியன் மண்ணுலகில் வந்தக் காரணத்தினால்

நீதிநெறிகள் தவறி நியாயமான வழியில் மக்கள் நடக்காமல் தர்ம சிந்தனையை மறந்தார்கள். சாதாரணமாக வாழ்ந்த வெள்ளை நிறம் கொண்ட யானை, அந்த யானை யோடு கூடி வாழ்ந்த ஐந்து தலை நாகம், வெள்ளை நிறமுடைய அண்ணபறவை, குயில்கள் , புறாக்கள் இவையாவும் வெள்ளை மனமான சாத்வீக குணம் உடையவை ஆகும்.

மற்றும் வெண்சாரை, வெண்கருடன், வெண்மயில்கள் ,மனித சக்தியை கொண்ட பெரிய இனக் குரங்குகள், நாட்டில் நடமாடும் பயமில்லாமல் காண்டாமிருகம், தந்திரமில்லாத நரியுடன் ஒற்றுமையாய் சேர்ந்து வாழ்ந்தக் காகம், மற்றும் வெண்மை நிறம் வெள்ளை நிறம் கொண்ட மிருகங்களானதும், மனித கட்டளைக்குப் பணிந்து நடப்பதுமான நல்லறிவுக் கொண்ட யானை, சிங்கம், கிளிகள், கீழும் , மேலும் துள்ளிக் குதித்து நடனம் செய்து அழகு காட்டும் கவரி மான், கலை மான் இனங்கள், சாதுவான குணத்தோடு வாழும் பசுக்கள் மற்றும் பிராணிகள் எல்லாம் கலியனுடைய கண்களில் பட வேண்டாம் என்றுத் தப்பித்துக் கொள்ள ஞான அறிவுவோடு உலக வாழ்க்கையை விட்டு வெளியேறியது.

வெளியேறி நடையாய் நடந்து கதறியழுது காட்டில் சென்று என்னை நினைத்து மனம் வருத்தம் கொண்டு தவம் செய்தது. மேலே சொன்ன அத்தனை பறவைகளும், பிராணிகளும் , பல்மிருகங்களும் ஒற்றுமையாக ஓரிடத்தில் கூடி வாழவும், கொஞ்சிக் குலாவிடவும், சேர்ந்தது மகிழ்ந்து ஓரினம் போல் தர்மயுகம் தோன்றும் நாளில் வெளிவரும்.

அடுத்து தர்மயுகத்திற்கு ஏற்ற நல்ல மரங்கள், தாவங்கள் பற்றி சட்டதிட்டங்கள் கூறும் ஆகமத்தில் உள்ளதைப் பற்றியும் அதன் நியமங்களும் என்னவென்று கூறுகிறேன் ஈஸ்வரே! கவனமாய் கேளும் , என்று சொல்கிறார். நாராயணருடைய வாரிசு வழித்தோன்ற சப்தகன்னிமார் பெற்ற, ஏழு பிள்ளைகளும் பெருகி நிலையாக வாழ்வதற்கு, சூரிய ஒளியில் வளரும் தாவரங்களில் மிக நல்லத் தாவரங்களை நிலையாய் நிற்கும் படி, அழிவில்லாமல் படைக்க வேண்டும். வண்ண வண்ண நறுமணம் வீசும் மலர்களைத் தருகின்ற தாவரங்களைப் படைக்க வேண்டும்.

பூத்துக் குலுங்கிப் புதுப்பொலிவுடன் மணம் வீசி வாவென்று வரவழைக்கும் தன்மை கொண்ட தாவரங்களாகப் படைக்க வேண்டும். தனித்துவம் வாய்ந்த தென்னை மரம், அடர்ந்து படர்ந்து நிழல் தருகின்ற புன்னை மரம், ஆதிகாலம் முதல் இன்று வரை இறை வழிபாட்டிற்கும். மங்களகரமான செயல்களுக்கும் பயன்படுகின்ற மரமாகிய ஆலமரம், அரசு மரம் போன்ற படர்ந்து, பரந்து நிழல் கொடுக்கும் பெரிய மரங்களாகப் படைக்க வேண்டும்.

பெரும் படைகள் வந்து நிழலில் படுத்து இளைப்பாறி மயக்கம் தெளியவும், சுபகாரியங்களுக்கு பயன்படும் படி இருக்க வேண்டும். மேலும் உடல் உறுதிக்குத் தேவையான மூலிகைத் தன்மையுடையதும் நோய் வராமல் காக்கும் தன்மை கொண்ட கற்பக மூலிகைகளும் படைக்க வேண்டும். இப்படியாக ஆகமத்தில் கூறப்பட்டுள்ள பலவிதமான வகையைச் சார்ந்த சாஸ்திர சம்பிரதாயத்திற்கு உகந்த மரம்,செடி, கொடிகள் எல்லாம் தர்மயுகத்தில் புதுவிதமான புது தன்மையுடன் இருக்க வேண்டும்.

கண்ணுக்குத் தென்படுகின்ற வானம் கடலோடு சேர்ந்தது போல் கடலுக்கும் வானுக்கும் தொடர்பாய் இருக்கும். வெண்மேகக் கூட்டத்தோடு காணப்படுகின்ற சந்திரன் இனி நேராக நின்ற நிலையில் முழு நிலவாக நிற்கும். வளர்பிறை, தேய்பிறை, அம்மாவாசை, பௌர்ணமி என்கிற மாற்றங்கள் இல்லாமல் முழுநிலவாய் காட்சி அளிக்கும். சூரியன் எப்போதும் ஒரே நிலையில் விளக்காக இருந்து வெளி வீசிக்கொண்டே இருக்கும். இரவு பகல் என்ற நிலை இருக்காது. புனிதஸ்தலமாக விளங்கும் தர்மயுகப் பூமிக்கு ஒளி கொடுத்து விளக்காய் தினமும் ஜொலிக்கும். சாஸ்திரங்கள், வேதங்கள், சமயங்கள் எல்லாம் பலவகைப் படாமல் ஒரே விதமாய் இயங்கிக் கொண்டிருக்கும்.

காற்றானது சுகம் தரும் தென்றலாக வீசிக் கொண்டிருக்கும். ஆயக் கலைகள் அறுபத்தி நான்கையும் அனைவரும் கற்றுப் பேசும் தகுதியைப் பெறும் படி ஞான அறிவைப் பெறுவார்கள்.

தர்மயுக மக்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேந்தவர்கள் போல் ஒற்றுமையாக சேர்ந்து செம்மையான முறையில் வாழ்வார்கள். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் தர்ம சிந்தனையோடு தரம் குறையாமல் வாழ்ந்து சாதனை புரிவார்கள்.

மிக உயர்ந்த நிலையிலான தேவர்களைப் போல் சாந்த குணம் உடையவர்களாய் மரணமில்லாதபடி மங்களமாய் வாழ்வார்கள். என்றும் பதினாறு வயது இளமை கொண்டு நீண்ட காலம் வாழ்வார்கள். பூலோகத்தில் பூரிப்போடு கவலையில்லாமல் பரிபூரணமாகவும் சுகித்திருப்பார்கள். தர்மயுகப் பூமியின் விளைநிலங்களில் தர்மவயல் போல் விளைந்திருக்கும். பூமியில் தர்ம சிந்தனையை தூண்டுகின்ற வகையில் விளைந்திருக்கும். தண்ணீரும் கூட ஞானப்பால் போல் சுவை மிகுந்து இருக்கும். ஞானத்தை எல்லோருக்கும் அருளுகின்ற வகையில் கலைகள் எங்கும் பரந்து கருணை நிறைந்து காணப்படும். தர்மயுகப் பதியாகிய துவரயம்பதி மிகப் பொரிய அளவில் உருவாகி வர்ணித்துச் சொல்ல முடியாத அளவுக்கு சுற்றுச்சுவர்களுடன் பொன்னால் ஆன மண்படங்களும் உருவாகும்.

முன் யுகத்தில் எனக்கு உகந்த துவரயம் பதியும், பொன் அம்பலப்பதியும் சூழ்ந்து நிற்கும் கோட்டையும், அரண்மனையும் கடலுக்குள் இருக்கிறது. அதை நான் ஆட்சி செய்து அனுபவிக்க வரும் வரை கடலுக்குள்ளே இருக்கும். அதை கலியுகத்தில் உள்ள கலி மாசு கொண்டவர்கள் [காமம், குரோதம், மதம், மாச்சரியம், லோபம், மோகம் என்று சொல்ல கூடிய பேராசை,பொறாமை, வஞ்சகம், ஆணவம், கோபம், சுயநலம் போன்ற எண்ணங்கள் ] உடையவர்களால் கண்டு கொள்ள முடியாது. தீய எண்ணம் உடையவர்களின் மனதில் இறைவன் குடி கொள்வது கிடையாது. இறைவன் குடிக்கொண்டவனுடைய உள்ளத்தில் எல்லா சிறப்புகளையும் இறைவன் காட்டிக்கொடுத்தார்.

அப்படி இருக்கின்ற ஞானம் பெற்றவர்கள் துவாரகையின் சிறப்பையும் கண்டு கொள்ள முடியும். மனதில் தூய்மை

இருந்தால் ஞானம் கிடைக்கும். இல்லையென்றால் ஞானம் கிடைப்பது அரிது. ஆகவே கலிமாசு கொண்டவர்களால் கண்டு கொள்ள முடியாது என்று அய்யா கூறுகிறார். மக்கள் காணாமல் அவர்களின் ஞானக்கண்கள் மறைக்கப்பட்டு இருக்கின்றது. கண்கள் மறைக்கப் பட்டதால் கடலுக்குள் இருக்கும் துவரயம்பதியை கலிமாசு கொண்டவர்களால் மக்களால் கண்டுக்கொள்ள முடியாது .

ஆனால் துவரயம் பதியின் சிறப்பையும் தர்மபதியாகிய அங்கு வாழுகின்ற வாழ்வை பெறவேண்டும் என்று நாடுகின்ற மக்களுக்கு எப்படி வாழ வேண்டும் என்று தர்ம நெறிப்படி வாழும் முறைகளை ஆகமத்தில் அய்யா வகுத்து தந்திருக்கின்றார். அதன்படி வாழுகின்ற பேர்களுக்கு அந்த தர்மபதியை காணுகின்ற சிறப்பு அமையும். இதையே தர்ம சாஸ்திரத்திரமாகிய அகிலம் விளக்குகிறது. அப்படி ஆகம நெறிமுறைபடி வாழுகின்ற பேர்கள் தர்மபுவி கண்டவர்களுடைய நிலை எப்படி இருக்கும் என்றால்,

மேலும் தர்மபுவி கண்ட மக்களுக்கு மனதில் சஞ்சலங்கள் இல்லை. கவலையும் கண்ணீரும் இல்லை. வர்மம் என்றுச் சொல்லக்கூடிய கண்ணுக்கு தெரியாமல் நம் மனதிற்குள் இருக்கும் தீய எண்ணங்கள் எழாது, ஆகையால் அதனால் வரும் துன்பங்கள் இல்லை. மறலி வினை என்று சொல்லக்கூடிய எமன், தூதன், காலன் என்பவர்களுடைய மரண பயம் என்பதும் இல்லை. மரணமும் இல்லை. ஆகையால் காலனுக்கு வேலையும் இல்லை. தர்ம பூமியில் வாழும் தர்ம புண்ணிய வான்களது தலைசிறந்து விளங்கக் கூடிய சக்தியுள்ள விதிப்பலன் அனைத்தும், நம்முடைய கையில் தான் இருக்கிறதே தவிர, இந்த உலகத்தில் வேறு யாரிடமும் கிடையாது.

சாஸ்திர சம்பிரதாயங்களையும், மற்றும் வேத நூல்களையும் சமயப் போதனையாக மறலி வினை என்று சொல்லக்கூடிய எமன், தூதன், காலன் என்பவர்களுடைய மரண பயம் என்பது இல்லை. எவ்வுகமும் ஒன்றிணைத்து எல்லோரும் தானே எளிதாக அறிந்துக் கொள்ளுகின்ற வகையில் செய்திருக்கிறேன். மேலும் தானே தெரிந்துக் கொள்ள

முடியாதப் பேர்களுக்கு அறிவுச் சொல்லி தெளிவு தர அய்யாவின் வழிப்பாட்டு தலங்களில் கணக்கர்களை நியமித்தும் , ஆசிரியர்களாக செயல்பட நல்ல மக்களை நியமித்தும் இருக்கிறேன். நல்லொழுக்கங்களைப் பற்றி எடுத்துச் சொல்ல மக்களுக்கு நல்ல ஆசிரியர்களும் இருப்பதால் அதைப் பயன்படுத்திக் கொண்டோர் பேறுப் பெறுவார்கள்.

உயிர் பிடிக்கும் காலனுக்கும், கால விதி கணக்கு எழுதும் சித்தரக்குப்த நாயினாருக்கும், எமனுடைய தூதுவர்களுக்கும் வேலை இல்லை. ஏற்கனவே எமன் அழிய வேண்டும் என்று எக்காளத்துர்க்கை எமனுக்கும், சித்திரகுப்தனுக்கும் எதிராக நின்று தவ நிலையில் இருந்து வேண்டிக் கொண்டிருக்கிறாள். ஆகவே அவர்களுக்கு இந்த அவனியில் வேலையில்லாமல் போய்விடும். அடங்காத கலி அடங்கி தேவையில்லாமல் போவார்கள். மக்களை ஆட்டிப் படைத்து அவதிப்படுத்திய ஊனம் நிறைந்த ஒன்பது நவகிரகங்களையும் அழித்து வேறொன்றுக்குள் ஆகிவிடும்.

நவக்கிரக ஆட்சியை அடியோடு அழித்து நவகிரகங்களுக்கு அதிபதியான இந்த நாராயணருக்குள்ளே சரணடைந்து விடுவார்கள். முன் ஆகம நூலில் உள்ள கர்ம வினைகளுக்கு பலன் கொடுக்கும் நவகிரகொடுஞ் செயல்கள் இனி மறைந்து போய் விடும். இதற்கு முன்னால் உருவாக்கி வைக்கப்பட்ட ஆகமங்கள் புராணங்கள், இதிகாசங்கள், சாஸ்திரங்கள், வேத சாஸ்திர முறைகள், அத்தனையும் அழிந்து போய்விடும். முக்கால செய்திகளை உணர்த்தும் ஆகமமாகிய அகிலத்திரட்டு அம்மானை என்ற ஞானப் பொக்கிசம் முக்கால செய்திகளை உணர்த்தும். அனைவருக்கும் பிறவிப் பிணியிலிருந்து கரையேற வழி வகுக்கும். இதை மக்களுக்கு போதித்து வைகுண்டர் மக்களை வாழ வழி காட்டுவார் என்று ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு இருப்பதினால் அந்தபடி உள்ளதெல்லாம் அந்தந்த தேதியில் தோன்றும் என்று கூறினார். இது போன்ற விதிமுறைகளோடு நடக்கும் என்று, பரலோக சங்கத்தாரால் உறுதிப்படுத்தப் பட்டிருப்பதால், அகிலத்திரட்டில் சொல்லப்பட்டுள்ள படி, புதிய யுகமாகிய தர்மயுகம்

தோன்றுகின்ற நாளில் நல்ல படியாக தோன்றும் என்று கூறினார்.

தர்மயுகம் தோன்றுவதற்கு முன்பாக என்ன, என்ன செய்ய வேண்டுமோ அவைகளை முறைப்படி செய்து விட வேண்டும். ஒரு சின்ன குற்றம் குறைகள் கூட நடந்து விடாதபடி புதிய திட்டத்தோடு தர்மயுகம் ஆரம்பித்து, கலியுகத்தை முடிப்பதற்கு ஏற்ற ஏற்பாடுகளை செயல்படுத்த வேண்டும் என்று எண்ணி திட்டமிட்டு சிவபெருமானும், திருமாலும் பேசிக் கொண்டார்கள். இவ்வாறு நாராயண மூர்த்தியும் சிவபெருமானும் அங்கே பேசி அடுத்த செயலாக அம்மைமார்களுடைய தவத்தை நிறைவுச் செய்ய வேண்டும் என்று எண்ணினார்கள்.

வினா விடை:-

1. தர்மயுகத்தின் சிறப்பு எப்படி இருப்பதாக கூறப்படுகிறது?
புதுவானம்,புதுநிலவு, புதுவிருட்சம், புது பறவை, புது வருணன், புதுவாயு புது மிருகம், புதுவூர் புதுமுகில், புது வானம்

2. தர்மயுகத்துக்கு தானேற்ற வஸ்து வெல்லாம் திட்டித்து வைக்க வேண்டும் என்று யார் யாரிடம் கூறினார்?
நாராயணமூர்த்தி சிவபெருமானிடம் கூறினார்.

3. நாட்டில் இருந்த தர்ம நீதங்கள் எல்லாம் எவ்வாறு மறைந்தது?
நீதம் கெட்ட கலிதோன்றியதால்

4. நாராயணமூர்த்தி துவாபரயுகத்தை நிறைவு செய்துவிட்டு எங்கு சென்று பள்ளி கொண்டிருந்தார்?
ஸ்ரீரங்கம்

5. கலி தோன்றியதால் மறைந்தது யாவை?
நீதி நெறி மாணுவமும் நிசமான தர்மமும்.

6. "புத்தி அறிவோடும் புவனமதை விட்டேகி" இதில் புவனம் என்பது எதை குறிக்கிறது?

பூமி

7. தர்மயுகம் தோன்றும் போது வந்து தோன்றுவார்கள் என்று யாரைக் குறிப்பிட்டார்? என் பிள்ளை ஏழு(சான்றோர்கள்)

8. தர்மயுகம் தோன்றுகின்ற போது வானம் எவ்வாறு இருப்பதாக அய்யா கூறுகிறார்?
சிந்து பயில் வானஞ் சிறந்த வொரு வெண் வானமாக இருக்கும்.

9. தர்மயுகத்தில் நிலவின் தன்மை எவ்வாறு இருக்கும்?
வளர்வு தேய்வு இல்லாமல் நேராக இருக்கும்.

10. தர்மயுகத்தில் சூரியனின் தன்மை எவ்வாறு இருக்கும்?
இரவு பகல் தோன்றா வண்ணம் எப்பொழுதும் ஒளி வீசிக் கொண்டிருக்கும்.

11. தர்மயுகத்தில் வாயுவாகிய காற்றின் தன்மை எவ்வாறு இருக்கும்?
வாயு பூப்போல் வீசி நிற்கும்.

12. தர்மயுகத்தில் சாஸ்திரம் வேதங்கள் எவ்வாறு இருக்கும்?
சாஸ்திரம் வேதங்கள் பிரிவுகள் இல்லாமல் ஒன்றாக இருக்கும்.

13. தர்மயுகத்தில் மக்கள் எவ்வாறு வாழ்வார்கள்?
மக்கள் ஒக்க ஒரு இனம் போல் உவந்திருந்து வாழ்வார்கள்.

14. தர்மயுகத்தில் வாழும் மக்களின் வயது எத்தனை?
எண்ணலக்கில்லாதபடி (ஆன்மாவிற்குஅழிவு கிடையாது)

15. தர்மயுகத்தில் பூமியின் நிலை என்ன?
மண் எல்லாம் தர்ம வயல் போல் விளைந்திருக்கும்.

16. தர்மபுவி கண்டவர்களுடைய நிலை எவ்வாறு இருக்கும்?
வர்மம் இல்லை, நோவுமில்லை, மறலிவினை தானுமில்லை.

17. உவரிக்குள் இருக்கும் பதி எது?
துவரயம்பதி

18. இறைவனால் உருவாக்கப்பட்ட பொன்னம் பதி எங்கு இருக்கிறது? கடலாகிய உவரிக்குள்

19. இறைவனால் உருவாக்கப்பட்ட பொன்னம் பதியை நம்மால் பார்க்க முடியுமா?
தூய உள்ளம் கொண்டவர்களால் பார்க்க முடியும்.

20. இறைவனால் உருவாக்கப்பட்ட பொன்னம் பதியை யாரால் பார்க்க இயலாது?
கலிமாசு கொண்டவர்களால் கண்டுக் கொள்ள இயலாது.

21. தர்மயுகம் தோன்றுகின்ற போது யார் யார் அழிந்து போவதாக அய்யா கூறுகின்றார்?
எமன்தூதன், காலன், சித்ரகுப்தன் முதலியோர் அழிந்து போவார்கள்.

22. தர்மயுகம் தோன்றுகின்ற போது எவை எவை அழிந்து போவதாக அய்யா கூறுகின்றார்?
கிரகங்கள், கோள்கள்,முன்நூல் சாஸ்திரமும், சாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ள செயல்முறை முதலியன எல்லாம் அழிந்துபோகும்.

23. தர்மயுகத்தில் சாஸ்திரம் வேதங்கள் இருக்குமா?
இருக்காது இறைவனால் வகுக்க பட்ட ஆகமம் ஒன்று இருக்கும்.

## அகில வாசகம்

அம்மைமார் தவநிறைவு

என்று விசாரித்து இருக்கின்ற நாளையிலே
சான்றவரைப் பெற்ற தையல்தெய்வக் கன்னியர்கள்
தவத்தி லவர்நின்று தலைவரையுங் கால்வரையும்

உபத்திர மால்விருச்சம் உடலெல் லாமேமூடி
கன்னியர்கள் ரோமம் கனத்தபுவி யில்வேராய்
உன்னியே லோகமதில் ஓங்கிப் பரந்ததுவே
நின்ற தவந்தான் நிலைத்து நிறைவேறி
நன்றினியக் கன்னியர்கள் நாடுந் தவத்தருமை
பார்த்தன் தவமதிலும் பத்துரெட்டிக் கூடவுண்டே
ஏற்றரிய சீதை இருந்த தவமதிலும்
ஒட்டிரெட்டிக் கூடவுண்டே ஓவியத்தார் தந்தவங்கள்
ஏட்டி லடங்காது இவர்தவசைச் சொல்லவென்றால்
பொறுத்து முகியாதப் பெரிய தவத்தருமை
மறுத்துரைக்கக் கூடாமல் வளர்ந்துதவ முற்றியதே
சத்தி உமையாட்கும் சதாசிவ மானதுக்கும்
முத்திக்கும் மாலுக்கும் முகுந்தன் பிரமனுக்கும்
மனதில் மிகஅறிந்து மாதுசத்தி யேதுரைப்பாள்
எனதுள் குடியிருக்கும் என்னுடைய நாயகமே
காட்டிலேழு பெண்கள் கனநாள் தவசுபண்ணி
தாட்டிமையாய்ப் பெண்கள் சடைத்தார்காண் ஈசுரரே
பெண்கள் தவசியல்லோ பொறுக்கமிகக் கூடலையே
அங்கேபோய் நாமள் அவர்தவசு பார்ப்போமென்றாள்
என்று உமையிரங்கி இப்படியே சொல்லிடவே
அன்று அறம்வளர்த்தாள் அவள்பங்க ரேதுரைப்பார்
நல்ல உமையே நாடும்பெண் ணார்தவத்தில்
செல்லவென்றால் நாரணரும் தேனேவர வேணுமென்றார்
அப்போது நாரணரை அடிவணங்கி மாதுமையும்
ஒப்போ டுறவணங்கி உரைக்கிறா ளன்போரே
அண்ணரே கோவே ஆதிநா ராயணரே
கண்ணரே கார்வண்ணரே காட்டிலேழு கன்னியர்கள்
தவசுதனி லிருந்து சடைத்தார் கனநாளாய்
சிவனே அவர்கள்தவம் செப்பப் பொறுக்காது
நாமள்போய்ப் பார்த்து நல்லபெண்க ளேழ்வரையும்
ஆமான பதவி அருளவே வேணுமையா
என்றுநா ராயணரை எழுந்தருளச் செய்துஉமை
அன்று சிவனாரும் ஆதிநா ராயணரும்
அம்மை உமையாளும் அரம்பை ஸ்திரிமாரும்
செம்மையுட னடந்து சென்றார் வனமதிலே
வனத்தி லவர்கள்வர மாதரேழு கன்னியர்கள்
இனத்திலுள்ள மாதுமையை எல்லோருங் கண்டாவி

தாயே வுனது தாள்கண்டு எத்தனைநாள்
வாயே புவிக்குடைய மாதாவென் தாயாரே
எனதேர மெங்களைநீர் இகழ்ந்து கடத்தாமல்
தனதாக எங்கள் தயவில் குடியிருந்து
கற்பகலாக் காத்த கண்ணெங்கள் மாதாவே
உற்பனமா யெங்களைநீர் உலகில் தவறவிட்டு
இருந்தாயே தாயே எங்கள்விதி நாயகமே
அருந்தாமல் வாடினோமே அறமில்லார் தங்களைப்போல்
காத்திருந்தா யென்றிருந்தோம் எங்களுட கட்டழியப்
பார்த்திருந்த ஞாயமென்ன எங்களுட பார்வதியே
எந்நேர மீசுரர்க்கும் என்னம்மை யுங்களுக்கும்
சொன்ன பணிமறந்து சொல்தப்பி நின்றோமோ
ஈசருட சட்டம் யாங்கள் மிகமறந்து
தேச மதில்வரவே சிந்தை யிச்சித்ததுண்டோ
கற்பினை மறந்தோமோ காராவைக் கொன்றோமோ
அற்புதவேள் தாயே அடியார் தமக்கருளும்
என்றுகன்னி யெல்லாம் இப்படியே தானுரைக்க
அன்று அறம்வளர்த்த அம்மை மனதிரங்கி
நல்லதுகாண் பெண்ணேயுங்கள் ஞாயமெல லாமுரைப்போம்
வல்ல சிவனாரே வார்த்தையொன்று நீர்கேளும்
தவத்தை நிறைவேற்றித் தார்குழலா ளேழ்வரையும்
அகத்தே வரவழையும் ஆதியே யென்றுரைத்தாள்
அப்போ சிவனார் ஆனகன்னி ஏழ்வரையும்
கொப்போடு சூழ்ந்துநின்ற குழையெல்லாமே யுதிர்த்தி
நிறைவேற்றித் தவத்தை நேரிழைமா ரேழ்வரையும்
சிறைமாற்றிப் பெண்களையும் சிவனார் வரவழைத்து
வந்து மடவார் மறையொத்த மூவரையும்
சந்துஷ்டி யாகத் தாழ்ந்து நமஸ்காரமிட்டுக்
கனகத் திரவியக் கப்பல்கரை சேர்ந்தாற்போல்
மனமகிழ்ந்து மாதுமையை மாமடவார் முத்திமுத்திக்
கொண்டாடிக் கொண்டாடிக் கூறுவார் கன்னியர்கள்
சென்றோடிச் சென்றாடிச் சிவனை மிகப்போற்றி

விருத்தம்

வந்தனே வந்தாய் போற்றி மாதுமைக் கணவா போற்றி
சந்தன மயிலே போற்றி சண்முகன் தாயே போற்றி

நந்தகோ வேந்தே போற்றி நாதனே நீதா போற்றி
சிந்தரென் கணவா போற்றி சிவசிவா போற்றிப் போற்றி

விருத்தம்

மாதவா போற்றிப் போற்றி மறைமூடி காணா வல்ல
நீதவா போற்றிப் போற்றி நிசரூபச் சித்தா போற்றி
சீதவா ளுமையே போற்றித் தெய்வநன் மணியே போற்றி
மாதவா வனத்தில் தொட்ட பாங்கனே போற்றிப் போற்றி

விருத்தம்

மூவர் தேடியு முற்றாத முதலே யுனதுபதம் போற்றி
தேவர்க் கரியத் திரவியமே தெய்வ மணியே சிதம்பரமே
காவக் கானக வனமதிலே கற்பை யழித்துக் கைவிட்டகன்ற
தாவத் துணையே யென்கணவா தவமே யுனதுபதம் போற்றி

விருத்தம்

மாட்டி லேறும் மகாபரனே மாது உமையாள் பங்காளா
காட்டி லடியா ரேழ்பேரும் கற்றா விழந்த பசுவதுபோல்
ஊட்டி உறக்கா ரில்லாமல் ஊமை கண்டக் கனாவதுபோல்
வாட்ட மறிந்து மனதிரங்கி வந்தாய்க் கவலை தீர்ந்தோமே

விருத்தம்

தீர்ந்தோமினி எங்களைத் தானும் திரும்பக் கயிலைக் கழையாமல்
ஈந்தோர் பிள்ளை ஏழ்வரையும் இனமு மேழுங் குறையாமல்
சாந்தோ ரெங்கள் கணவரையும் தந்தே தரணி யரசாண்டு
வாழ்ந்தே யிருக்க வரமருளும் மாயா திருக்கு மறைமுதலே

நடை

அய்யா முதற்பொருளே ஆனந்த மானவரே
மெய்யான மூல மேல்வீட்டி ருப்போனே
தூணாக அண்டபிண்டத் தூரைக் கடந்தோனே

கோணவட்டத் துள்ளே குடியிருக்குங் கோவே
ஈசரே யெங்களுட இளைப்பெல்லாம் நீர்மாற்றித்
தேசமதில் வாழச் செல்ல வரந்தாரும்
பெற்றமக்க ளேழும் பிள்ளை யதுவழியும்
கொத்துக் கொடியும் குலவம்மி சமுழுதும்
சான்றோர் வழிமுழுதும் தற்காத்து எங்களையும்
பண்டுசெல் செய்த பாரமுனி வன்பதத்தில்
சேர்ந்திருக்க வுமவரின் திருப்பாத முந்தொழுது
தாழ்ந்திருக்க வுஞ்சிவனே தாரும்வர மென்றுரைத்தார்
அப்போது நல்ல ஆதிசிவ மேதுரைக்கும்
இப்போது நாரணரே இக்கன்னி கேட்டதற்கு
இன்னவித மென்று இசைந்து வரங்கொடுவும்
சொன்னவிதங் கேட்டுச் சொல்லுவார் நாரணரும்
கேட்ட வரமதுதான் கெட்டிதான் ஈசுரரே
நாட்டமிந்தப் பெண்களுக்கு நான்சொல்ல நீர்துணையாய்
மடமாதே பெண்ணரசே மடந்தைக் கிளிமொழியே
தடமான பொய்கையிலே தண்ணீர் தனைச்சுருட்டி
ஈசருட முடியில் இட்டுக் கரங்குவித்து
வாசமுடன் நாடோறும் வருகின்ற வேளையிலே
இன்றேநீர் கொண்டு ஏகின்ற நீரையெல்லாம்
இன்றென் தலையில் இயல்பாய் விடுவுமென்றேன்
இரந்து திரியும் ஈசருக் கல்லாது
பரந்தபுவி மாயனுக்குப் படாதே எனவுரைத்தீர்
அப்போது உங்களைநான் ஆகட் டெனவுறுக்கி
இப்போது பாரென்று இத்தனையுஞ் செய்தனல்லோ
வண்ணத் திருமாலிவ் வகையுரைக்க மாதரெல்லாம்
கண்ணையவர் பொத்திக் கவிழ்ந்துமிக நாணிநின்றார்
அப்போது எம்பெருமாள் அவர்களுட னேதுரைப்பார்
ஒப்போடு வொத்த ஒவியங்க ளேகேளும்
மான்பெற்ற பிள்ளைகள்தாம் மானிலத்தி லேபெருகி
வானத் தமிர்த மதுபா லமுதருந்தி
வாழ்ந்தார் சிலநாள் மன்னரெனக் கோட்டையிட்டார்
ஆழ்ந்ததொரு சோழன் அவன்பழிகள் ரண்டேற்றான்
பின்னுள்ள சான்றோர்க்குப் பிறகுவந்த மாநீசன்
அந்நீசன் சாபமிட்டு அவர்கள் துயரமுற்றார்
துயரமுற்றுச் சான்றோர் துற்கலிக் குள்ளாகி
அயர்ந்து மிகவாடி ஆட்போலே நீசனுக்குத்

தாழ்ந்து பணிவிடைகள் சான்றோர்கள் செய்தாலும்
வாழ்ந்துமிகக் கெட்டகலி வைது மிகஅடித்து
ஆருமற்றார் போலே அலையுகிறார் சான்றோர்கள்
சேருமிட மில்லாமல் தியங்குகிறார் சான்றோர்கள்
அப்ப னானிருக்க அவரம்மை நீயிருக்க
அப்பனம்மை யில்லையென்று அடிக்கிறான் நீசனெல்லாம்
நீரு மித்தனைநாள் நின்றுவிட்ட ரித்தலத்தில்
நானும் பரதேசம் நடந்துவந்தே னித்தனைநாள்
சான்றோர் துயரம் தான்கேட்பா ராருமில்லை
மீண்டே நாம்கேட்கவென்று மேதினியில் போகவென்றால்
இச்சொரூபங் கொண்டு ஏகினால் மாகலியன்
பொய்ச்சொரூபத் துள்ளே புக்கிடுவோ மல்லாது
சிக்கினால் நாமள் செடமெடுக்க நாளாகும்
மக்களுட துயரம் மாறாது என்றுசொல்லி
என்றையா நாதன் எடுத்துரைக்கக் கன்னியர்கள்
அன்றவர்கள் தலையில் அடித்துக்கீழ் வீழ்ந்தழுதார்
அழுதாரே பெண்கள் அருவரைகள் தானிளக
ஒழுகான பெண்கள் ஓலிமிட் டேயழுதார்
அய்யோயெம் மக்கள் ஐந்திரண் டானதிலே
பொய்யோமெய் யோசோழன் பொன்றிவிட்ட ஞாயமது
கற்பழியாக் கன்னியெங்கள் கற்பையெல்லாம் நீரழித்து
உற்பனமாய்ப் பெற்றபிள்ளை ஒன்றுபோல் நீர்பார்த்து
வளர்க்காமல் மக்களையும் மாளக் கொடுத்தீரே
பழவினையோ யெங்களுட பாவக் குறைச்சலிதோ
கற்பிழந்தோ மென்றும் கௌவையில்லா தேயிருக்க
இப்பிழையோ வந்து எமக்குத் தலைவிதிதான்
மக்க ளிருபேரை வதைத்தகொடுஞ் சோழனுட
அக்கபக்க மெல்லாம் அறாதோ எம்சிவனே
மாபாவிச் சோழனுட வம்மிசங்க ளானதெல்லாம்
தீயாவிக் கொண்டு செத்திடா தோசிவனே
எம்மக்கள் தம்மை இடுக்கஞ்செய் தேயடித்த
வன்மக்கலி நீசனெல்லாம் வாழ்விழந்து சாகானோ
பழிசெய்த சோழனூர் பகலநரி ஓடாதோ
வழிசோழ வம்மிசங்கள் வன்னரகில் மாளாதோ
நீசக் குலங்கள் நெருநெரெனத் தானொடிந்து
தேசப் புழுக்குழியில் தோயாதோ யெம்சிவனே
பழிசெய்த சோழன் பாரக்கடலதிலே

வழிமுழுதும் கல்லெனவே மாறியே நில்லாதோ
பெற்றநா ளன்றுமுதல் பிள்ளைகளைக் காணாமல்
நித்தம் பால்சுரந்து நெகிழுதே யெம்சிவனே
பெற்றபிள்ளை ஏழுடைய பேருடம்பு தன்னிறத்தைச்
சற்று மறிந்திலமே தலையிலேழு துஞ்சிவனே
கொதிக்குதே யெங்கள் கும்பிமிகக் குமுறிக்
கொதிக்குதே யெங்களுட கண்மணியைக் காணாமல்
ஏழுகன்னி மாரில் யார்பெற்ற கண்மணியோ
கோளுரைத்துப் பாவி கொன்றானோ யெம்சிவனே
கொன்னவன்தா னின்னம் கொடுநரகில் வீழாமல்
இன்ன மிருப்பானோ இறந்தானோ யெம்சிவனே
பாவியவன் செத்துப் பஸ்பமாய்ப் போனாலும்
ஆவியைக் கண்டாலும் ஆக்கினைகள் செய்திடுவோம்
மக்கள்ரண்டு பேரும் மணஞ்செய்து வாழ்ந்தவரோ
பக்குவ வயசதிலோ பாழறுவான் செய்தவினை
கலியாணஞ் செய்த கண்மணிக ளானாக்கால்
வலியான மங்கையர்கள் மனஞ்சலித்து வாடுவரே
இட்ட வுடைமை இறக்கா திருப்பாரோ
கட்டின மங்கிலியம் கழற்றா திருப்பாரோ
இத்தனையுங் கழற்றாது இருக்கச் சிவன்செயலால்
புத்தி தனைக்கொடுத்துப் பெண்ணரசைக் காப்பாரோ
ஏதென் றறிந்திலமே எங்களுட தாயாரே
கோதண்ட மாதாவே கோவேயெந் தாயாரே
வனத்தில்வந் தெங்களுட வாட்டமெல்லாம்தீர்த்தீரென்று
புனத்தில்கனி கண்டதுபோல் பிரியமுற்றோ மாதாவே
கைப்பிடித்த பண்டாரம் கட்டுரைத்த சொற்கேட்டு
மெய்ப்பிடித்த மெல்லாம் மிகவுழறு மாதாவே
கன்னிப் பருவமதில் கைமோச மானதினால்
உன்னி மனதில் உளறி யுளங்கலங்கிப்
பாராமல் மக்களையும் பார்மீதி லேகிடத்திச்
சீரா கவனத்தில் சென்றோ மிகநாணி
பாவி கெடுவான் பழிசெய்வா னென்றுசொல்லித்
தாவியே யெங்கள்மனம் சற்று மறியாதே
எங்களையு மீடழித்து எம்மக்க ளேழ்வரையும்
சங்கை யழிக்கத் தலையெடுத்தா ரிக்கூத்தர்
நச்சுக் களையாய் நாங்கள்வா ழுமிடத்தில்
சச்சுருவ மிட்டுவந்து சதித்தாரே பண்டாரம்

எங்களுக் கென்றிவரைப் படைத்தா ரோபிரமன்
கங்கை யணிசிவனார் கேட்டு மகிழ்ந்தாரோ
இத்தனைக் கூத்தும் இக்கூத்தெல் லாம்பார்க்கக்
கூத்துவன்போல் தோன்றி கோலங்கொண்ட பண்டாரம்
இனியெங்க ளையேற்று ஈன்றபிள்ளை ஏழ்வரையும்
மனுவேழ் குறையாமல் மக்களேழு வழியும்
குறையாமல் தந்து குவலயத்தை மக்களுக்குத்
திறவானத் தங்கத் திருமுடியுஞ் செங்கோலும்
கொடுத்தெங்கள் மக்கள் குவலயத்தை யாண்டிருக்க
அடுத்துச் சிலநாளில் ஆக்கிவைக்கா திருந்தால்
ஏழுபெண் பாவம் ஏற்பீர்காண் பண்டாரம்
நாளு கடத்தாமல் நடத்தி மிகத்தாரும்
எங்களையுங் கற்பழித்து இந்த வனந்தனிலே
மங்கள சோபனமும் மறந்து மயிர்விரித்துத்
தூங்காமல் வாடி தினமும் மிகவுணர்ந்து
ஆங்கார மேமறந்து அவனியா சையறுத்துத்
தலைவிரித்துக் கலையைச் சதமென்று எண்ணாமல்
உலையில் மெழுகதுபோல் உறுவனத்தி லேநிலையாய்
வெயில்பனியிலு மேகத் துளிர்விழிக் குள்ளாகிக்
குயில்கூவும் வனத்தில் கோதையேழு பேரும்
நின்றோமே காட்டில் நீர்செய்த மாயமதால்
குன்றுமலைக் கேகாமல் கோதைநாங்கள் தவமிருந்தோம்
இனியெங்கள் மக்கள் ஏழ்வரையு மேழ்வழியும்
அநியாய முமடக்கி ஆனமக்கள் வம்மிசத்தைக்
கொத்தோடே சேர்த்தெடுத்துக் குறுங்கலியை யடக்கி
மத்த தேசமும் மாயன் திருப்பதியும்
அரசாள மக்களுக்கு ஆனபதி ஈயும்வரைக்கும்
துரைசாணி அய்யா துய்ய நாரயணரே
எங்களைப்போல் சுகமற்று இருப்பீர்காண் பண்டாரம்
மங்களமல் லால்கலி மாளும்வரை வாராது
என்று சபித்தார் ஏற்றகன்னி ஏழ்பேரும்
அன்றுநா ராயணரும் அவர்கேட்டுத் துக்கமுற்று
என்னசொல்லப் போறோம் யாம்தா மினியெனவே
வன்னத் திருமேனி மனதுநொந் தேதுசொல்வார்
பெண்ணேநீ ரேழ்பேர்க்கும் பிரமா அமைத்தபடி
எண்ணம் வந்ததல்லால் யானென்ன செய்தேனடி
ஆனால் கலியை அழிந்துமக்கள் தம்வழியை

நானாகச் சென்றெடுத்து நலங்கொடுக் கும்வரைக்கும்
துயர மெனக்குத் தொடுக்குமெனச் சாபமிட்டீர்
அசுரக் குடும்பம் அறுக்கும்வரை முன்னாளில்
ஈசரிட்ட சாபம் ஈதோடே வாய்த்துதடி
மாசங் கடந்து வரும்வரைக்கும் நீங்களுந்தான்
எங்கே போயிருக்க ஏழ்பேர்க்குஞ் சம்மதங்காண்
கொங்கை யினியழகக் கோதையரே சொல்லுமென்றார்
அப்போது கன்னி அவரெல்லா மாராய்ந்து
செப்புகிறா ரந்தச் சிவபத்தர் தன்னுடனே
மக்கள்ரண்டு பேர்கள் மாண்டாரவ ருயிரை
அக்கமது செய்தீரோ அயலோவது ஞாயமென்ன
என்றுகன்னி ஏழ்பேரும் இரங்கித் தொழுதிடவே
அன்றுநா ராயணரும் ஆதிசிவ னுமையும்
தாதா மனமகிழ்ந்து சதுர்முகனைத் தானழைத்து
வேதாவே மக்கள்ரண்டை வெற்றியுள்ள வைகையிலே
கொன்றானே சோழன் குருநன்றி யைமறந்து
சென்றாரே மக்கள் சென்றவுயி ரெவ்விடங்காண்
அப்போது வேதா அவர்தான் மிகமகிழ்ந்து
செப்புகிறோ மென்று செப்பினா ரன்போரே
இறந்தபிள்ளை ரண்டின் ஏற்றவுயி ரானதையும்
அறந்தழைக்கு மாகயிலை அறைக்குள் ளடைத்திருக்கு
மால்மக்க ளென்று மனமகிழ்ந்து நான்பதறி
வாலைமுனி யுயிரும் வானவர்கள் தன்னுயிரும்
ஆனதினால் பிறவி அமைக்கப் படாதெனவே
நானிதற் கஞ்சி நற்பதியில் வைத்திருக்கு
என்றுவே தாவுரைக்க எம்பெருமா ளேதுரைப்பார்
அன்று படைத்திலையே அநேகமனு வாகுமல்லோ
அஞ்சுமக்கள் பிள்ளை அவனியைம்பத் தாறதிலும்
மிஞ்சிப் பரந்து மேல்சான் றோர்பெருக்காய்
இப்பிள்ளை ரண்டும் ஏலமே நீர்படைத்தால்
கொப்புநூ றாயிரம்போல் கூடிப்பெ ருக்குமல்லோ
பாவி கெடுத்தான் படையாமல் நீர்கெடுத்தீர்
தாவிக் கெடுத்தான் சளக்கலியன் மாபாவி
இனியென் மக்களுயிர் இன்பமுடன் நீர்காத்து
மனுவோராய்ப் பூமியிலே வைகைக்கூ டவ்வோடு
எழுப்ப வேணுமென்று யாம்நிச்சித்தி ருப்பதினால்
வெளுப்பாக அவ்வழியில் மேலுகத்தோர் தாம்பிறந்து

இன்பமுள்ள வானவரும் இவ்வழியில் வாழ்வதினால்
அவ்வழியி லவ்வழிகள் அநேகம் பெருகிடவே
செவ்வாக நிருமிப்போ திடீர்திடீ ரெனப்படையும்
என்றுசொல்ல மூலம் இசைந்துநல்ல வேதாவும்
நன்று நன்றென்று நருள்பிறவி செய்தனராம்
இப்படி யேபிறவி இவர்செய்வோ மென்றுசொல்லி
அப்பிறவி வேதா அமைத்தார் மனுப்பெருக
உடனேநா ராயணரும் உள்ளங் களிகூர்ந்து
திடமான கன்னியர்கள் செய்முகம்பார்த் தேதுரைப்பார்
நீர்கேட் டதற்கு நிண்ணயங்கள் கண்டீரே
தார்கெட்ட கலியில் தான்படைத்து அனுப்பிவைத்தோம்
இனிநான் கேட்பதற்கு இன்னதென்று சொல்லிடுவீர்
உங்களைப்பூ லோகமதில் உடைய வழிக்குலத்தில்
நீங்களும் போய்ப்பிறக்க நிச்சித் திருப்பதினால்
ஏதுபெண்கா ளுங்கள்மனம் ஏதென்று டனேசொல்லும்
மாதுக ளெல்லாம் மனமகிழ்ந்து கொண்டாடி
எங்களுட நாயகமே எமையாளும் ரத்தினமே
செங்கருட வாகனவா தேவி மணவாளா
நீர் நிச்சித்த நினைவெள்ளுப் போலளவும்
சீர்பரன் முதலாய்த் தெரியாத சூட்சியதே
எங்களைப்பூ லோகமதில் எங்கள் வழிக்குலத்தில்
மங்களமாய்ப் பிறவி வகுப்போ மெனவுரைத்தீர்
பிறவிய துநாங்கள் பெண்மனுப் போல்பிறந்தால்
இறவி யாகாமல் இருக்க அருள்வீரோ
அல்லாமல் பின்னும் அடியார் மிகப்பிறந்தால்
வல்லாத நாயகமே வந்துநீ ரேற்குமட்டும்
மாதவிடை மாமணங்கள் மலர்ந்துறக்க மில்லாமல்
சீதமாய் மனுவோடு உறவாடிச் சேராமல்
மூடாம லாடை முகமினுக்கிச் சேராமல்
பாடாம லந்திசந்தி படுத்துத் துயிலாமல்
நன்மை யறியாமல் நளிப்பேச்சுக் கேளாமல்
தின்மை யறியாமல் தீன்ரசத்தைத் தேடாமல்
கொய்து புடவை குக்குளித்துச் சூடாமல்
மயிரு வளர்க்க மனதுவே றெண்ணாமல்
கொங்கை திரளாமல் கூறுடம்பு வீசாமல்
செங்கனிவாய்த் தேமல் தேகமதில் வீழாமல்
பக்குவ ஞாயப் பருவம்வந்து வாய்க்காமல்

மிக்குவ மான மிகுவாழ்வு சேராமல்
சுற்றுக் கிளைகள் தொடுத்தன்பு கொள்ளாமல்
ஒற்றுப் பிதற்றாமல் ஒருவர்முகம் பாராமல்
அல்லல்நோய் பிணிகள் அனுப்போலும் வாராமல்
தொல்லை வாராமல் சுகமுமிக வாராமல்
இந்த விதிப்படியே எங்களையும் நீர்படைத்துச்
சொந்தமுடன் வந்துநீர் தொட்டெடுத்து நன்மைதந்து
இரச்சிப்போ மென்று எமக்கு உறுதிபண்ணி
நிச்சித்துத் தர்மகுலம் நீர்பார்த்து தான்படையும்
என்றுகன்னி ஏழ்பேரும் இப்படியே சொல்லிடவே
அன்றுஆ திநாதன் அகமகிழ்ந்து கொண்டாடி
நல்லதுதான் பெண்ணேநீர் நம்மோடே கேட்டபடி
வல்லவித மானாலும் மாறாதென வுரைத்தார்
வாக்குரைக்க கன்னியர்கள் மனமகிழ்ந்து கொண்டாடி
நாக்குரைப்பார் பின்னும் நாரா யணரோடு
நாங்கள்போய்ப் பிறந்தால் நம்முடைய நாயகமே
தாங்கள்வரு மென்றதற்குத் தருணமே தென்றுரைத்தார்
அப்பொழுது அய்யா நாராய ணருரைப்பார்
செப்புகிறார் கன்னியர்க்குச் சிறந்த தருணமது
ஆயிரத்தெட் டம்பலமும ஆன திருப்பதியில்
வாயிதமோ ரம்பலமும் வளர்பதியி லொன்றதுவும்
கெங்கையுட கண்ணும் கேள்விமன்னர் தஞ்சாவும்
சங்கை யழிந்து தலையழிந்த தவ்வாண்டு
வருவேன் தென்சுவர்க்க வடமேற்கு மூலையிலே
தருவேன் கெதிகள் தருணமிக கேளீர்
லிங்கமொன்றி லேமூன்று இணையாகத் தோன்றினவென்று
எங்கும் பிரகாசம் இட்டவ்வாண் டேவருவோம்
கண்டிடநீர் நான்வருகக் காரண மநேகமுண்டு
விண்டுரைக்கக் கூடாது மெல்லியரே யித்தருணம்
சொன்னத் தருணம் செவிகேட்டு நீங்களெல்லாம்
என்னை நினைந்து இருங்கோ வொருநினைவாய்
அத்தருணம் வருவேன் ஆதிசிவ நாராயணரும்
இத்தருணங் கேட்ட இப்பொழு தேமுதலாய்
வடமேற்கு மேற்கும் வடக்குங்கால் நீட்டாதுங்கோ
வடக்கு உதித்து வருவோம் நாம்தெட்சணத்தில்
என்று தருணம் இதுவுரைத்தார் கன்னிகட்கு
அன்று மடவார் அகமகிழ்ந்து கொண்டாடி

நல்லதுகா ணெங்களையும் நாயகமே நீர்படையும்
வல்லப் பொருளே மறைமுதலே யென்றுரைத்தார்
உடனையா நாதன் ஓவியத்தா ரேழ்வரையும்
திடமான பூமியிலே செய்தர்ம அவ்வழியில்
பிறவிசெய்தார் மூவர் பிறந்தார்கள் கன்னியர்கள்
திறவி யொளிமாதர் தேசம தில்பிறக்க
நாரா யணரும் நல்லசிவ னுமையும்
சீராரும் நல்ல தெய்வத் திருமாதும்
கயிலை தனிலேகிக் கட்டான மண்டபத்தில்
ஒயிலாகக் கூடி உவந்திருக்கு மப்போது

## **அகில வாசக விளக்கம்**:

### **அம்மைமார் தவநிறைவு**

தர்மயுகச் சிறப்பைப் பற்றி சிவனும், மாலும் பேசி திட்டமிட்டு இருக்கையில், அச்சுதருடைய பிள்ளைகளைப் பெற்றெடுத்த தெய்வலோக கன்னிமார்கள் ஏழுபேர்களும், தவநிலையில் இருந்து சிவபெருமானை தியானிக்கிறார்கள். நெருப்பைப் போன்ற செம்மை நிறமுடைய சிவபெருமானே! வெண்மை நிறமுறைய திருநீற்றை உடல் எங்கும் அணிந்தவரே! எல்லா செல்வங்களையும் உடையவரே! மெல்லிய கொடியிடையையும், மை தீட்டிய அகன்ற கண்களையும் உடைய உமா தேவியின் மாணவாளனே!

வழி வழி அடிமைகளாகிய நாங்கள், வண்டுகள் மேவுகின்றஅரிகோண மாமலையின் அடிவாரத்தில் பாய்ந்து ஓடுகின்ற அமிர்த கங்கையில் தெய்வ கன்னியர்களாகிய நாங்கள் எங்கள் செவிகளில் அணிந்துள்ள தோடுகள் ஆட, கழுத்தில் அணிந்த பசும்பொன் ஆபரணங்கள் குழைந்து ஆட, அழகிய உடலில் உள்ள தங்க ஒட்டியாணம் ஒய்யாரமாய் ஒளி வீச, கார்குழல் கலைந்து ஆட, அந்த கூந்தலில் சூடிய மலர்கள் இசைந்து ஆட, அந்த மலர்களில் மொய்க்கின்ற வண்டுகளும் கூட்டமாய் கலந்து மகிழ்ந்து கொஞ்சிட, நாங்களும் குளிர்ந்த நீரில் மூழ்கி, கைகளால் நீரைக் குடைந்து, குடைந்து விளையாடி, நீராடி எம்பெருமாள் ஆடும் திருச்சிற்றம் பலமாகிய, மறைப் பொருளைப் பாடி ஆடுவோம்.

கழல், அணிந்த உமது திருவடிகளைப் புகழ்ந்து பாடி மகிழ்ந்தோம். எங்கள் தலைவனே! எங்களை நீர் ஆட் கொண்டு அருளும் திருவிளையாடலின் படி பக்தியோடு வழிபட்டு வந்த அடியவர்களாகிய நாங்கள் நெறி முறைகள் தவறாமல், அமிழ்த கங்கைநீரை பக்திப் பெருக்கால் கையில் திரட்டி சிவ பெருமானாகிய உமக்குப் பணிவிடைகள் செய்து வந்தோம். அதற்குத் தடையாக எங்களுக்கு தீங்கு வந்து விழைந்தது போல் மாயவித்தைகளைச் செய்யும் மாயப் பெருமாள் எங்கள் கற்புக்குக் கழங்கம் ஏற்படுத்தி, கற்புடைய கன்னியர்களாகிய. எங்களை தாய்மை அடையச் செய்து, கைலாசம் போகத் தடைச் செய்ததால், அந்த உலகுக்கெல்லாம் தலைவனாய் நிலைத்து இருக்கின்றவனாகிய அந்த கேசவனையே நாங்கள் கணவராய் சேரும்படி, நாங்கள் செய்யும் தவம் நிறைவு அடைய எங்களுக்கு அருள் புரிய வேண்டும் சிவபெருமானே! அந்த எழில் கொஞ்சி சீர் மல்கும் ஆயர்பாடியின் கூர்வேல் பெருந்தொழிலன் நந்தகோபம், கையில் எடுத்து ஏந்திய பாத்திரங்களில் எல்லாம் நிறைந்து பொங்கி, மேலும், கீழுமாய் வழியும் படியாக இடைவிடாமல்-

பால் சுரந்து பொழிகின்ற பெரிய பசுக்களை அளவில்லாமல் வைத்திருக்கின்ற நந்த கோபனின் மகனாக நந்த கோபாலன், ஏரார்ந்த கண்ணி யசோதையின் இளஞ்சிங்கம், கார்மேனிச் செங்கன் கதிர்மதியம் போன்ற முகத்தை உடையவன். நீங்காத தோள் வலிமையுடையவன். பார்ப்பவர் கண்களை அப்பால் ஈர்த்து அருள் கொடுப்பவனாகிய அந்த நந்த கோப நாராயணனே! எங்களுக்கு கணவராக வர வேண்டும் என்று, சிவபெருமானை என் ஏழு பிள்ளைகளையும் பெற்றெடுத்த நாள் முதல் தவநிலையில் நின்றார்கள்.

ஆண்டுகள் பல கடந்து சென்றதால் கன்னிமார்களுக்கு தலை முதல் கால் வரை மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கும் விதத்தில் ஆலமரத்து விழுதுகள் அடர்ந்து, படர்ந்து, அசையவிடாமல் தவநிலையில் இருந்தவர்களை மூடிக் கொண்டது. அவர்களின் கருங்கூந்தல் முடியானது மிகவும் வளர்ந்து இருந்ததால், தரையில் உள்ள மரத்தின் வேருடன் மண்ணுக்குள் புதைந்து மறைந்துவிட்டது. அவர்களின் உண்மையான தவநிலையை

உச்சக்கட்டத்தை தாண்டி முக்தி நிலையை எட்டியது. இப்படி உயர்ந்த தன்மை கொண்ட தவநிலையின் மகிமை, மேல்லோகமாகிய கைலாயத்தையும் எட்டியது.

சான்றோரைப் பெற்ற சப்த கன்னியர்கள் பிடிவாதமாகக் கடும் தவம் செய்த தால், அவர்கள் நினைத்தபடி நிறைவேறும் நாட்கள் நெருங்கியது. உறுதியான முறையில் நல்ல மனநிலையோடு, மனந்தளராமல் செய்த அவர்களுடைய தவத்தின் தன்மையானது பாண்டவர்களின் தம்பியாகிய வில்லுக்குச் சிறந்த விஜயனான வீர அர்ச்சுனன் செய்த கடும் தவத்தை விட சப்த கன்னிமார் செய்த தவம் இருபது மடங்கு அதிகமானத் தன்மை பெற்று இருந்தது.

பொன் இலங்கையாகிய இராவணனின் கோட்டையில் சிக்கித் தவித்த சீதை, விஷ்ணுவை நோக்கி செய்த தவத்தை விட இரண்டு மடங்கு அதிக சக்தி வாய்ந்ததாக இருந்தது. சிலைகள் போல் நின்ற அவர்களுடைய தவநிலையின் சாதனையை ஏடு எடுத்து எழுதினால் ஏட்டுக்குள் அடக்கி விட முடியாது. எவராலும் தாங்க முடியாத படி மிகப்பெரிய சாதனை புரிந்து செய்த தவத்தை, எதிர் கேள்வி கேட்க முடியாத அளவில், சிறப்பாக முக்தி நிலை அடைந்தது.

பராசக்தியாகிய பார்வதியும், தானாக ஆகி கைலாயத்தில் இருக்கும் சிவபெருமானும், முக்தி அருளும் மகாவிஷ்ணுவும் அனைத்து உயிர்களைப் படைக்கின்ற பிரம்ம தேவனும் ஆகிய மூவரும் தவத்தின் பலமான சக்தியை நன்றாக உணர்ந்து கொண்டார்கள். ஆனால் இரக்கம் உள்ள அன்னை பார்வதி, மும்மூர்த்திகளிடம் கூறுகிறார்கள், ஈஸ்வரரே! அரிகோணமாமலையில் அயோகவனத்தில் சப்த கன்னிமார்கள் ஏழு பேர்களும் கடுந்தவம் செய்தபடியால் அவர்கள் தவம் நிறைவேறி, தன்மானத்தை தைரியமாக செயல்படுத்திய பெண்களின் மனம், தளர்ந்த நிலையில் காணப்படுகிறது. என்னைப் போல் பெண்ணல்லவா? சுவாமி!

என்னால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. பெண்பாவம் பொல்லாதது . ஆகையால் நாம் இருவரும் பூலோகம்

சென்று அவர்களுக்கு அருள் கொடுத்து ஆறுதல் கூறுவோம் என்று கூறினாள். உமைய பார்வதி இவ்வாறு உயர்ந்த குணத்தோடு உள்ளம் நெகிழ்ந்து, உடையவரான சிவபெருமானிடம் உரைத்தாள். அது கேட்ட சிவன், முப்பத்திரெண்டு அறநெறிகளை வளர்த்து பார்வதியின் பக்க துணையாகிய பரமன் பதிலுரைப்பார். நல்ல முடிவு எடுத்தாய் பார்வதிதேவியே!

தேவி நீ நன்மையான செயல் புரிய எண்ணம் கொண்டதால், அந்த பெண்களுடைய தவத்தைக் கண்டு வர வேண்டும் ஆனால், முக்தி நிலையை கொடுத்து அருள் புரியும் நாராயணரும் நம்மோடு அங்கே வர வேண்டும் என்றார். சிவபெருமான் கூறியதைக் கேட்ட சிவகாமசுந்தரி தன் அண்ணராகிய நாராயணருடைய திருவடிகளை வணங்கி சொல்வாள் என் அருமை அண்ணரே! அகில உலகத்தையும் ஆளும் ஆதிநாராயணரே! காருண்ய மூர்த்தியே! கானகத்தில் ஏழு கன்னிமார்களும் உம்மை அடைவதற்கு சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து. பலகாலம் ஆகிவிட்டதால் களைப்பு உண்டாகி சோர்ந்து போனார்கள்.

சிவசிவா, அவர்களுடைய சிறப்பான தவத்தைப் பற்றி சிந்தித்ததும் பார்க்க இயலாது. சொல்லவும் முடியாது. நாம் மூவரும் சென்று அவர்களைப் பார்த்து, அவர்களுக்கு அருள் புரிய வேண்டும். அவர்கள் கேட்கின்ற அத்தனைக்கும் 'ஆம்' என்று சம்மதம் சொல்லி அருள்கொடுக்க வேண்டும், என்றுப் பார்வதி நாராயணயணரும், பார்வதியுமாய் புறபட்டார்கள்.

பார்வதி தேவி பாசமுடன் அழைத்ததால், ஆதிசிவனும், ஆதிநாராயணரும் ஆவல் கொண்டவர்களாய் புறப்பட்டு, தாயாகிய அம்மை உமையாளோடும், தெய்வ கணங்களாகிய பெண் அரம்பையர்களோடும் சென்றார்கள். மனதில் எந்த குழப்பங்களும் இல்லாமல் நம்மை செய்ய வேண்டும் என்றால் எண்ணத்தோடு புறப்பட்டு வனத்தை நோக்கி நடந்தார்கள். இம்மூவரும் நடந்து அயோகவனத்தில் வருவதைக் கண்டு தவநிலையில் இருந்த ஏழு கன்னிமார்களும் பக்தியால் கண்களில் நீர் மல்க பரவசம் அடைந்தார்கள்.

தன்னைப் போல் பெண்ணாகிய அம்மை உமையைக் கண்டு அன்பால் ஆரத் தழுவி கட்டிப் பிடித்து தன் உடலோடு அனைத்துக் கொண்டு, அம்மா! தாயே! நாங்கள் திருகைலாய மலையில் உங்கள் திருவடி மலர்ப் பாதங்களை தொட்டு வணங்கி பணிவிடைகள் புரிந்து பல காலங்கள் ஆகி விட்டதே! வாருங்கள் தாயே! பொறுமையுள்ள சக்தி தேவி! எங்களை கண்ணின் மணி போல் காக்கும் கருணை உள்ளம் கொண்ட தாயே! பெண்குலத்திற்கு பேரருள் புரியும் ஆதி பராசக்தியே! அன்னையே! எங்களை ஒதுக்கித்தள்ளிவிடாமல் தாயாய் வந்து காப்பாற்றி எங்களை குழந்தைகள் போல் ஏற்று கருணை காட்டும் அம்மா!

எங்களுக்கு ஆறுதல் தந்து அரவணைக்க வேண்டும், ஆதி தேவியான அம்மா! நாங்கள் உங்கள் அடிமையல்லவோ தாயே! எங்கள் கற்பு நெறிக்குக் களங்கம் ஏற்படாதவாறு காத்து அருள் புரிய வேண்டும் காமாட்சியே! கைலாயம் வரமுடியாமல் எங்களை பூலோகத்தில் இருக்கச் செய்தார்களே அம்மா! நாங்கள் இல்லாமல் எப்படி தனித்து இருந்தீர்கள் தாயே! உங்கள் திருவடிக்கு சேவைச் செய்ய முடியாதவர்களாய் ஆகிவிட்டோமே! மேலும் உங்கள் சேவடி தொண்டுச் செய்ய தொடர வேண்டுமானால் எங்கள் விதியை மாற்றியமைக்க சிவபெருமானால் தான் முடியும்.

எங்களுடைய விதி ஆதிசிவன் கையில் தான் உள்ளது. உண்ண உணவும், உடுக்க உடையும் இல்லாமல் வருந்துகிறோமே! அறநெறிகளைப் பின்பற்றாத அற்பர்கள் போல் ஆகிவிட்ட எங்களை, நீங்கள் தான் காத்து அருள் புரிவீர் என்ற நம்பிக்கையில் தவம் இருந்தோம் தாயே! ஆனால் எங்கள் கற்புக்கு களங்கம் ஏற்பட்டதைக் கண்டும், காணாதது போல் கவலை இல்லாமல் இருந்து விட்டீர்களே தாயே!

இது என்ன நியாயம்? சொல்லுங்கள் தாயே! என்றாவது என் அப்பன் ஈசனுக்கும், என் அம்மை உமையாளுக்கும் பணி விடைகள் செய்யாமலும், உங்கள் வார்த்தைக்கு மதிப்பளிக்காமலும் தவறுகள் செய்தோமா தாயே! படைத்த சிவனாரின் சட்டத்திட்டப் படி நடக்காமல் கடமை,

கட்டுப்பாடுகளை மறந்து நடந்தோமா அம்மா! அல்லது உங்களுக்குச் செய்கின்ற பணிகளை மறந்து பூலோக வாழ்க்கை வாழ வேண்டும் என்று தான் ஆசை கொண்டோமா? உங்கள் எண்ணப்படி நாங்கள் வாழ தவறி விட்டோமா? இல்லை காராபசுவைக் கொன்றப் பாவத்தை ஏற்றோமா? சொல்லுங்கள் அம்மா! சொல்லுங்கள்.

அப்படி தவறுகள் புரிந்திருந்தாலும், எங்களை மன்னித்து அடிமைகளாகிய எங்களுக்கு அருள் புரிய வேண்டும் தாயே! என்று, பலவாறு மனமுருகி சப்த கன்னிமார்கள் சரணடைந்தார்கள். கன்னிமார்கள் பணிந்ததும் பாசமுள்ள பார்வதி, முப்பத்திரெண்டு அறங்களுக்கும் தாயாக விளங்குகின்ற ஆதிபராசக்தி கருணையோடு, நடப்பது எல்லாம் நன்மைக்குத் தான் கன்னிமார்களே! கலங்காதீர்கள்! உங்கள் நியாயத்தை சிவபெருமானிடம் சொல்லுவோம் வாருங்கள், என்று கன்னிமார்களை அழைத்துக் கொண்டு, பார்வதி சிவபெருமான் முன்பு வந்து, சகல வல்லமையும் பொருந்திய ஈசனே!

சப்த கன்னிமார்களின் தவநிலைக்கு முக்தி கொடுத்து, ஆதரிக்க வேண்டும் அவர்களின் தலைமுடி தரையில் வேருடன் மூழ்கி விட்டதால் தத்தளித்து நிற்கின்றனர். அவர்களின் தயக்கத்தைப் போக்க, கார்குழலை விடுவித்து காப்பாற்று வேண்டும் சுவாமி! ஏழு கன்னிமார்களையும் மறுபடியும் கைலாயத்திற்கு வரவழைக்க வேண்டும் ஆதிபரம் பொருளே! என்று பரிந்து வேண்டினாள் அம்மை உமையவள். சத்தியாகிய பார்வதி சொன்னது கேட்ட சிவபெருமான் மனம் இரங்கிச் சம்மதித்தார்.

ஆலமரத்தின் விழுதுகளுடன் மண்ணில் புதைந்து இருந்த தலைமுடியை விடுவித்து, கிழைகளால் சூழப்பட்டு நின்ற ஏழு கன்னி மார்களையும் வெளியில் மீட்டு எடுத்து, அவர்களின் தவ வலிமையை சிவபெருமான் பாராட்டி கன்னிமார்களுக்கு அருள் புரிய எண்ணினார். பல காலமாக தவநிலையில் இருந்தவர்களை விடுவித்து தன் அருகில் அழைத்தார் ஏழு கன்னிமார்களும் தவநிலையை விட்டு வேதநாயகனான சிவன், விஷ்ணு, சக்தி ஆகிய மூவரையும் தரையில் படுத்து சாஷ்டாங்கமாக

நமஸ்காரம் செய்து உருக்கத்தோடும், பணிவோடும் வேண்டி நின்றார்கள்.

விலையுயர்ந்த பொருட்களை ஏற்றி வந்த கப்பல் கரைக்கு வந்து சேர்ந்தால் மனம் எவ்வளவு இன்பம் கொள்ளுமோ அதுபோலவே படைக்கும் பரம் பொருளையும், காக்கும் கரிய மாலையும், ஆதரித்து அருள் கொடுக்கும் அன்னையையும் கண்டு, சப்த கன்னிமார்கள் அளவில்லா ஆனந்தம் அடைந்தார்கள். அனைத்து ஆசையால் மனமகிழ்ந்து பார்வதி தேவியை முத்தமிட்டுக் கொண்டாடினார்கள். போற்றி பாடி மகிழ்ந்தார்கள்.

கன்னிமார்கள் ஏழு பேரும் ஓடிச்சென்று மறுபடியும் சிவபெருமாளையும், திருமாலையும் மும்முறை வலம் வந்து வணங்கினார்கள், தெய்வலோகப் பாடலைப் புகழ்ந்து பாடினார்கள். சிவபெருமானை பற்றிப் புகழ்கிறார்கள், சிவமே! மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டமும் நீயே! மறை நான்கும் நீயே அடியும் முடியும் காண முடியாமல் அண்டமெல்லாம் நிறைந்தவன் நீயே! மதியும் நீயே! ரதியும் நீயே!-புனலும் நீயே!-அனலும் நீயே! பெண்ணும் நீயே!-ஆணும் நீயே-பல்லுயிர்க்குயிரும் நீயே பிறப்பு இறப்பு அற்றவன் நீயே! - பேதா பேதம் அற்றவன் நீயே! தாயும் தந்தையும் நீயே-பொன்னும் பொருளும் நீயே! இருளும் ஒளியும் நீயே! போதிக்க வந்த குருவும் நீயே! எண்ணற்ற ஜீவகோடிகளின் அப்பனே! எங்கள் குறைகளை யாருக்கு உரைப்போம், ஈசனே! சிவகாமி நேசனே! எங்களை ஈன்ற கைலை வாழ் நடராஜனே! என்று போற்றிப் பாடி, திங்கள் முடிசூடும் ஈசன் திருப்பாதம் பணிந்தார்கள். கங்கையினை சிரசில் அணிந்த ஈசனே! எங்களை கருணையுடன் காத்து, கதியருள வேண்டும் என்று வேண்டினார்கள்.

சக்தியைப் போற்றுகிறார்கள்! சந்தன மயிலே போற்றி! சண்முகன் தாயே போற்றி! சிவனார் துணையே போற்றி ! சிவசுப்ரமண்யன் தாயே போற்றி! உலகெலாம் தாய், தந்தை என்று வலம் வந்த கணபதியின் தாயே போற்றி! ஞானப்பழத்தைப் பெற்ற வேழ முகத்தவன் அம்மே போற்றி! மூல முதல் பொருளாம் கணபதியை ஈன்ற தேவி போற்றி என்று, அம்மை உமை பார்வதியை போற்றிப் துதித்தார்கள்.

கார்முகில் வண்ணன், கமலக்கண்ணனை கண்டதும் போற்றுகிறார்கள்.

நந்தகோபாலா! நாராயணா! உம்மை போற்றுகிறோம்! அமுதம் எடுத்த மோகனனே, எங்கள் அச்சம் தீர்க்கும் ஆரமுதே! குமுதம் போன்ற விழியாலே எங்கள் குறைகள் தீர்ப்பாய் திருமாலே ஏகமூர்த்தியாய் நிற்பவனே! எங்கள் குலத்தின் நாயகனே! நாகத் தலையில் துயில் பவனே! நாராயணரே போற்றுகிறோம்! மலையைக் குடையாய் ஏந்தியவா! மக்களைக் காத்த அற்புதமே!கடல் அலைமேல் தூங்கியவா! ஆறுதல் தருவாய் அச்சுதரே! எங்கள், மனமே கோயில், அதில் வருவாய்! கருணா ரசமே திருமாலே! கோகுலம் காத்த கோபாலா! நாங்கள் தாவி அணைக்க வருவாயே! என்று மூல முதல்வர்கள் மூவரையும், தனித்தனியாய் வர்ணித்து புகழ்ந்து பாடினார்கள்.

மேலும் திருமாலவரை அவர்களின் உறவுமுறை என்று எண்ணி, கணவன் முறையாக்கி புகழ் உரை உரைக்கிறார்கள். எங்கள் சிந்தையில் இருக்கும் என் கணவரே! என்று சிவசிவா அரகரா என்ற நாமம் சொல்லிப் போற்றினார்கள். மாதவனே உம்மைப் போற்றுகிறோம்! பிரம்மானால் கூட உமது எல்கையை காண முடியவில்லை. அடியையும், முடியையும் கண்டு, ஆதிசிவனைத் தழுவியவா! உம்மைப் போற்றுகிறோம். நீதம் இல்லாமல் நிந்தித்து நிஜரூபம் மறைத்து சித்து வேலை செய்த சித்தா உம்மைப் போற்றுகிறோம்!

மாதவனே! மானத்தைக் கெடுத்துப் பாதகம் செய்த மாய பச்சை மாலே, என் கணவா! போற்றுகிறோம்! மும்மூர்த்தியாலும் காண முடியாத முதற் பொருளான தெய்வலோக அதிபதியே! உம்மைப் போற்றுகிறோம். பொன்னு மாலை வாழும் பொற்பதமே, மணி மகுட மாணிக்கமே போற்றுகிறோம்! ஆளில்லா அயோக வனக் காட்டிலே கற்பழித்து கைவிட்ட வல்லவரே! உம்மைப் போற்றுகிறோம். அக்கினியால் ஆவி அனைத்து அதிசயக் கருவை உருவாக்கியவரே! உம்மை தவமாய் தவம் நின்று உம்பாதம் பணிந்துப் போற்றுகிறோம்.

அடியவர்களாகிய எங்களை அமிழ்த வனத்தில் கன்றை இழந்த பசுவைப் போல் தவிக்க விட்டு அலையச் செய்தவரே! உம்மைப் போற்றுகிறோம். உண்ண உணவின்றி, உறக்கம் இன்றி, ஊமை கண்ட கனவு போல், வெளியில் யாருக்கும் சொல்ல முடியாமல், கற்பை இழந்த நாங்கள் உம்மைப் போற்றுகின்றோம். மனவேதனையைத் தீர்க்க மனமிரங்கி வந்து கவலை தீர்த்து, கண்ணீர் துடைக்க வர வேண்டும் அய்யா என்றுப் பணிவோடுப் போற்றுகிறோம்!

கழங்கம் போக்கி கனிவோடு மறக்காமல், மீண்டும் எங்களை கைலாயத்திற்கு அழைக்க வேண்டாம் என்று, உம்மிடம் வேண்டுகிறோம். நாங்கள் பெற்ற ஏழு பிள்ளைகளையும், ஏழு பேரின் சந்ததிகளையும் தந்தருள வேண்டும் என்றுப் பணிகிறோம். சான்றோர்க்கு சான்றோராக இருக்கும் திருமாலே! எங்களை திருமணம் முடிக்க வேண்டும் என்று உம்மைப் பணிகிறோம். மரணமில்லாத மறை வேத முதல்வனே! பூலோகத்தில் பூரிப்போடு வாழ, வரம் தந்தருள உம்மைப் பணிகிறோம் என்று இறஞ்சி வேண்டினார்கள்.

சிவனிடம், உலகத்தைப் படைத்த பரம்பொருளே! ஆனந்தத் தாண்டவம் ஆடினவரே! உண்மையும், சத்தியமும் மாறாத மனத்தோனே! மூலஸ்தலமாகிய பொன்னம் கைலையை இருப்பிடமாக்கி இருப்பவரே! மனம் இரங்க வேண்டும். தூண் போன்று உலகத்தைத் தாங்கிப் பிடித்து இருக்கின்ற வலிமையான ஆதியும், அந்தமும் இல்லாமல் நிற்பவரே! அனைவர்க்குள்ளும் ஒடுங்கி இருப்பவரே! சிவபெருமானாகிய தவப்பொருளே! எங்கள் துயரங்களை இல்லாமல் ஆக்கி, நாட்டு மக்களைப் போல் நாங்களும் எங்கள் மக்களோடு சேர்ந்து பூலோகத்தில் புனிதமாய் வாழ வரம் தாரும்.

நாங்கள் பெற்றெடுத்த ஏழு ஆண்பிள்ளைகளையும், அவர்கள் வம்சாவழி மக்கள் அனைவரையும், கொத்தும், கொடியுமாய் பூத்துக்குலுங்குவது போல், சான்றோர் இனத்து மக்கள் அனைவரையும் கைவிடாமல் அரவணைத்து, அவர்களோடு எங்களையும் அடைக்கலமாக்க வேண்டும். முன்பு அரிகோண மலையில் அலைய வைத்து தவிக்கும் படி செய்து, பண்டார

வேடமிட்டு வந்த திருமாலின் திருவடிகளைக் காண அவரோடு நாங்கள் கன்னியர்களாகக் சேர்ந்து வாழவும், அவருடைய திருப்பாதங்களுக்கு பணிவிடைகள் செய்து வழிபடவும், அன்றாடம் அவரோடு இருக்க.அறநெறி தவறாத சிவபெருமானே வரம் தாரும் என்றார்கள்.

சப்த கன்னிமார்களின் வேண்டுதலைக் கருணையோடு கேட்ட சிவபெருமான், நாராயனிடம் கூறுகிறார், மைத்துனரே! இந்த கன்னிமார்களின வேண்டுகோளுக்கு இணங்கி மறுக்காமல் அருள்புரிய வேண்டும். அவர்கள் வரம் கேட்கும் விதத்தைப் புரிந்து அதற்கு நீர் சம்மதித்து, விரும்பிய படி வரம் கொடுத்தருளும் என்றார் சிவன். சிவபெருமான் வாக்குறுதி கொடுத்ததை உணர்ந்த திருமால் மறுக்க முடியாமல் பதில் கூறுவார், மைத்துனரே! அவர்கள் கேட்டவரங்கள் எல்லாம், அவர்கள் பாதுகாப்போடு வாழ உதவும் வரங்கள் தான்.

பூலோக வாழ்க்கை வாழ ஆசைப்பட்ட இவர்களுக்கு நான் கட்டாயம் வரம் கொடுக்க வேண்டும். அதற்கு நீர் எனக்கு பக்கதுணையாக இருக்க வேண்டும். என்று சொல்லி விட்டு, கன்னிமார்களைப் பார்த்து திருமால், மழலை மொழி பேசும் மடந்தையர்களே! அயோக வனத்தில் உள்ள அமிழ்த கங்கையில் நீராடிவிட்டு, உங்கள் கற்பின் மகிமையால் கங்கைநீரைகையில் சுருட்டி சிவபெருமானுடைய திருமுடிக்கு அபிஷேகம் செய்துப் பக்தியோடு அன்பாய் வழிபட்டீர்கள்.

அப்படியே நாள் தவறாமல் வழிபட்டு வருகின்ற போது, நீங்கள் கைலாய மலைக்கு கொண்டு செல்கின்ற அமிழ்த கங்கை நீரை இன்று ஒரு நாள் மட்டும் என் தலையில் ஊற்றி அபிஷேகம் செய்யுங்கள் என்று சாதரணமாய் தான் சொன்னேன். அதற்கு நீங்கள் ஆணவத்தால் அறிவிளந்து முடியாது, ஏகமயமாய் இருக்கின்ற எங்கள் ஈசனுக்குத் தான் நாங்கள் அபிஷேகம் செய்து பணிவிடைகள் புரிவோமே தவிர, மாயத் தந்திரமான முறையில் செயல்படும் மாயப் பெருமாளாளுக்கு கூடப் பணி விடைகள் செய்ய மாட்டோன் என்று இறுமாப்புடன் பேசினீர்கள் அல்லவா?

நீங்கள் என்னை அவமானப் படுத்தும் விதமாக மறுப்புத் தெரிவித்தவுடன், நான் உங்களுக்குப் பாடம் புகட்ட வேண்டும் என்று, இனி நீங்கள் கங்கை நீரை திரட்டுவதைப் பார்ப்போம் என்று சவால் விட்டு, அக்னியாக காட்சி தந்ததும், குழந்தைகளுக்கு தகப்பன் ஆனதும் நடந்து முடிந்து விட்டது. ஒரு தடவைதானே அபிஷேகம் செய்யுங்கள் என்றேன் கேட்கவில்லை. கற்பை இழந்தீர்கள், என்று நடந்ததை எல்லாம் திருமால் வரிசைப் படுத்தி எடுத்துக் கூறினார். அதைக் கேட்ட கன்னிமார்கள் வெட்கம் கொண்டு, திருமாலை நேரில் பார்க்காமல், நாணயத்தால் குனிந்து நின்றார்கள்.

அதைக் கண்ட திருமால் கபடமாக புன்னகைச் செய்து அவர்களைப் பார்த்து, என் அன்புக்கும் , பாசத்திற்கும் உட்பட்ட மனைவியர்களே! அழகிய சிற்பங்களைப் போல் ஆடாமல், அசையாமல் நிற்கின்ற காவிய ஓவியங்களே! நாணம் வேண்டாம், நான் சொல்லுவதைக் கேளுங்கள். அமிழ்த கங்கைக்கரையில் நீங்கள் பெற்ற ஒரு பிள்ளைகளும் பூலோகம் எங்கும் பல்கி பெருகி விட்டார்கள்.

குழந்தைப்பருவத்தில் வானலோகத்து தேவர்கள் அருந்து கின்ற தேவேந்திரனுடைய காமதேனுவின் பாலை அருந்தியே வளர்ந்தார்கள் கவலை வேண்டாம்! குழந்தைப்பருவத்தைக் கடந்து, பெரியவர்களாய் ஆனதும், திருமணப் பருவத்தை அடைந்து, திருமணமும் முடித்து, அரசப் பதவியும் ஏற்றனர். நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் போது, சோழ மன்னனின் கொடிய சூழ்ச்சியினால், கேடு சூழ்ந்தது போல் இரண்டு மகன்களை கொடும்பாவி கொன்று விட்டான்.அதன் பிறகு வாழ்ந்த சான்றோர்கள் துயரம் மிக்கவர்களாய் காணப்பட்டார்கள். அதன் பிறகு அவர்களை கலிநீச மன்னன் அடக்கி ஆண்டான்.

அப்போது சான்றோர்கள் கலிநீச மன்னனுக்கு காவலர்களாக இருந்தார்கள். அந்நேரம் ஏற்பட்ட தவறுதலான சம்பவத்தால் தான் மன்னன் சாபமிட்டான். அந்த சாபத்தில் மிகவும் சஞ்சலப் பட்டவர்களாய், கலிக்குள் அகப்பட்டு மீள முடியாமல் ஆனார்கள். மன்னனுடைய கொடுமைகள் தாங்க முடியாமல் மனம் வாடி

மெலிந்தார்கள். சான்றோர்கள் அடிமைகள் போல் அல்லும், பகலும் அவதிபட்டு அநியாய வேலைகள் செய்து கொடுத்தாலும் பாவி மன்னர் திருப்பி அடைய மாட்டான்.

அரச பரம்பரையில் பிறந்து வாழ்ந்த நமது மக்கள் கலியின் பெருமையால் கூலி ஆட்களாக மாறி, ஏச்சும், பேச்சும், அடியும், உதையும் வாங்கி ஆதரவு அற்ற அனாதைகள் போல், நாடோடிகளாய் அடிமை வேலை செய்து வாழ்கின்றார்கள். யாரிடம் போய் சேர்ந்தால் நிம்மதி கிடைக்கும் என்று அறியாமல் ஏங்குகிறார்கள். நம் மக்களுக்கு சான்றோர்களின் தகப்பனாக நான் இருக்க, அவர்களைப் பெற்றெடுத்த தாயாக நீங்களும் இருக்கும் போது, தட்டிக் கேட்க தாய், தகப்பன் இல்லா அனாதைகள் என்று இழிவாக எண்ணிய நீசர்கள் அடிமைப் படுத்தி, கொடுமைகள் செய்கிறார்கள்.

பெற்ற தாயாகிய நீங்களும் இவ்வளவு காலமும் தவநிலையில் நின்று விட்டீர்கள் தகப்பனாகிய நானும் இவ்வளவு காலமும் நிலை இல்லாமல் பரதேசியைப் போல் ஒவ்வொரு இடமாக அலைந்து திரிந்து நாட்களை கழித்து விட்டு, இப்போது தான் இங்கே வந்தேன்.நம்முடைய பிள்ளைகளாகிய சான்றோர்களின் கவலையையும், கண்ணீரையும் பார்த்து ஆறுதல் கூறி, துயர்துடைப்பவர் யாரும் இல்லை. அவர்கள் துயரத்தைப் போக்கி, காப்பாற்ற பூலோகம் சென்று விசாரிக்கலாம் என்றால், இந்த உருவத்தோடு என்னால் அங்கே செல்லமுடியாது.

அப்படிச் சென்றால் இந்த மாயன் உடலை அந்த மாயக்கலி பிடித்துக் கொள்ளும். பொய் சொரூபத்தில் உடலை வைத்துக் கொண்டு, பொய் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்ற அவனுக்குள் சிக்கி விட வேண்டியது தான் என்றார். இப்படியாக கலியுகத்து கலியனுடைய தன்மைகளைப் பற்றி எம்பெருமான் நாராயணர் கூறியவுடன் தெய்வ கன்னியர்கள் கேட்டு, ஓவென்று அலறியழுதார்கள். அய்யா மாயப் பெருமானே! காப்பாற்றும் கடவுளா இப்படி பேசுவது. நிழல் தரும் மரம் ஒதுக்கி நிழல் தர மறுத்தால் எங்கு சென்று இளைப்பாறுவது. சுனை நீர் வற்றிப்போனால் தாகம் தீர்ப்பது எவ்வாறு.

சூரியன் ஒளி வீசவில்லையானால் உலகம் இருண்டு போய் விடுமே! சூரியனுக்கே ஒளி கொடுக்கும் திருமாலா பேசுவது, என்று தலையில் அடித்துக்கொண்டு, தரையில் விழுந்து, அழுது புலம்பினார்கள். கல்லும் கரைந்துவிடும் அளவுக்குக் கட்டுப்படுத்த முடியாதபடி கதறி அழுதார்கள். கவலை கொண்ட கன்னிமார்களில் ஒருத்தி கூறுவாள், இது எல்லாம் நமது சுய கௌரவத்தில் வந்த வினை. முடவன கொம்புத் தேவனுக்கு ஆசை கொண்டது போலானது நமது கதை! என்று முடவனின் கதையை கூறுகிறாள்.

[கூன் வளைந்து, காலும் ஊனம் கொண்ட முடவன் மனதில் வேதனையோடு தன் குறையைப் போக்க எண்ணி காடு நோக்கிச் சென்றான். காட்டில் ஒரு ரிஷி தியானத்தில் அமர்ந்திருந்தார். அந்த ரிஷியின் முன்னால் சென்று, அய்யா முனிவரே! என்னை ஊரில் உள்ள அனைவரும் ஏய் முடவா! முடவா என்று கூறி கேலி செய்கிறார்கள். அதை என் செவிகளா கேட்கும் போது மிகவும் கவலையாக இருக்கிறது. ஆகையால் தவமுனிவரே! உமது தவவலினையால் என் கால் ஊனத்தையும், என் முதுகில் உள்ள கூனையும் மாற்றித் தர வேண்டும், என்று வணங்கினான்.

தியானத்தில் இருந்த ரிஷி கண் திறந்து பார்த்தார். இது பரிதாபமானது தான், என்று மனதில் எண்ணிக் கொண்டு, முடவனைப் பார்த்து அப்பனே! இந்த ஊனத்தைப் போக்க வேண்டுமானால் வடகைலாய செல்ல வேண்டும். அங்கே சென்று தேவர்களிடம் இருக்கின்ற அமிர்தத்தைப் பெற்று அருந்துவாயானால் உனது உடலில் உண்டான கூன் நிமிர்ந்து விடும், கால் ஊனமும் மாறி நன்றான உடல் கட்டைப் பெறுவாய் என்றார்.

கூன் வளைந்து, கால்களும் ஊனமாய் அமைந்த நிலையில் இருந்தவன் மிகவும் சிரமப்பட்டு, கைலாயம் சென்று தேவர்களிடம் தன் நிலையைச் சொல்லி வருந்தினான். அவனிடம் இரக்கம் கொண்ட தேவர்கள் அவனின் நிலைமையைக் கண்டு பரிதாபம் கொண்டு தேவாமிர்தத்தைக் கொடுத்தார்கள். முடவன் தேவாமிர்தத்தைப் பெற்று கொண்டு, ஆனந்தத்தில் மகிழ்ச்சி பொங்க பூலோகம் வந்தான். வரும் வழியில் களைப்பைப் போக்க

ஒரு பெரிய மரத்தடியில் அமர்ந்து, என்ன வெயிலின் கொடுமை என்று மரநிழலின் சுகத்தில் களைப்பைப் போக்கி; அப்பப்பா! இனிய சுகம், எவ்வளவு பெரிய மரம் என்று மேலே பார்த்தான்.

மரக்கிளையில் கொம்புத்தேன் இருக்கக் கண்டான். தேனல்லவா? ஆசை கொண்டான். மரத்தின் அருகில் சென்று உந்தி, உந்திப் பார்த்தான். அதைக்கண்ட வழிபோக்கள் ஒருவன், டேய்! உன் உடலோ ஊனம் கொண்டது. நீ மரத்தின் மேல் ஏறி கொம்புத் தேனை எப்படி எடுக்க முடியும் என்றான். முடவனுக்கோ ஆணவம் அதிகரித்தது. அவன் வழிப்போக்கனை பார்த்து அடபோயா! நான் கைலாயம் சென்று தேவாமிர்தம் வாங்கி வந்தவன்.

உன்னால் முடியுமா? நான் கைலாயம் சென்றவன், இந்த மரத்தில் ஏறமாட்டேனா? தேனை எடுத்துக் கொண்டு வந்து அமிர்தத்தில் அதைக் கலந்து சாப்பிடுவேன். என் கால் ஊனம் மறைந்துவிடும். கூனும் நிமிர்ந்து போய்விடும். உன்னை விட நான் தான், நன்றாக நடந்து செல்வேன். வேண்டுமானால் சற்றுப் பொறுமையாய் இருந்து என்னை நன்றாகப் பார்த்து விட்டுப்போ என்று கேலியாக சிரித்துக் கொண்டு, மரத்தின் அடியில் தேவாமிர்தத்தை வைத்துவிட்டு, தத்தித் தத்தி மரக்கிளையைப் பிடித்து பெரும் கஷ்டப் பட்டு தாவி ஏறினான்.

ஆனால் பாவம் முடவனின் துரதிர்ஷ்டம் அங்கொரு கரடி மரத்தில் இருந்த தேனை எடுத்து, ருசித்துக் பருகிக் கொண்டிருந்தது. மரக்கிளைகளில் இலைகள் அடர்த்தியாகப் பார்த்திருந்ததால் முடவன் கரடியைக் கண்டதால் பயந்து நடுக்கத்தால் தவறி கீழே விழுந்தான். கிளைகள் அடர்த்தியாக இருந்ததால் உயிர் தப்பினான். பாவம் பலமான அடி. ஆனால் மரத்தடியில் வைத்திருந்த தேவமிர்தத்தை வழிப்போக்கன் சாப்பிட்டு விட்டான். காலும் சரியில்லை, முடவனுக்கு காலமும் சரியில்லை. என்ன செய்வான் பாவம்.

தேவாமிர்தத்தை வழிப்போக்கன் சாப்பிட்டு விட்டு, வலியில் துடித்த முடவனைப் பார்த்து, முடவன் சொன்னது போல் பதிலுக்கு வழிப்போகனும் கிண்டலாக என்னைப் பார் என்று கூறி, நளின புன்னகைப் புரிந்து சென்றான். கொம்புத் தேனுக்கு முடவன்

ஆசைப் பட்டதால் தேவாமிர்தத்தை இழந்தான். ஊனமும் மாறவில்லை, கூனும் நிமிரவில்லை. வேதனை அடைந்தான். இது தான் முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் பட்ட கதையாகும். கிடைத்ததைக் கொண்டு சிறப்படையாத முடவன் ஆணவமும், பேராசையும் கொண்டதால் வந்த விளைவு இது.

நாமும் நம்மைக் காப்பாற்ற வேண்டும். கற்பை இழந்ததால் எல்லோரும் இழிவாக தூற்றுவார்களே! என்று தம்மை மறைத்து கொள்ள வேண்டும் என்ற சுய நலத்தால். தன், மானத்தைக் காக்க தற்பெருமை கொண்டு தவ நிலையில் நின்றோம். நமது குறை போக்க தவநிலையில் நின்றதால், நமது இரண்டு பிள்ளைகளை இறப்புக்கு பலி கொடுத்தோம். பேணிக் காக்காமல் பிள்ளைகளைத் துறந்தோம் இவ்வாறு அன்பு மக்களையும் பாதுகாக்க மறந்து விட்டோமே என்று, ஏழு கன்னிமார்களும் செய்வதறியாமல் ஏங்கி அழுது கண்ணீர் சிந்தினார்கள்.

கதையில் வந்த முடவனைவிட மோசமானோமே! அவன் கொம்புத் தேனுக்கு ஆசை கொண்டு தேவமிர்தத்தைத் தான் இழந்தான். ஆனால் நாம் தேவர்களாக சிறந்து விளங்கி வந்த மகன்களை அல்லவா இழந்து விட்டோம். தெய்வச் சான்றோர்களை அல்லவா பிரிந்து தவிக்கிறோம், என்று கதறி அழுதார்கள். அய்யா தெய்வமே எங்கள் நிலை இதுதானா? நாங்கள் பெற்றெடுத்த ஏழு ஆண்பிள்ளைகளில் இரண்டு பேர்கள் இல்லை என்று சொல்வது உண்மையா? பொய்யா? சோழ மன்னர் கொன்று விட்டானா?

கற்பு நெறி தவறாத கன்னியர்களாக வாழ்ந்த எங்களுடைய கற்பை நீரல்லவா சீரழித்தீர் உம்முடைய முன்னதகளாய் ஞான அறிவோடு பிறந்தவர்களுடைய உயிரைப் பாதுகாக்காமல் ஏன் விட்டீர். அநியாயமாய் சாகக் கொடுத்தீரே! இது நியாயமா, மாயவரே! நாங்கள் முன் ஜென்மத்தில் செய்த பாவமா? இல்லை கர்மபலனா? அல்லது தாய் கற்பு நெறி தவறி விட்டதால் வந்த வினையா! இல்லை, எங்கள் தலைவிதியா? என்று தவித்தார்கள். நாங்கள் பெற்ற பிள்ளைகளை யானையை விட்டு வதைச் செய்துக் கொன்ற கொடிய சோழ மன்னனையும் அவனது ஆட்சியையும் உற்றார், உதவினர்களையும் அழிக்காமல் எங்கள் மனம் ஆறாது அய்யா!

கற்பு நெறி தவறாத கன்னியர்களாக வாழ்ந்த எங்களுடைய கற்பை நீரல்லவா சீரழித்தீர். உம்முடைய பிள்ளைகளாய் ஞான அறிவோடுப் பிறந்தவர்களுடைய உயிரைப் பாதுகாக்காமல் ஏன் விட்டீர். அநியாயமாய் சாகக் கொடுத்தீரே! இது நியாயமா, மாயவரே! நாங்கள் முன் ஜென்மத்தில் செய்தப் பாவமா? இல்லை கர்மபலனா? அல்லது தாய் கற்பு நெறி தவறி விட்டதால் வந்த வினையா! இல்லை, எங்கள் தலைவிதியா? என்றுத் தவித்தார்கள். நாங்கள் பெற்றப் பிள்ளைகளை யானையை விட்டு வதைச் செய்துக் கொன்றக் கொடிய சோழ மன்னனையும் அவனது ஆட்சியையும் உற்றார், உறவினர்களையும் அழிக்காமல் எங்கள் மனம் ஆறாது அய்யா!

பாவ தோஷங்கள் செய்தவன் பாதாள நரகம் போய் சேர வேண்டும். பிள்ளைகளைப் பெற்ற அன்று முதல் தவம் செய்தபடியால் கண்மணியான பிள்ளைகளைப் பார்க்காமல் பால் கொடுத்தும் வளர்க்காமல் எங்கள் காயாம்பூ மேனியில் இன்னும் பால்வாடை மாறவில்லையே அய்யா! நாங்கள் பெற்ற பிள்ளைகளை எட்டியும் பார்க்கவில்லையே! அந்த அளவில் மோசமான விதியை கர்ம பலனாய் எழுதி விட்டீரோ என்று அழுது கண்ணீர் சிந்தினார்கள்.

மதலைகள் முகம் பார்க்காத மனம் நொந்து, பெற்ற வயிறு பாழாய் எரிகிறதே! கண்மணிகளைக் காணாமல் கதிகலங்கி நிற்கிறோம். ஏழு பேர்களிலும் யார் வயிற்றில் பிறந்த பிள்ளை இறந்ததென்று யாமும் அறியோமே அய்யா! கோள் வார்த்தைக் கேட்டு கொடும்பாவி கொன்றானோ அய்யா! நெடியமால் விந்தில் உருவாகிப் பெற்றப் பிள்ளைகளைக் கொன்றவன் இன்னமும் மாளவில்லையோ! அவன் நரகம் போய் சேரவில்லையா மீண்டும் பிறந்தானா! பிறப்பில்லாமல் போனானா விவரம் அறியச் சொல்ல வேண்டும்.

அவன் ஆவிதனைக் கண்டால் ஆக்கினைகள் செய்திடுவோம். இறந்த எங்கள் மக்கள் மணமாகி மாண்டனரா? இளம் வயதில் மாண்டார்களா எங்களுக்கு அறிய உரையும் ஈஸ்வரரே! மனைவி இருந்திருந்தால் மனம் இடிந்துப் போயிருப்பாள். ஆடை,

அணிகலன்கள் அணிய மறுப்பார்களே! மங்கல தாலிச்சரடைக் கழற்றி எறிந்தாரோ தெரியலையே! என்று பலப்பல எண்ணங்கள் கொண்டு ஏங்கி துடித்தார்கள். கணவன் இறந்தால், கூட மடிவார்கள். ஆடைகளைக் களைவார்கள், அணிகலன்கள் துறப்பார்கள்.

தலையைச் சிரைப்பார்கள், வாழ்வை வெறுப்பார்கள், உணவை விரும்பார்கள். உற்ற துறவுக் கொள்வார்கள். இச்செயல்கள் எல்லாம் உமது அருளால் நடக்காமல் இருக்க, நல்ல புத்தியைக் கொடுத்து பெண்மணிகளைக் காத்தீரோ சிவனே! உமது கருணையால் எல்லோருக்கும் ஞான அறிவைக் கொடுத்து அவர்களுக்குப் பாதுகாப்பும் கொடுத்து காத்தீரோ அய்யா! என்ன நடந்தது என்று யாமறியோமே அய்யா! எல்லாம் அறிந்த சிவனின் உள் அடங்கும் என்பார்களே அய்யா! அது உண்மையா அய்யா! பேதைகள் அறிய உரைக்க வேண்டும், பரம்பொருளே! என்று அடிப்பணிந்து வேண்டினார்கள்.

மேலும் தாயாகிய பார்வதி தேவியிடம், கையில் வேல் ஏந்திய ஆதி சக்தித்தாயே! நீங்கள் எல்லோரும் எங்களைத் தேடி வனம் வந்தவுடன் எங்கள் வருத்தம் எல்லாம் தீர்த்து விடும் என்று நினைத்தோமே, பிறைநிலவைக் கண்டது போல் பேரின்பம் அடைந்தோமே தாயே! எங்களுக்குக் கணவராக அமைந்தப் பண்டாரக் கிழவன் கூறுவதைக் காதால் கேட்டால் தலை சுற்றுகிறது அம்மா! எங்கள் உள் உறுப்புகள் எல்லாம் உணர்ச்சிக் கெட்டு நடுங்குவதால் வாய் பேச முடியாமல் உளறுகிறது மாதாவே! என்றுப் பசியால் வருந்தியப் பாலர்களுக்கு ஞானப்பால் கொடுத்து ஞானமும் கொடுத்த அகிலாண்ட ஈஸ்வரியை, பணிந்து கூறுகிறார்கள்.

ஆதி சக்தியே! என்று தயக்கத்தோடு அழைத்து, அம்மா நாங்கள் அறியாமையால் எங்கள் இளமையான வாலிப வயதில் மகாவிஷ்ணுவின் மாயைக்குள் அகப்பட்டு, கற்பை இழந்த காரணத்தால் கதி கலங்கி நிற்கிறோம். அந்த அவமானத்தை மனதில் நினைத்து நிலை தடுமாறி, கண்கள் கலங்கி செய்வது அறியாமல், பெற்றப் பிள்ளை என்றும் எண்ணாமல், அமிழ்த கங்கைக் கரையில் போட்டு விட்டு, நேர்மைக்காக நின்றுப்

போராட முடியாமல், வெட்கத்தால் வாழ்க்கையை வெறுத்து தவத்தில் இருந்தோம்.

கொடும் பாவி சோழன் எங்கள் பிள்ளைகளை அடிமைச் செய்து பழி வாங்குவான் என்பதை அறியோமே என்று வருத்தம் மிகக் கொண்டு, அன்னை பராசக்தியின் பாதம் வருடி அழுதனர். எங்கள் வாழ்க்கையைப் பாழாக்கி, பெற்ற மக்களையும் இல்லாமல் அழித்தாரே! இப்படி திட்டமிட்டுத் திருட்டுத்தகமாகச் சீரழிக்க வேண்டும் என்றா அவதாரம் எடுத்தார் மாயப் பெருமாள். நலமாய் நாங்கள் வாழ்ந்த இடத்தில் நச்சுக்கழை போல வந்து நாசம் செய்தாரே!

உண்மையான உருவத்தை மாற்றி, பண்டாரக் கோலம் கொண்டு வந்தல்லவா பங்கப்படுத்திவிட்டார். எங்களை கதி அற்றவர்களாக்கி அவஸ்தைப் படுத்தவே தான் பிரம்மதேவர் எங்களைப் படைத்தாரோ? கங்கை முடி சூடிய சிவபெருமானும் கண்டு சந்தோஷத்தால் நகைத்தாரோ! திருமால் நாடகம் நடத்துவது போல் திருவிளையாடல் புரிந்து வேடிக்கை காட்டுகிறார் தாயே! கூத்தாடியைப் போல் தோன்றி கோலங் கொண்டாரே! சடையாண்டிப் பண்டாரம். ஆகையால் அவர் எங்கள் ஏழு பேர்களையும் மனைவியாக, மாலையிட்டு மணமுடிக்க வேண்டும்.

நாங்கள் பெற்ற ஏழு பிள்ளைகளையும் அவரது சந்ததிகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஏழு மக்களையும் எண்ணிக்கைக் குறையாமல் தந்து, இந்த பரந்த உலகத்தை ஆட்சிச் செய்யும் தகுதியையும் கொடுத்து, திருமாலின் அடையாளமாய் திறமைப் பெற்று திகழ வேண்டும். அவர்கள் தலையில் தங்கத்தால் ஆன பொற்கிரீடமும், கையில் செங்கோலும் கொடுத்து உலகத்தை ஆளச் செய்யும் தகுதியைக் கொடுக்க வேண்டும். இப்படியே நாங்கள் கேட்டதை எல்லாம் தர, உடனடியாகச் செயல்படுத்த வேண்டும்.

அப்படிச் செயலுக்குத் கொண்டுவரத் தவறினால், எங்களை கண்ணீர் விட்டு கதற வைத்து பழியையும். பாவத்தையும் சுமந்து தீர்க்க வேண்டிய நிலை வந்து விடும். பண்டாரக் கிழவனுக்கு

நான் என்கிற அகங்காரம் அதிகம். நாள்களைக் கடத்தாமல், கால தாமதமின்றி செயல் படவில்லையானால், மாயப் பெருமானோ, ஏழு பெண்களின் பாவத்தை ஏற்பீர். சொல் தவறினால் பழியை ஏற்பீர்காண் பண்டாரம் என்றுப் பழித்து இகழ்ந்தார்கள். கற்பின் சிகரமான எங்களின் கற்பை இழக்கச் செய்ததால், இந்த கொடும் கானகத்தில் நல்லவைகள் மறந்து தலைமுடி விரிந்த நிலையில் காணப்படுகிறோம்.

மஞ்சத்தில் உறங்காமல் மண்ணில் புரளும் நிலை வந்தது, பஞ்சணையில் படுக்காமல் பாழும் காட்டில் உருளுகிறோம். திருக்கைலாயம் செல்லாமல் திக்கற்று திணறுகிறோம். தன் மானத்தையும், அதிகாரத்தையும் இழந்து, உலக ஆசைகளையும் துறந்து விட்டோம். தலை சீவி, பூச்சூடிப் பின்னி முடிக்கும் கலை மறந்தோம். ஒய்யார நடை இழந்தோம். உண்ணும் உணவை வெறுத்தோம். எல்லாம் இழந்து எரியும் மெழுகாய உருகுகின்றோம். வெயில் என்றும் எண்ணாமல் பனி என்றும் பாராமல், மழை என்றும் ஒதுங்காமல் அவதிப்படுகிறோம்.

குயில் கூவும் சோலைகள் நிறைந்த கானத்தில், கூத்தாடிப் பண்டாரத்தின் மனைவிகளாய், ஏழு அழகிய பெண்களும் தோகை விரித்தாடும். மயில்களைப் போல் தலைவிரிந்த கோலமாய் காணப்படுகிறோம். பறவையின் காலும், சிறகும் கைக்குள் சிக்கிக் கொண்டால் மேலே பறக்க முடியாத பறவைகளைப போல், பண்டாரக் கிழவன் செய்தச் சதியால் முழிக்கிறோம். நிம்மதி இல்லாமல் நாங்கள் நின்ற தவம் செய்த எங்களையும், நாங்கள் பெற்ற பிள்ளைகளையும் ஒன்றாய் சேர்த்து அன்பு செய்ய வேண்டும். அதர்மத்தை அழித்து தர்ம சிந்தனைக் கொண்ட சான்றோர்களைக் காப்பாற்ற வேண்டும்.

ஏழு மக்களில் ஒருவர் கூட விடுபடாமல் ஒன்றாய் சேர்ந்து வாழ வேண்டும். குறுங்கலியைக் கூண்டோடு ஒழித்து தர்மயுகத்தில் தர்மமாய் அரசாளும் படியாக துவரயம்பதியை உருவாக்கிக் கொடுக்கும் வரை, எங்களைப் போன்றே நிம்மதி இல்லாமல் சுகங்களை இழந்து இருப்பீர் காண் பண்டாரம்! மாயக்கலியை அழிக்கும் வரை மாயம் செய்த மாயப் பெருமாளுக்கு மனதிற்கு இனிய மங்கள காரியங்கள் எதையும் அனுபவிக்க கூடாது என்று

சப்தக் கன்னிமார்கள் தங்கள் மனக்குமுறலை வெளிக்காட்டி, அன்புக் கணவரான கார்மேக வண்ணனைச் சபித்து விட்டார்கள்.

பத்தினிப் பெண்களின் சாபம் பலிக்காமல் போகாது என்று எண்ணிய பச்சைமால் காதில் கேட்டு, கவலையோடு நின்றார். மனைவியாகிய மாதர்களுக்கு மனம் மகிழும் படியாக எதைச் சொல்லி அமைதிப்படுத்தலாம் என்று மனதில் திடம் இல்லாமல் நின்றார். தங்கத் திருமேனியைக் கொண்ட திருமால் மனமுடைந்த நிலையில் நின்று, கன்னிமார்களைப் பார்த்து ஆறுதலாக கூறுவார். கன்னிப்பெண்களே! உங்கள் ஏழு பேர்களுக்கும் இப்படித்தான் நடக்க வேண்டும் என்பது விதி. பிரம்மாவின் படைப்பும் அதுவாகும். அதற்கு நான் என்ன செய்ய முடியும்.

யார், யாருக்கு என்ன விதியோ! அது நடந்தே தீரும். அன்று எழுதிய பிரம்மா அழித்து எழுதப் போவதில்லை. யாராலும் மாற்ற முடியாதது தான் விதி என்பது. அது போலவே தான் பிரம்மாவின் விதிப்படி நடக்க வேண்டும் என்பதால் தான், எனக்கும் அந்த சிந்தனைகள் வந்ததே அல்லாமல் வேறு காரணம் கிடையாது. நான் என்ன செய்வேன். அதைப் புரிந்து கொள்ளாத நீங்கள் என்னைத் தவறாக எண்ணி, குறுங்கலியை அழித்துச் சான்றோர் மக்கள் அனைவரையும் ஒன்று சேர்த்து, நான் அவர்களுக்கு தர்மயுகத்தில் துவரயம் பதியை உருவாக்கி, மரணமில்லா வாழ்க்கைக் கொடுக்கும் நாள் வரை, நான் அல்லல் பட்டு, அமைதியின்றி, அனாதையைப் போல் அலைய வேண்டும் என்று என்னச் சபித்து விட்டீர்கள் அல்லவா?

எனக்கு உங்கள் மீதும், அன்புள்ள. தெய்வச் சான்றோர்கள் மீதும் கருணை இல்லையென்று முடிவு செய்து விட்டீர்களா? கோபத்தில் கொதித்து எழுந்து கண்மூடித் தனமாய் சாபம் விட்டீர்களே! நீங்கள் இட்ட சாபம் பற்றி நான் கலங்க வில்லை. ஆனால் இந்த சாபம் எதைச் சார்ந்து வந்தது தெரியுமா?

முன்யுகத்தில் சிவபெருமான் என்னிடம், அசுரகுலத்தை அடியோடு அழிக்கும் வரை, உமக்கு ஓய்வு என்பது இல்லை, என்று சிவப் பெருமான் இட்ட சாபம் உண்டு. அது இப்போது நீங்கள்

இட்டச் சாபத்தோடு ஒத்துப்போகிறது என்று அன்போடு, பொறுமையாய் சப்த கன்னிமார்களிடம் அய்யா உரைத்தார்.

நல்லவன் ஒருவனுக்கு பொல்லாங்கு செய்தாலும், அந்த நல்லவன் அதை நன்மை என்றே எடுத்துக் கொள்வான். மீண்டும் அவன் அவர்களுக்கு துன்பம் செய்யாமல், அவர்கள் நாணும் விதமாக நன்மை தான் செய்வான். அது போலவே காருண்ய மூர்த்தியான நாராயணர் பக்தர்கள் எவ்வளவு தீமை செய்தாலும் சரி, பக்திப் பெருகி குமுறி பலன் கிடைக்கவில்லையே என்று பழி சொல்லி ஏசினாலும் சரி கூடவே இருந்து காப்பாற்றுபவர். ஆகவே அவர் தான் நமக்கெல்லாம் கடவுள்.

தேடுபவர்களுக்கும், தேடாத கயவர்களுக்கும் தினமும் அன்னமும், தண்ணீரும் கொடுத்து அருள் வழங்கும் கருணைக் கடல். ஆனால் விதிப்பயனை மாற்ற முடியாது. மலைபோலே வரும் துன்பத்தை பனி போல் போகச் செய்வது தான் பகவானின் திருவருள் என்பதை மானிடம், புரிந்து கொள்ள வேண்டும். தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது என்று, பகவானை துதிச் செய்வது தான் முறை. குறைச் சொல்வது தகாது என்றார்..

மேலும் கோபம் கொண்டு சாபமிட்ட சப்த கன்னிமார்களைப் பார்த்து அன்போடு ஆறுதல் சொல்லும் விதமாக அய்யா நாராயணர் பெண்களே! நான் ஆகமத்தில் சொன்னபடி, கலியைக் கடந்து, தர்மயுகம் தொடங்கும் நாள் வரை நீங்கள் எல்லாரும் எங்கே போய் இருக்கலாம், எப்படி வாழலாம் என்கிற விவரங்களை ஏழு பேரும் முடிவெடுத்துக் கொள்ளுங்கள். தெய்வலோகத்து அழகிய தேவதைகளே! உங்கள் தேவைகளை என்னிடம் சொல்லுங்கள், நான் உங்களுக்கு உதவுவேன் என்றார்.

திருமாலின் திருவாயிலிருந்து வெளிவந்த ஆறுதல் மொழிகளைக் கேட்ட சப்த கன்னியர்கள் எல்லோரும், தியானித்து திடமான மனதுடன், எல்லோரும் ஒரு மனதாய், திருமாலிடம் தங்கள் விருப்பத்தை தெரிவித்தார்கள். மாயப் பெருமாளே! எங்களுடைய இரண்டு ஆண் பிள்ளைகள் சோழ மன்னனால் இறந்து போனார்கள் என்றுச் சொன்னீர் அல்லவா? அவர்கள் உயிரை மீட்டு சான்றோர் இனத்தில் பிறவிச் செய்தீரா, அல்லது வேறு

இனத்தில் பிறவிச் செய்தீரே! என்ற விவரம் தெரிய வேண்டும் என்றார்கள்.

அதைக் கேட்ட தாராள குணம் கொண்ட தர்மத்தின் தலைவனான நாராயணர், மனநிறைவோடு பிரம்மாவை அழைத்து, வேத ஆகம கணக்குப்படி படைக்கும் பிரம்மாவே! என்னுடைய பிள்ளைகள் இரண்டு பேரை கரிகால் சோழன் தன் வீரத்தைக் காட்டி வைகைக் கரையில் வீரமரணம் அடையச் செய்தானே! குருவாக இருந்த என்னுடைய நன்றியை மறந்து, கலியின் கோள் வார்த்தையால் மதியிழந்து கொலைச் செயல் புரிந்தானே, அந்த இரண்டு பேர்களின் உயிர்களும் எங்கே இருக்கிறது என்று கேட்டார்.

திருமால் கேட்டவுடன், பிரம்மா அதற்குப் பதில் சொல்லும் விதமாக, அவசரப் படாமல் நிதானமாக திருமாலிடம் சொல்லுவார், ஆதிநாராயணப் பரம் பொருளே! மரணம் அடைந்து இரண்டு பிள்ளைகளின் உயர்வான உயிர்களை, அழிந்து போகாதவாறு, அற, நெறி தவறாத மகாதேவனும், மகா தேவியும் வாழ்ந்து இருக்கின்றச் சத்தி வாய்ந்த, சிவலோக அறையில் பாதுகாப்பாக இருக்கிறது.

திருமாலின் பிள்ளைகள் என்பதால் என்னச் செய்யலாம் என்று தெரியாமல் அதை தூய்மையான பரலோகத்து முனிவர்களுடைய வித்தும், சிவலோகத்தில் உள்ள வானவர்களுடைய வித்துமாக இருப்பதால், இந்த கலியுகத்தில் மனிதர்களாகப் பிறவிச் செய்யக் கூடாது என்று நல்லெண்ணத்தில் முடிவெடுத்து, மறு பிறவி செய்யவில்லை. ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடுமோ என்று பயம் கொண்டு நல்ல பாதுகாப்பான் சிவலோகப் பதியில் வைத்திருக்கிறோம், என்று மரியாதையோடு, பயபக்தியுடன் பிரம்மா சொன்னார்.

அதுகேட்ட நாராயணர் நல்லது பிரம்மதேவா! ஆனால் நீ அன்றைக்கே உடனடியாக மறுபிறவிச் செய்திருந்தால் அப்போது பல நூறாயிரமாக பெருகி இருப்பார்கள் அல்லவா? எஞ்சியிருந்த என்னுடைய ஐந்து பிள்ளைகள் பெற்ற மக்கள் எல்லாம் பெருந்திரளாய் பெருகி ஐம்பத்தாறு தேசங்களிலும்

இருக்கிறார்கள். எல்லா இனத்தவர்களையும் விட அதிகமாக விரிவடைந்து உலகம் எங்கிலும் ஞான அறிவுள்ள சான்றோர்களாய் பெருகி விட்டார்கள். அவர்களைப் போல் இவர்களையும் அந்நேரமே படைத்திருந்தால் அவர்களுக்கு இணையாகப் போட்டி போட்டது போல் வளர்ந்திருக்குமே!

ஆலம் விழுதுகள் போல் கொப்பும், கிளைகளுமாய் நாடு முழுவதும் பரந்து பெருகி வாழ்ந்திருப்பார்களே! கரிகால் சோழன் வாழ்விடாமல் உயிரைக் கொன்றான் அந்த உயிரை மறுபடியும் படைக்காமல் நீர் கெடுத்தீர். கலிநீசப்பாவி என் மக்கள் மனதில் புகுந்து வஞ்சகமாய் செயல் பட்டு வளமோடு வாழவிடாமல் கெடுத்தான்.

சரி, சரி பட்டப்பாடுகள் எல்லாம் போகட்டும். இனி நடப்பதைப் பற்றிச் சிந்திப்போம். இனிமேல் நீர் பாதுகாத்த இரண்டு பிள்ளைகளின் உயிரையும் சந்தோசமாக சான்றோர் மக்கள் வாழ்ந்த இடமான வைகைக் நதிக் கரையில் விட்டுச் சென்ற அதே மனித உடலோடு பிறவிச் செய்ய வேண்டும்.

அந்த உடலுக்கு மறுபடியும் உயிர் கொடுத்து புதியவர்களாக எழுப்ப வேண்டும் என்று, நான் நிச்சயம் செய்திருக்கின்ற படியால் கண்டிப்பாக பிறவி வேண்டும். வெள்ளை மனம் கொண்ட நல்லவர்களாகச் சான்றோர் இனத்தில் தோன்றவேண்டும். இப்படியாக இன்னும் எஞ்சியிருப்பவர்கள் அனைவரும் பிறந்து இன்ப உலகமாகிய வானலோகத்தில் உள்ள அனைவரும் பூலோகச் சான்றோர்களாக, அதே இனத்தில் வாழ்ந்து வருவதால், அவரவர் வழியில் அவரவர்கள் மீண்டும் மீண்டும் பிறந்து மற்றவர்களைப் போல் இவர்களும் பெருந்திரளாகப் பெருகிட வேண்டும்.

எனவே, பிரம்ம தேவா! நீர் நீண்ட ஆயுளைச் செம்மையாகக் கொடுத்து வேகமாய் படைத்து விடும் என்றார். திருமால் சொன்னது கேட்ட பிரம்மா! திருமாலே! நீங்கள் எடுத்த முடிவு மிகவும் நல்லது. எல்லாம் நன்மையாகவே நடக்கட்டும். என்று மக்கள் பெருகி வருவதற்காக நல்லபடி பிறவிச் செய்தார். சான்றோர்களுக்குப் பிள்ளைகளாக கைலாச லோகத்து

வித்தையும், பரலோகத்து வித்தையும் பெருகி வரும் படியாகப் பிறவிச் செய்தார் பிரம்மா. திருமால் மிகவும் சந்தோஷம் கொண்டு சமாதானம் அடைந்தார்.

கடுமையான உறுதியோடு திருமால் செயல் பட்டு சாதித்துக் காட்டிய பிறகு, சப்த கன்னிமார்களைப் பார்த்து, சங்கடங்கள் தீர்க்கும் விதமாக பகவான் நாராயணர்! கூறுகிறார். அன்புள்ள சப்த கன்னியர்களே! நீங்கள் கூறிய நிபந்தனைகள் எல்லாவற்றிற்கும் நான் சம்மதித்து சரியாகச் செயல்படுத்தி விட்டேன். இனி நான் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள்! நான் உங்களையும் பூலோகத்தில் உங்களுடைய தெய்வலோக சான்றோர் இனத்தில், சான்றோர்களாகப் பிறவிச் செய்யலாம் என்று தீர்மானித்து இருக்கிறேன்.

உங்கள் விருப்பம் என்ன? சம்மதம் தானா? உள்ளத்தில் உள்ளதை ஒழிக்காமல் சொல்லுங்கள், என்று கேட்டார். திருமாலின் திருவார்த்தைகளைக் கேட்டு கன்னிமார்கள் மனத்திருப்தியோடு, பேரின்பப் பரவசத்தோடு, உயிர்களுக்கெல்லாம் இனிமையான வாழ்க்கையைக் கொடுத்து, இன்னருள் புரிகின்ற எங்கள் நாயகரே! உமது திருவாய் மொழியை எங்கள் காதால் கேட்கும் போது, தேன் அருந்துவது போல் இன்பம் அடைகிறோம். உள்ளம் குளிர்கிறது. மெய் உடல் சிலிர்க்கிறது. கை, கால்கள் ஆனந்த தாண்டவம் புரிகிறது.

அவ்வளவு மகிமையானது, உமது திருவாய்மொழி, நாங்கள் உமது மகிமை அறியாமல் ஏதேதோ பேசிவிட்டோம். எங்களை மன்னித்து, மாப்புத்தர வேண்டும், மாதவ கோவிந்தா! என்று மனம் உருகி, மாயம் செய்த மாயவரே! நாங்கள் யாதும் அறியாதவர்கள், என்பதை நீரும் அறியாதது இல்லை. உம்மால் இன்றி ஓர் அணுவும் அசைவது இல்லை, என்பதை இப்போது புரிந்து கொண்டோம். குறையென்று வந்து முறையிட்ட பேர்களின் கோரிக்கைகளை வீண்போகாமல் காத்து கருணைச் செய்பவரே!

தீபங்கள் ஏற்றி 'நாராயணர்' என்ற நாமம் சொல்லுபவர்களுக்கு பாவங்கள் அருகே வராமல் காக்கும் வேதநாயகனே! உம்மை வேதங்கள் புகழ்ந்து கூறுகிறது என்பதையும் புரிந்து

கொண்டோம். அதனால் வேதங்கள் கூறும் எங்கள் நாதன் தாழினை வணங்காமல் வெற்றிக்கு வேறு வழியே இல்லை, என்பதை நன்றாக புரிந்து கொண்டோம். திருமாலே! கண்ணால் கண்டோம் எங்கள் கருணாகர மூர்த்தியை என்றும் எங்களைக் கைவிடாதபடி காத்து அருளும் இன்ப நாயகா!

எங்களை உமது மனைவியாக்கி எங்கள் மன்னவராக வந்த மாதவ, மாணிக்க, ரெத்தினமே! பெரிய திருவடியாகிய கருடவாகளத்தில் பவனி வருபவரே! திருமகளாகய லெட்சுமி தேவியை மணம் புரிந்த மங்கை மணவாளனே! திருமாலே! உம்முடைய திடமான தீர்மானங்களை, இந்த உலகத்தில் உள்ள எவராலும் 'எள்ளு' அளவு கூட அசைந்து விட முடியாது. சிவபெருமான் கூட உம்மை அளக்க முடியாதபடி, அற்புதமான முறையில் செயல்படுபவரே! தெய்வலோகத்தைச் சார்ந்த எங்களை நீர் பூலோகத்தில் நமது பிள்ளைகளின் வம்சாவழி இனத்திலே பிறவிச் செய்ய வேண்டும்.

இன்பமயமான வாழ்க்கை இனிதே அமையும் படி உங்கள் நன்மைக்காக இன்றைக்கே பிறவிச் செய்வோம் என்று கூறினீர். பூலோகத்தில் பிறக்கின்ற பிறவியில், நாங்கள் மானிடப் பெண்களாக, சான்றோர் மனுவாகப் பிறந்தால் குறையில்லை. ஆனால் மரணம் இல்லாத படி, சந்தோசமான வாழ்க்கை வாழ அருள் புரிய வேண்டும், என்று மாயப் பெருமாளை வேண்டினார்கள். மேலும், அய்யா! ஒரு வேளை மரணம் ஏற்பட்டு மீண்டும் மறுபிறவியாக அதே இனத்தில் பிறந்தாலும் குற்றம் இல்லை.

வல்லமைப் பொருந்தி பொல்லாதவராய் நின்று எங்களின் மனதைக் களவாடிய கதாநாயகரே! எங்கள் பாதுகாப்பிற்காக, நீர் வந்து எங்களை கைபிடிக்கும் வரை எங்களுக்கு மாதவிடாய் கூடாது. வேறு எந்த முறையிலும் திருமணம் நடக்கக் கூடாது. உலக இன்பங்களில் ஆசைகள் நாடக்கூடாது. மண வாழ்க்கைக்கான திருமணப் பொருத்தம் வரக்கூடாது. மனம்மாறி மானிடனோடு மருவுதல் கூடாது. சீவி முடித்து சிங்காரிக்கும் எண்ணம் வரக்கூடாது. அலங்காரம் செய்து அழகு படுத்தி இன்பம் காண்பது கூடாது.

ஆண்களின் மனதைப் பரவசப்படுத்தும் காமப் பார்வை எங்கள் மீதுப் படக்கூடாது. காதுக்கினிய பாடல்கள் பாடும் மனம் வரக் கூடாது. தீயவார்த்தைகளை எங்கள் வாய் பேசக்கூடாது. தீயவைகளை எங்கள் கண்கள் காணக் கூடாது. இழிவான செயல்களை பேசும்போதும், மோசமான கொலை பாதகம் நடக்கிறது என்பதையும் எங்கள் காதுகள் கேட்கக்கூடாது. தேனும், தினையும் கலந்த பண்டங்களும், பழவகைப் பானங்களும், போதையூட்டும் ரசங்களும் குடித்து கூத்தாட்டம் ஆடாமல் இருக்க வேண்டும்.

வண்ண, வண்ண புடவைகள் உடுத்தி, மலர் சூடிதலை அலங்கரிக்காமல் இருக்கும் மனம் வேண்டும். சாதுக்களைப் போல் ஆடம்பரமில்லா வாழ்வு வேண்டும். பார்ப்பவர் கண்ணைக் கவரும் கவர்ச்சித் தோற்றம் உடலில் தோன்றாமல் இருக்க வேண்டும். ஆடம்பரம் இல்லா அழகு போதும். வீண் ஆசைகள், பருவத்திற்கு ஏற்ற உடல் மாற்றங்கள், அழகு தோற்றங்கள் தென் படாதிருக்க வேண்டும். மரியாதைக் குறையாமல், சொகுசு வாழ்க்கையை எண்ணாமல், உற்றார் உறவினருடைய பாசப்பிணைப்புகள் பற்றிக் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

ஒன்று கேட்டு ஒன்று சொல்வதும், ஒருவர் முகம் பார்த்து ஒருவர் அன்பு கொள்வதும் கூடாதிருக்க வேண்டும். சுகபோகம் துன்ப, துயரம், ஆகிய வாழ்வுகள் எல்லாம் இல்லாமல் இயல்பாகவே இருக்க வேண்டும். நல்லது, கெட்டது இல்லாமல் இயற்கையின் விதிப்படி, இயல்புநிலை மாறாமல் எங்களை பிறவிச் செய்ய வேண்டும். பூலோகத்திற்கு வந்து எங்களிடம் உறவுமுறை கொண்டாட நீர் தான் வர வேண்டும். அதுவரையிலும் நாங்கள் என்றும் கன்னியர்களாவே சிறு வயது பிள்ளைகளை போன்று வாழ வேண்டும் என்று கேட்ட விரும்பி கேட்டுக் கொண்டார்கள்.

இப்படியாக நாங்கள் சொன்ன முறைகளை எல்லாம் ஒப்புக்கொண்டு, எங்களை அன்போடு, அரவணைத்து கருணைக் காட்டி, உங்களை பாதுகாப்பேன் என்று உறுதி மொழித் தர வேண்டும் என்று பிடிவாதமாகக் கூறினார்கள். நாங்கள் சொன்னதை எல்லாம் மனதில் கொண்டு உம்முடைய

விருப்பப்படியே சான்றோர் குலத்தில் எங்களைப் பிறவிச் செய்வீராக!

இவ்வாறு ஏழு கன்னிமார்களும் பூலோக வாழ்க்கையில் ஆடம்பரம், கவர்ச்சி, சொகுசு, ஆசை, கோபம் இல்லாத துறவு வாழ்க்கை போல வாழ வேண்டும் என்று, தங்கள் பத்தினித் தன்மையை வெளிப்படுத்தினார்கள். ஆதி நாராயணரே! உம்மைத் தவிர வேறு எந்த ஆடவர்களையும் எண்ணிப் பார்க்காத தன்மையை வெளிப்படுத்தினார்கள்.

இவ்வாறு தன்னுடைய பதிவிரதா தர்மத்தை எடுத்துக் கூறிய பெண்கள், எந்த விதமான ஆனந்தத்தையும் நினைத்து பார்க்க மாட்டோம் என்கிற சபதத்தை கூறியது கேட்ட திருமால், உள்ளூர ஆனந்தம் அடைந்து, பத்தினிப் பெண்களே! நல்லது தான் உங்கள் உறுதியும், நன்னடத்தையும் கண்டு, நான் உங்களைப் பாராட்டுகிறேன்!

என்னையே நினைத்து உருகும் உயிர்களுக்கெல்லாம், எப்பொழுதுமே வெற்றிதான்! என் புகழ் பாடும் இனிய அன்பர்களுக்கு கிடைப்பதும், கிடைக்க இருப்பதும், பெயரும், பெரும் புகழும், நிறைந்த செல்வமும் தான். மேலும் எல்லா வழங்களும் பெற்று சிறப்படையச் செய்வேன். கவலை வேண்டாம். அது போலவே நீங்கள் விரும்பிய படியும், கேட்ட படியும் நன்றாக நடக்கும். வல்லமையான மனக்கட்டுப் பாடுகளில் எந்தவித மாற்றங்களும் ஏற்படாத படி வரம் தருகிறேன் என்று வாக்குக் கொடுத்தார் அய்யா நாராயணர்.

திருமால், கன்னிமார்களின் வார்த்தைக்கு கட்டுப்பட்டதை நினைத்து மிகவும் சந்தோஷம் கொண்டு, மனம் நிம்மதியடைந்தார்கள். மீண்டும் கன்னிமார்கள் திருமாலை வேண்டி சில கேள்விகளைக் கேட்டார்கள். ஆதிப் பரம்பொருளே! நாங்கள் மானிடராக சான்றோர் இனத்தில் சாதாரண மனுவாகப் பிறந்தாலும், நீர் எங்களைச் சேர, எப்போது வருவீர். அதற்கான கால கட்டம் எது? எப்படி நடக்கும், என்று தெளிவாகக் கூற வேண்டும் என்று கேட்டார்கள்.

சப்தகன்னிமார்களின் ஆசைகளை ஆவலோடு கேட்ட அய்யா நாராயணர், திருவருள் கொண்டு, கன்னிமார்களுக்கு தகுந்த சந்தர்ப்பத்தைப் பற்றி அழகாகக் கூறுகிறார். நான் வருவதற்கான தருணம் எதுவென்றால், "**ஆயிரத்தெட்டு அம்பலமும் ஆனத்திருப்பதியில் வாயிதமோரம்பலமும் வளர்பதியிலொன்றதுவும்**" இறைவனை மக்கள் பல நாமங்களில் வழிப்பட்டு வருகின்றனர். பல நாமங்களில் இருக்கும் இறைவன் ஒருவனே. அதுவே அந்த பரம்பொருள் என்றும், பரம்பொருளில் இருந்து ஒவ்வொரு காரண காரணத்திற்காக பிரிந்த இறை சக்திகள் பல நாமங்களில் உலகில் இருக்கின்றன. அவையெல்லாம் பரம்பொருளுக்குள் ஐக்கியமாக்குகின்ற அவதாரமாகிய வைகுண்ட அவதாரம் எடுத்து உங்களை நான் ஐக்கிய மாக்குவேன்.

1008-ஆம் ஆண்ட மாசி மாதம் தெய்வச் சான்றோர்கள் வாழும இடமாக இருக்கும், சுவாமி தோப்பில் உள்ள சிறந்த பதியில் வந்து மக்களுக்கு நல்ல உபதேசங்ளைக் கூறுவேன். மக்களை நல்வழிப் படுத்தும் தர்மயுகத்திற்கு தலைப்பதியாக இருக்கின்ற அந்த தலத்திற்கு கங்கையைத் தலையில் அணிந்தவரும் மான நெற்றிக்கண்ணை உடைய பரமசிவன் அருளால் தெட்சணத்தில் நான் வரும் போது மும்மூர்த்திகளும் ஒன்றாகி ஜோதி சொரூபனாக நான் வருவேன். அப்போது நாட்டை ஆண்டுக் கொண்டிருக்கும் மன்னர்களின் ஆட்சியெல்லாம் முடிவுக்கு வந்து கலி மன்னனுடைய இறப்பும், அவனுடைய ஆட்சியும் அழிந்து மக்கள் அனைவரும் நல் வழியில் வாழும் படியாகச் செய்வதற்காக தென் வாரிக் கரைக்கு வடமேற்கு மூலையாக அமைந்து இருக்கும் தெட்சணா பூமியில். சிவன்,பிரம்மா, விஷ்ணு ஆகிய மூன்று சக்திகளையும் ஒன்றாக ஐக்கியப்படுத்தி, பின் உலகம் எங்கும் அறிந்து கொள்ளும் விதமாக அதிசயத் தன்மையோடு வைகுண்டமாக வருவேன்.

அப்போது நீங்கள் என்னைக் கண்டு கொள்வீர்கள். அதற்கான காரணங்கள் ஏராளம் இருக்கின்றது. அதில் நீங்களும் ஒன்று. ஆனால் என் வருகையின் விவரங்களை நான் இப்போது எடுத்துரைக்கக் கூடாது. அது பரம இரகசியம். ஆகவே அன்பான என் கன்னிமார்களே! இந்த சந்தர்பத்தில் நான் சொன்னதை

எல்லாம், காதில் நன்றாகக் கேட்டு பயன் உள்ளதாக ஆக்கும் பொருட்டு, நீங்கள் அனைவரும், என் வருகையை மனதில் நினைத்து, அதற்குரிய காலகட்டம் சீக்கிரம் வர வேண்டும் என்று மனதை ஒரு நிலைப் படுத்தி, நான் உங்களிடம் கூறுகின்ற இந்த நாள் முதல் நீங்கள் பூலோகத்தில் மனிதர்களாய் வாழும் வரை, என்னைத் தேடி காத்திருங்கள் என்றார்.

நான் சொன்ன தருணம் வரை நீங்கள் என்னை நினைத்து ஒரே நினைவாக என்னுடைய வருகைக்காக காத்திருங்கள். மேலும் இந்த தருணம் கேட்ட இந்த நேரம் முதலாய் "**வடமேற்கு மேற்கும் வடக்குங் கால்நீட்டாதுங்கோ**" என்று அந்த கன்னிகளுக்கு எம்பெருமான் தருணம் கூறுகின்றார்

மேலும் அவர்களுடைய விரும்பத்தின் படியே சான்றோர் இனத்தில் பிறவி செய்து சான்றோராக வாழ வைக்க நினைத்து, தெய்வலோக வித்தில் உருவாகிய சான்றோர் இனத்தில் மும்மூர்த்தியின் அருளால் பிறவிச் செய்தார்கள். கன்னிமார்களும் பூவுலகில் பிறந்தார்கள் உறுதியான மனநிலையோடு தவம் செய்த சப்த கன்னியர்களின் தவமும் நிறை வேறி, உள்ளத் தெளிவோடு பூலோகப் பிறப்பு எடுத்தார்கள்.

அரிகோண மலையில் உள்ள அயோக வனத்தி அம்மைமார்களின் தவநிலையை நிறைவு செய்து விட்டு , சிவன், பிரம்மா, விஷ்ணு ஆகிய மும்மூர்த்திகளும், அம்மை உமையவளும் கைலாயம் சென்றார்கள். சீரும் சிறப்பும் மாறாத்தன்மையுடன் விளங்கிய திருமாலின் துணைவியான திருமகள் லெட்சுமி தேவியும், வைகுண்ட லோகத்தில் இருந்து சிவலோகம் சென்று அவர்களுடைய தங்க மணி மண்டடத்தில் தங்கி இருந்தார்கள். திருமால் தனக்கு ஏற்பட்ட சிக்கலான பிரச்சினைகளை சம்மாளித்துக் கொண்டு லெட்சுமி தேவியுடன் ஒய்யாரமாய் கையிலையில் அமர்ந்து இருந்தார்கள்.

**வினா விடை**:-

1. தவத்தில் நின்ற சப்த கன்னியர்களின் உடலை மூடி மறைத்திருந்த மரத்தின் உடைய அல்லது விருட்சத்தினுடைய பெயர் என்ன? ஆலமரம்

2. தவத்தில் நின்ற சப்தகன்னியர்களின் தலைமயிர் எவ்வாறு வளர்ந்து இருந்தது?
பூமி வரை வளர்ந்து பூமியின் அடியில் மரத்தின் வேரைப்போல் மண்ணில் வேரூன்றி இருந்தது.

3. சப்த மாதர்களின் உடைய தவமானது யாருடைய தவத்தை விட இருபது மடங்கு அதிகமாக இருந்தது?
பார்த்தன் என்ற அர்ச்சுனன்

4. சப்தமாதர்களினுடைய தவமானது யாருடைய தவத்தைவிட இருமடங்கு அதிகமாக இருந்தது?
சீதையின் தவத்தை

5. சப்த மாதர்களுடைய தவத்தை பார்க்க செல்ல வேண்டும் என்று யார் முதலில் ஆலோசனை கூறினார்?
அம்மை உமையவள்

6. சப்தமாதர்களுடைய தவத்தை பார்க்க யார் யார் எல்லாம சென்றார்கள்.?
அம்மை உமையவள், சிவப்பெருமான், நாராயணமூர்த்தி, பிரம்மா

7. அறம் வளர்த்தாள் என்று யாரைக் குறிப்பிடுகிறோம்?
அம்மை உமையவள்

8. சப்தமாதர்கள் உமையவளிடம் மனம் வருந்துவதற்குரிய காரணம் என்ன?
சப்தமாதர்களின் தவத்தை நிறைவு செய்ய காலம் தாழ்த்தியதால் ஆகும்.

9. சப்தமாதர்கள் அம்மை உமையவளிடம் தங்களுடைய வேதனையை எவ்வாறு வெளிப்படுத்தினார்கள்?
என் நேர மெங்களைநீர் இகழ்ந்து கடத்தாமல்
தனதாக எங்கள் தயவில் குடியிருந்து
கற்பகலாக் காத்த கண்ணெங்கள் மாதாவே
உற்பனமா யெங்களைநீர் உலகில் தவறவிட்டு
இருந்தாயே தாயே எங்கள்விதி நாயகமே
அருந்தாமல் வாடினோமே அறமில்லார்
தங்களைப்போல்காத்திருந்தா யென்றிருந்தோம்
எங்களுட கட்டழியப் பார்த்திருந்த ஞாயமென்ன
எங்களுட பார்வதியே எந்நேர மீசுரர்க்கும் என்னம்மை
யுங்களுக்கும் சொன்ன பணிமறந்து சொல்தப்பி
நின்றோமோ ஈசருட சட்டம் யாங்கள் மிகமறந்து தேச
மதில்வரவே சிந்தை யிச்சித்ததுண்டோ கற்பினை
மறந்தோமோ காராவைக் கொன்றோமோ அற்புதவேள்
தாயே அடியார் தமக்கருளும்

10. சப்தமாதர்களை சூழ்ந்து இருந்த மரங்களை வெட்டியகற்றி அவர்களுடைய தவத்தை நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்தவர் யார்?
சிவப்பெருமான்

11. சப்த மாதர்கள் மாட்டில் ஏறும் மகாபாரன் என்று யாரை குறிப்பிடுகிறார்கள்?
சிவப்பெருமான்

12. "**ஊட்டி உறக்கார் இல்லாமல் ஊமை கண்டகனாவது போல்**" இதில் ஊமை கண்ட கனவை வெளிச்சொல்ல முடியாதது போல் தங்கள் துன்பங்களை வெளியே எடுத்து கூற முடியாது துன்பங்களை அனுபவித்து யார்?
சப்தமாதர்கள்

13. சப்தமாதங்கள் சிவபெருமானிடம் கேட்டவரம் யாது?
சப்தமாதர்கள் சிவபெருமானிடம் எங்களை இனி மேல் கையிலைக்கு அழைக்கக்கூடாது. மேலும் நாங்கள் பெற்ற பிள்ளைகளைத் தந்து எங்கள் கணவரோடு இருந்து இந்த

உலகை அரசாள வரம் தரவேண்டும் என்று வேண்டினார்கள்.

14. பண்டுசேல் செய்த பாரமுனிவன் என்று சப்த மாதர்கள் யாரை குறிப்பிட்டார்கள்?
நாராயண மூர்த்தியை

15. நாராயணமூர்த்தி சப்த மாதர்களிடம் சான்றோர் மக்களுக்கு யார் யார் மூலம் துன்பம் வந்ததாகக் கூறினார்? சோழ மன்னன் மற்றும் கலிநீசன்

16. நாராயணமூர்த்தி சப்தமாதர்களிடம் சான்றோர் மக்கள் எவ்வாறு துன்பப்படுதாகக் கூறினார்?
அப்பன் நான் இருக்க அவரம்மை நீயிருக்க அப்பன் அம்மை இல்லை என்றுக் கூறி சான்றோர்களை நீசர்கள் துன்பப்படுத்துகிறார்கள் என்றுக் கூறினார்.

17. சப்த மாதர்கள் தவமாக இருக்கின்ற போது நாராயணமூர்த்தி தான் எவ்வாறு இருந்ததாக கூறுகிறார்?
பரதேசியாக

18. நாராயண மூர்த்தி சப்த மாதர்களிடம் சான்றோர் மக்கள் துன்பப்படுவதாக கூறியதை கேட்டவுடன் சப்தமாதர்களின் நிலை எவ்வாறு இருந்தது ?
சப்த மாதர்ககள் தங்களுடைய தலையில் அடித்து விழுந்து அழுதார்கள்.

19. சப்த மாதர்கள் நாராயண மூர்த்தியிடம் கூறிய குற்றச்சாட்டு யாது?
   - சப்த மாதர்கள் கற்பை அழித்தது.
   - சான்றோர் மக்களை பாதுகாக்க தவறியது.

20. சோழ மன்னனுக்கு சப்தமாதர்கள் கொடுத்த சாபம் எது?
அக்கப்பக்க உறவுகள் அறுந்து விட வேண்டும்.சோழன் வம்மிசங்கள் தீயாவிக் கொண்டு இறந்திட வேண்டும்.

சோழனுடைய நாட்டில் பகலில் நரி ஓட வேண்டும்.சோழனுடைய வழியில் வந்தவர்கள் வன்னரகில் வீழவேண்டும் என்றுச் சாபம் கொடுத்தார்கள்.

21. சான்றோர் மக்களுக்கு துன்பம் கொடுத்த நீச குலங்களுக்கு சப்த மாதர்கள் கொடுத்த சாபம் எது?
நீங்கள் குலங்கள் நெருநெரென தானொடிந்து தோசப்புழுக் குழியில் விழ வேண்டும் என்றுச் சாபமிட்டார்கள்.

22. சப்த மாதர்கள் சிவபெருமானிடமும் அம்மை உமையவளிடமும் இறந்த இரண்டு சான்றோர்கள் திருமணம் முடிந்தவர்களாக இருந்தால் அவர்களுடைய மனைவிமார்கள் நிலை எப்படி இருக்க வேண்டும் என்று வரம் வேண்டினார்கள்?
சான்றோர் மக்களின் மனைவிமார்கள் கட்டின மாங்கல்யம் (தாலியை) கழற்றக் கூடாது. அவர்கள் கணவன்மார் இருக்கும் போது எப்படி மங்களகரமாக இருந்தார்களோ அதுபோல் எந்த உடமைகளையும் கழற்றாமல் இருக்க வேண்டும் என்று வரம் வேண்டினார்கள்.

23. சோழ மன்னனால் கொல்லப்பட்ட சான்றோர் மக்களுடைய மனைவிமார்கள் தங்களுடைய மங்களகரமான வாழ்வை இழக்காமல் இருக்க யாருடைய அருளால் புத்தி கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர்?
சிவன் செயலால் புத்தி கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

24. சப்த மாதர்கள் கேட்ட வரத்தின் படி கணவன் இறந்துவிட்டால் பெண்கள் தங்களுடைய மாங்கல்யம் மற்றும் ஆபரணங்களை கழற்ற வேண்டுமா? ஏன்?
கழற்ற வேண்டாம். காரணம் இறந்த சான்றோர்கள் தர்மயுகத்தில் மீண்டும் தோன்றி வருவதால் ஆகும்.

25. இன்றைய காலத்தில் கணவனை இழந்த பெண்கள் தங்களுடைய மங்கள அடையாளங்களை இழப்பது சரியா? இல்லை .

26. சப்த மாதர்களுடைய தவத்தை நிறைவேற்றுவதற்காக மும்மூர்த்திகளும் சென்ற நிகழ்வு சப்த மாதர்களுக்கு சந்தோஷமாக இருந்ததா?
இல்லை. இரண்டு சான்றோர் மக்கள் இறந்த செய்தியை கேட்டு துன்பம் அடைந்தார்கள்.

27. சப்த மாதர்கள் தங்கள் வாழ்கின்ற இடத்தில் நச்சுக்களையாய் வந்தவர் என்று யாரைக் குறிப்பிடுகிறார்கள்?
நாராயண மூர்த்தியை

28. சப்தமாதர்கள் தங்கள் வாழ்கின்ற இடத்தில் கூத்துவன் போல் வந்தவர் என்று யாரைக் குறிப்பிடுகிறார்கள்?
நாராயணமூர்த்தியை

29. சப்தமாதர்கள் தங்கள் வாழ்கின்ற இடத்தில் நாராயணமூர்த்தி எந்த உருவத்தோடு வந்து சந்தித்தார்?
சச்சுருவமிட்டு வந்து சந்தித்தார்.

30. சப்த மாதர்கள் எவ்வளவு காலத்திற்குள் நாராயணமூர்த்தி எங்களை ஏற்றெடுத்து எங்களுடைய பிள்ளைகளை வைத்து அரசு ஆள வேண்டும் இல்லை என்றால் ஏழு பெண்களுடைய பாவத்தை ஏற்பார் என்றுக் கூறினார்கள்?
சில நாட்களில்

31. சப்த மாதர்கள் நாராயணமூர்த்தி எங்கள் கற்பை அழித்த காரணத்தினால் தாங்கள் எப்படிப்பட்ட துன்பங்களை வனத்தின் அனுபவித்ததாகக் கூறினார்கள்?

ஆங்காரம் மறந்து, அவனி ஆசை அறுத்து, தலைவிரித்து கலையை சதமென்று எண்ணாமல், உலையின் மெழுகது போல் இருந்ததாகக் கூறினார்கள்.

32. சப்த மாதர்கள் நாராயண மூர்த்திக்கு கொடுத்த சாபம் எது?
சான்றோர் மக்கள் ஏழு வழிகளில் உள்ள மக்களை ஒன்றாக கொத்தோடு எடுத்து சேர்த்து கலியை அழித்து தர்ம யுகத்தை அரசு ஆளுகின்ற வரையிலும் எங்களைப்போல் சுகமற்று இருப்பீர் பண்டாரம் என்றுச் சாபம் கொடுத்தார்கள். கலி மாழும் வரையிலும் எந்த விதமான மங்கலமும் வராது என்றுச் சாபம் இட்டார்கள்.

33. சப்த மாதர்கள் நாராயண மூர்த்திக்கு சாபம் கொடுத்ததை கேட்டவுடன் நாராயணமூர்த்தி கூறிய பதில் யாது?
பெண்ணே உங்களுக்கு பிரம்மா அமைத்தபடி இந்த எண்ணம் வந்ததே அல்லாது வேறு ஒன்றும் இல்லை என்றுக் கூறினார்.

34. நாராயண மூர்த்தி சப்த மாதார்களிடம் நீங்கள் இட்ட சாபம் பண்டு தனக்கு யார் கொடுத்த சாபத்தோடு ஒத்து போவதாக கூறுகின்றார்?
அசுரகுலம் அழியும் வரை துயரம் எனக்கு தொடுக்கும் என ஈசர் இட்ட சாபத்தோடு ஒத்துப் போவதாக கூறினார்.

35. நாராயணமூர்த்தி சப்த மாதர்களிடம் நான் உங்களை ஏற்றெடுக்கின்ற காலம் வரும் வரை நீங்கள் எங்கு இருக்க விரும்புகிறீர்கள் என்று கேட்டதற்கு அவர்கள் கூறிய பதில் என்ன?
பூவுலகில் இருக்க விரும்புவதாக கூறினார்கள்.

36. பிரம்மா இறந்த இரண்டு சான்றோர் மக்களுடைய உயிர் எங்கு பத்திரப்படுத்தி வைத்திருப்பதாகக் கூறினார்?
அறம் தழைக்கும் மாகையிலை அறையில்

37. பிரம்மதேவர் இறந்த இரண்டு சான்றோர் மக்களுடைய உயிரை ஏன் கையிலை அறையில் அடைத்து வைத்தாகக் கூறினார்?
நாராயண மூர்த்தியின் பிள்ளைகள் என்று அறிந்த காரணத்தால் ஆகும்.

38. இறந்த இரண்டு சான்றோர்கள் எந்தலோகத்தை சார்ந்தவர்கள் ?
பரலோகத்தை சார்ந்த முனிவர் உயிர் மற்றும் சிவலோகத்தை சார்ந்த வானவர் தன்னுயிரும் ஆகும்.

39. பிரம்மா சோழமன்னால் கொல்ல பட்ட இரண்டு உயிர்களைப் பிறவி செய்யாததற்குக் காரணம் யாது?
நாராயண மூர்த்தியினுடைய பிள்ளைகள் என்றக் காரணத்தினால் ஆகும்.

40. பிரம்மா சான்றோர்களை மறுப்பிறவிச் செய்யாமல் இருந்ததை நாராயணமூர்த்தி ஏற்றுக் கொண்டாரா?
இல்லை. பிரம்மாவிடம் உடனே அந்த சான்றோர்களைப் பிறவிச் செய்ய கூறினார்.

41. நாராயண மூர்த்தி பிரம்மாவிடம் கோபம் கொள்வதற்கான காரணம் என்ன?
சான்றோர் மக்கள் இறந்தவுடன் அன்றே மறுப்பிறவிச் செய்திருந்தால் அவர்கள் எல்லோரும் மற்ற ஐந்து சான்றோர்களும் பிறந்து அவர்களுடைய வழிக்குலங்கள் பெருகி இருப்பது போல் இவர்களும் பெருகி வாழ்ந்திருப்பார்கள் அல்லவா அதை செய்யாமல் விட்டுவிட்டீரே என்றுக் கோபம் கொண்டார்.

42. பிரம்மா இரண்டு சான்றோர் மக்கள் இறந்தவுடன் அவர்களுடைய உயிரை பிறவிச் செய்திருந்தால் எவ்வளவு அவர்கள் பெருகி இருப்பார்கள் என்று கூறினார் நாராயண மூர்த்தி?

கொப்பு நூறாயிரம் போல் பெருகி இருப்பார்கள் என்றார்.

43. சப்த மாதர்கள் எவ்வாறு பிரம்மாவிடமும், நாராயண மூர்த்தியிடமும் கோபம் கொண்டார்கள்?
சப்தமாதர்கள் நாராயண மூர்த்தியிடம் பிள்ளைகளை பாதுகாக்க தவறிவிட்டீர் என்றும், பிரம்மாவிடம் நீங்கள் பிள்ளைகளைப் பிறவி செய்யாமல் தவறு இழைத்து விட்டீர் என்றுக் கோபம் கொண்டார்கள்.

44. சான்றோரை மறுபிறவிச் செய்வதற்கு பிரம்மாவிடம் நாராயணமூர்த்தி இட்டக் கட்டளை யாது?
நாராயண மூர்த்தி பிரம்மாவிடம் நான் வைகையில் இறந்த சான்றோர் மக்களை கூட்டோடு எழுப்பி அவர்களுக்கு தர்மயுக வாழ்வு அருள நிச்சயத்து இருப்பதினால் அவர்களை மீண்டும் அவரவருடைய அவ்வழியில் சான்றோராகப் பிறவிச் செய்ய வேண்டும் என்றுக் கூறினார்.

45. நாராயண மூர்த்தியின் கட்டளைக்கு இணங்கி பிரம்மா சோழமன்னனால் கொல்லப் பட்ட உயிர்களை மறுபிறவிச் செய்தாரா?
ஆம். உடனே பிறவிச் செய்து நருள் பெருக வைத்தார்.

46. நாராயணமூர்த்தி சப்த மாதர்களிடம் தங்களை எங்கே பிறவிச் செய்ய நிச்சயித்து இருப்பதாகக் கூறினார்?
பூலோகத்தில்

47. சப்த மாதர்கள் நாராயண மூர்த்தியிடம் எங்களை பூலோகத்தில் பிறவிச் செய்தால் தாங்கள் வாழ்வதற்கு எப்படி அருள் புரிய வேண்டினார்கள்?
இறப்பு வரக்கூடாது என்று வேண்டிக் கொண்டனர்.

48. சப்த மாதர்கள் நாராயண மூர்த்தியிடம் தாங்கள் வந்து எங்களை ஏற்றுக் கொள்ளுகின்றது வரையிலும் நாங்கள் பூவுலகில் எப்படி வாழ வேண்டும் என்று வேண்டினார்கள்?

சப்த கன்னியர்கள் நாராயண மூர்த்தியிடம் வல்லாத நாயகமே வந்துநீ ரேற்குமட்டும் எங்களுக்கு மாதவிடை மாமணங்கள் மலர்ந்துறக்கம் இருக்கக் கூடாது. நாங்கள் சாதாரண மனிதர்களை போல சீதமாய் மனுவோடு உறவாடிச் சேரக்கூடாது.

ஆடைகளை பலவிதங்களில் அணிந்து உடலை அழகுபடுத்திப் பார்த்து சந்தோச படும் நிலை வரக்கூடாது.
மூடாம லாடை முகமினுக்கிச் சேராமலும்
பாடாமலந்தி சந்தி படுத்துத் துயிலாமலும் நன்மை யறியாமலும் நளிப்பேச்சுக் கேளாமலும் தின்மை யறியாமலும் தீன்ரசத்தைத் தேடாமலும் கொய்து புடவை குக்குளித்துச் சூடாமலும் மயிரு வளர்க்க மனதுவே றெண்ணாமலும் கொங்கை திரளாமலும் கூறுடம்பு வீசாமலும் செங்கனிவாய்த் தேமல் தேகமதில் வீழாமலும்
பக்குவ ஞாயப் பருவம்வந்து வாய்க்காமலும் மிக்குவ மான மிகுவாழ்வு சேராமலும் சுற்றுக் கிளைகள் தொடுத்தன்பு கொள்ளாமலும் ஒற்றுப் பிதற்றாமலும் ஒருவர்முகம் பாராமலும் அல்லல் நோய் பிணிகள் அனுப்போலும் வாராமலும் தொல்லை வாராமலும் சுகமுமிக வாராமலும் இருக்கின்ற வகையில் எங்களைப் பிறவிச் செய்து அனுப்ப வேண்டும். இந்த விதிப்படியே எங்களையும் நீர்படைத்துச் சொந்தமுடன் நீர் வந்து தொட்டெடுத்து நன்மை தந்துஇரச்சிப்போ மென்று எமக்கு உறுதிபண்ணி நீர்பார்த்து தான்படையும் என்று வேண்டினார்கள்.

49. சப்த மாதர்கள் பூவுலகில் எவ்வாறு வாழ்ந்தார்கள்?
சிறு பிள்ளைகளாக, கன்னியர்களாக வாழ்ந்தார்கள்.

50. சப்த மாதர்கள் பூவுலகில் வாழுகின்ற போது உறவினர்களோடு ஒன்று பட்டு வாழ்ந்தார்களா?
இல்லை. சீதமாய் மனுவோர்க்கு உறவாடிச் சேராமல் வாழ்ந்தார்கள்.

51. சப்தமாதர்கள் பூவுலகில் வாழுகின்ற போது தங்களை அழகு படுத்தி வாழ்ந்தார்களா? இல்லை.

52. சப்தமாதர்கள் பூவுலகில் வாழுகின்ற போது மானிடர்களைப் போல் வளரும் நிலையில் வாழ்ந்தார்களா?
இல்லை. என்றும் சிறு பெண்களாகவே வாழ்ந்தார்கள்.

53. சப்தமாதர்கள் பூவுலகில் வாழுகின்ற போது ஏழு கன்னிமார்களும் ஒன்றுபட்டு வாழ்ந்தார்களா?
இல்லை. ஒருவர் முகத்தை மற்றவர் பாராவண்ணம் வாழ்ந்தார்கள்.

54. சப்தமாதர்கள் பூவுலகில் வாழுகின்ற போது நோய்பிணிகள் வந்ததா? இல்லை. அல்லல்நோய் பிணிகள் அனுப்போலும் வாராமல் வாழ்ந்தார்கள்.

55. சப்தநமாதர்கள் நாராயண மூர்த்தியிடம் தாங்கள் எவ்வளவு காலம் என்றும் கன்னிகளாக அதாவது சிறு குழந்தைகளாக வாழ வேண்டும் என்ற வரத்தினை வேண்டினார்கள்?
நாராயணமூர்த்தி சப்தமாதர்களைத் தன்னோடு ஐக்கிய படுத்துகிறது வரையிலும் அதாவது எங்களை தொட்டெடுத்து நன்மை தருகிறது வரை எங்களுக்கு இந்த நிலைமை தொடர வேண்டும் என்று வேண்டினார்கள்.

56. சப்த மாதர்கள் நாராயண மூர்த்தியிடம் தாங்கள் எப்போது வந்து எங்களை தொட்டெடுத்து நன்மை தருவீர் என்று கேட்டதற்கு அவர் வருவதாக கூறிய தருணம் எது?
ஆயிரத்தெட்டு அம்பலமும் ஆன திருப்பதியில் வாயிதமாய் ஓர் அம்பலமும் வளர் பதி ஒன்றாகும். அதாவது பல நாமங்களில் வழிபடும் இறைவழிபாடு ஒன்றாகும் போது வருவேன் என்கிறார். மேலும் கெங்கையுட கண்ணும் கேள்வி மன்னர் தன் சாவும்

சங்கை அழிந்து தலையழிந்த அவ்வாண்டு வருவேன் என்றார்.

57. சங்கை என்பது என்ன?
மன எண்ணம்

58. நாராயணமூர்த்தி எந்ததிசையில் தோன்றி சப்த மாதர்களை ஆட்கொள்ள வருவதாகக் கூறினார்?
தென்சுவர்க்க வடமேற்கு மூலையில் லிங்கம் ஒன்றிலே மூன்று இணையாக தோன்றியபின் எங்கும் பிரகாசம் தோன்றும் அவ்வாண்டே வருவோம் என்றார்.

59. அய்யா நாராயணமூர்த்தி சப்தமாதர்களை தன்னோடு ஐக்கிய படுத்துகிறது வரையிலும் எத்திசையில் கால்நீட்டாதுங்கோ என்றார்?
வடக்கு, மேற்கு, வடமேற்கு

## அகில வாசகம்

மாகாளி வருகை

மாகாளி யென்ற வடபத்தி ரகாளி
ஓகாளி யென்ற உயர்ந்த பலக்காரி
சென்றாள் கயிலை சிவஅய்யா நாதனிடம்
நன்றான கன்னி நாரா யணரிடத்தில்
வந்து விழுந்து மண்ணி லவள்புரண்டு
சந்துபயில் மாயவரே தான்பிழைத்தேன் நானுமக்கு
உன்மக்கள் சான்றோர் உற்றமக்க ளேழதிலே
நன்மையற்ற சோழன் நாடும்பழி ரண்டேற்றான்
கண்டு அடியாள் கரிகாலச் சோழனுட
மன்னுதனில் பன்னிரண்டு ஆண்டுமழை பெய்யாமல்
சாபித்தேன் சோழனூர் தட்டழியப் பட்டுழற
பாவியவ னூரைப் பகலநரி ஓடவைத்தேன்
அல்லாமல் சோழனுட அக்கமறச் சாபமிட்டேன்

பொல்லாத சோழன்வழி பொடிப்படவே சாபமிட்டேன்
இத்தனையுஞ் சொல்லி ஈடழியச் செய்துவிட்டுப்
புத்திரரின் செய்திசொல்லப் புண்ணியரே வந்தேனென்றாள்
அப்போத னாதி அய்யாநா ராயணரும்
செப்போடு வொத்தச் சிவனோடு சொல்லலுற்றார்
கேட்கலையோ யென்றன் கிருபைச் சிவனாரே
ஏற்கலையே யிந்த ஏந்திழையாள் சொன்னதுதான்
பிள்ளைக்கோர் தீங்கு பிழையாம லெப்போதும்
வள்ளல்களை நன்றாய் வளர்ப்பேனா னென்றுசொல்லி
மருட்டி விழித்து வாங்கினாள் மக்களையும்
திருட்டுமொழி பேசும் செய்தியைநீர் கேட்டீரோ
நான்தனிமை யல்லவே நால்பேரு முண்டல்லவோ
தான்தனிமை யாகிடினும் தப்பிதமென் றேபுகல்வார்
வானவருந் தானவரும் மறையவரும் சாட்சியதாய்
நானவளோ டேவாக்கு நவின்றல்லோ தான்கொடுத்தேன்
மக்களுக்கோர் தீங்கு வந்ததே யுண்டானால்
மிக்கச் சிறையுனக்கு மேவு மெனவுரைத்து
ஈந்தோ மதலை இவள்கையில் ஈசுரரே
மாய்ந்தவுட னாகிடினும் வந்துரைத்தா ளோசிவனே
சற்றும் பதறாமல் தானிருந்து இத்தனைநாள்
புத்திமேல் நெஞ்சரிப்பாய் போவோமென் றேகிவந்தாள்
தன்மதலை யென்றால் தலைவைத் திருப்பாளோ
என்மதலைக் கிவள்தான் இடறி விழுவாளோ
ஒருவர்பிள்ளைக் கொருவர் உடைமை யிடுவாரோ
கருதல் விருப்பம் காணுமோ மற்றோர்க்குப்
பெற்றகும்பி யல்லோ பெருங்கனல்போல் மீறுவது
மற்றோர்கள் கும்பி வருந்திக் குமிறிடுமோ
பாவியவன் கொன்று பன்னிரண் டாண்டுவரை
ஆவி யறிந்திலையே ஆரும்வந்து சொல்லலையே
தாய்தகப்ப னில்லார்போல் தயங்கினது கண்டோமோ
சேய்பரனுக் கேராத செய்த பழவினையோ
என்றாதி நாதன் ஏந்திழையைத் தான்பார்த்துச்
சென்றாதி வேந்தர் செடத்தோ டுயிர்திரும்பி
எழுந்திருக்கு மட்டும் இருநீ சிறைதனிலே
குளிர்ந்த திருமேனி கூறினா ரந்தரிக்கு
கேட்டுமா காளி கிலேச மிகவடைந்து
தீட்டும்வட வாமுகத்தில் செய்யவன்னி மண்டபத்தில்

இருந்தாள் தவசு ஈசன் செயலெனவே
வருந்தாத கூளிகணம் வாதைவிடு பேய்களெல்லாம்
நாச்சியார்க் கிச்சிறையால் நமக்கென்ன கேடோகாண்
கேச்சியாய்த் தேசமதுக் கென்னகேடோ அறியோம்
என்று சிலபேய்கள் எண்ணியெண்ணி யேதிரியும்
மூன்று முறுக்குள்ள மூளிப்பே யேதுசொல்லும்
கைவாய்த்து மாகாளி கவிழ்ந்திருந்த ஏதுவினால்
மெய்வாய்த்து தென்று விளியிட்டுக் கொண்டோடும்
இப்படியே பேய்கள் எண்ணஞ்சில திண்ணமுமாய்
அப்படியே காளி அவள்சிறையி லேயிருக்க
நல்லநா ராயணரும் நாடுஞ் சிவனாரை
வல்லப் பொருளே மறைகாணா தோவியமே
காளி சிறைதான் கவிழ்ந்திருக்கும் ஞாயம்வந்தால்
ஆழிவளை வையகத்தில் ஆர்க்குச் சுகம்வாய்க்கும்
முதற்றான் கலியை முடிக்கப் பரகாளி
விதத்தமுள்ள அக்கினியில் மிகவே சிறையிருக்கப்
பார்த்துநா மிங்கிருக்கப் படுமோகா ணீசுரரே
சாற்றும்நீ ரின்னதென்று சத்திகொண்ட ஈசுரரே
உடனேதான் ஈசர் உரைக்கிறா ரன்போரே
கடனோகா ணென்னோடு கலங்குமொழி பேசுவது
நானோ தடுத்தேன் நாட்டுக்கலி தீட்டறுக்க
ஏனோகாண் மைத்துனரே என்னோடு பேசுவது
எப்போ கலியழித்து எங்களுக்கு நற்பேறு
எப்போ தருவீரென்று எண்ணிமிக வாடுறோமே
தீட்டை மிகக்கழித்துச் சிவஞான முத்திதந்து
வீட்டையெப்போ கயிலை விளக்குவீ ரென்றுமிக
தவித்து முகம்வாடித் தானிருக்கும் ஞாயமதும்
குவித்து முகம்மலர்ந்து கொள்ளுவதுங் காணலையோ
என்றே காபரமும் எடுத்துரைக்க எம்பெருமாள்
நன்றென்றா கட்டெனவே நாரணருங் கொண்டாடி

**அகில வாசக உரை விளக்கம்**:

காளி சிறை

சப்த கன்னியர்களின் தவநிலையை நிறைவு செய்து, அவர்களை பூலோகத்தில் பிறவிச் செய்து முடித்து விட்டு, திருமால் திருமகள் லெட்சுமி தேவியுடன் கையிலையில் அமர்ந்து இருக்கும் போது, மகா பெரிய சக்திகளைப் பெற்று, வடக்கே இமயமலை அடிவாரத்தில் அமைர்ந்திருக்கும் வட பத்திரகாளி 'ஓம்' என்கிற மந்திரச் சக்தியை ஓங்காரமாகக் கொண்ட, மிக உயர்ந்த நிலையில் சக்தியின் வடிவமான உயரிய தெய்வம்.

அப்படிப்பட்ட சக்தியுள்ள ஓம் காளியானவள் கைலாயத்தை நோக்கி மிகவும் ஆக்ரோஷமாக சிவலோகத்தில் லெட்சுமி தேவியுடன் அமர்ந்திருந்த ஆதி நாராயணரைக் காண வந்தனர். அப்போது தெய்வ திருமகளாக வீற்றிருந்த மகாலட்சுமியும், மகாவிஷ்ணுவும் தங்கமணி மண்டபத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்போது காளி தேவி வந்து அவர்கள் அடி பணிந்தாள். திருப்பாதங்களில் வணங்கி விழுந்து, தரையில் உருண்டு, புரண்டு கண்ணீர் விட்டு கதறி அழுதாள்.

சர்வலோகத்திற்கும் அதிபதியாக விளங்கும் சர்வவல்லவரே! நான் உமக்குப் பெரும் பிழைச் செய்து விட்டேன். உம்முடைய பிள்ளைகள் ஏழ்வரையும் என்னிடம் முழு நம்பிக்கையோடு வளர்த்து ஆளாக்கும் படித்தந்தீர். நான் அவர்களை நல்லபடி வளர்த்து வரும் வேளையில், இரக்கமற்ற சோழன் இரண்டு பிள்ளைகளைக் கங்கை கரையில் வைத்துக் கொன்றுவிட்டான். உம்முடைய பிள்ளைகளை பாதுகாத்து வந்த நான், அக்கொடூரச் செயலைக் கண்டு கதறி அழுதபடி கவலையைத் தாங்க முடியாமல் கரிகாலச் சோழனுக்கு, நீ செழிப்போடு வாழ்ந்து வரும் நாட்டில் இனி பன்னிரெண்டு ஆண்டுகள், பாரில் மழை பெய்யாமல் பஞ்சம் ஏற்பட்டு பாழாய் போவாய் என்று சாபம் விட்டேன்.

சோழ மன்னனும் அவன் நாட்டில் வாழும் மக்களும் துன்பம் அடைய வேண்டும். பழிபாவம் செய்தவன் நாட்டில் வாழும் எல்லோரும் மழையில்லாமல் வறட்சி ஏற்பட்டு, குடிக்க தண்ணீர் இன்றி நாடிழந்து ஓட வேண்டும். நாடு காடாகி பகலில் நரிகள் ஓட வேண்டும் என்றுச் சபித்தேன். அது மட்டும் அல்லாமல்

சோழ மன்னரின் குடும்பம் அடியோடு அழியும் படி அறம் மாறாத நான் சபித்து விட்டேன்.

பொறுக்க முடியாத பாவச் செயலைச் செய்த நீசனுடைய வம்சாவழி இனத்தவர் ஒரு பொடி கூட இல்லாமல் போக வேதனைப் பொறுக்க முடியாமல் சபித்தேன். இவ்வளவு சாபங்களையும் கொடுத்து அடியோடு அவர்களை அழித்து அலைக்கழியும் படிச் செய்து முடித்து விட்டு, உம்முடைய பிள்ளைகளின் துயரச் சம்பவங்களைச் சொல்ல வளர்த்தத் தாயாகிய நான் பாவத்திற்கு புண்ணியம் கொடுக்கும் உம்மிடம் வந்தேன் என்றாள் மாகாளி!

பத்திரகாளியின் அதிர்ச்சி தரும் கவலையான வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருந்த நாராயணர் செப்பு ஏட்டில் பதிவது போல் சொன்ன சொல் மாறாத ஆதி சிவனிடம் கூறுவார், மைத்துனரே! இதைக் கவனமாய் நீர் கேளும்! பத்திரகாளி சொன்ன வார்த்தைகள் உங்களுக்குக் கேட்டதா? அவள் என்னிடம் புண்ணியம் கேட்கிறாள் சிவமே! அவள் கேட்பது போல் கருணை காட்டி புண்ணியம் கொடுப்பது ஏற்றுக் கொள்ளும் படி இருக்கிறதா?

நான் கொடுத்த பிள்ளைகளுக்கு எந்த வித ஆபத்துக்களும் ஏற்படாமல் வளர்க்க வேண்டும். என் பிள்ளைகளை வாரி வழங்கும் நல்ல கொடையாளிகளைப் போல் நல்ல முறையில் வளர்த்துத் தருவேன் என்று வாக்குத் தந்து, நீர் கூறியது போல் உமது பிள்ளைகளை கண்மணி போல் காப்பேன் என்று பொறுப்போடு என்னிடம் இருந்து வாங்கிச் சென்றாள் ஈஸ்வரரே!

அன்று அவள் சொன்ன வாக்கும்படி நடக்காமல், இன்று என் பிள்ளைகளை மரணத்தில் தள்ளி விட்டு, மன்னனுக்கு நான் சாபமிட்டேன் என்று கூறி சமாளிப்பதைக் கேட்டீரா! என் பிள்ளைகளை நான் அவளிடம் தனிப்பட்ட முறையில் கொடுக்கவில்லை. நான்கு பேர் முன்பாக எல்லார் கண்முன்னால் அல்லவா நான் கொடுத்தேன்.

என் விருப்பத்திற்கேற்ப தனிப்பட்ட முறையில் கொடுத்திருந்தால் என் மேல் தப்பு என்று எல்லோரும் சொல்வார்கள். நான் முப்பத்தி முக்கோடி தேவர்களும். நாற்பத்தி நற்கோடி முனிவர்களும் பிரம்மரிஷிகளும் சாட்சிகளாய் இருக்கும் படியாய் அல்லவா? கொடுத்தேன் . குழந்தைகளை அவளிடம் கொடுக்கும் போது, நான் சத்தியபிரமாணம் வாங்கித் தானே, அவளை நம்பி ஒப்படைத்தேன். என் பிள்ளைகளைக் கவனக்குறைவால் வளர்ந்து ஏதாவது அசம்பாவிதங்கள் நடந்து விட்டது என்றால் தண்டனை உண்டு என்றும் நீ மீண்டும் வெளியில் வர முடியாத படி மிகப்பெரிய கொடுமை விளைவிக்கக் கூடிய சிறை தண்டனை கிடைக்கும் என்றுக் கூறி அல்லவா ஒப்படைத்தேன்.

உன்னை நான் சும்மா விட மாட்டேன் என்றுச் சொல்லி, புத்திமதிகளையும் கூறி குழந்தைகளை அவள் கையில் கொடுத்தேன் ஈஸ்வரரே! என் அன்பு மைத்துனரே கேளும்! பத்திரகாளி என் குழந்தைகளுக்கு மரணம் ஏற்பட்டவுடனே வந்து சொன்னாளா, பாருங்கள்! எதைப் பற்றியும் சிந்திக்காமல், மனதில் எந்தவித பதட்டமும், பயமோ, கவலையோ இல்லாமல் இருந்து விட்டு, இவ்வளவு நாட்கள் கழித்து, சாதாரணமாய் இப்போது வந்து தெரிவிக்கிறாள். அவளுடைய மனசாட்சி மனதில் குத்திக் கொண்டே இருந்ததால் இப்போது என்னிடம் சொல்ல வந்திருக்கிறாள்.

அவள் பெற்றப் பிள்ளைகளாக இருந்திருந்தால், கொன்றவன் மன்னனாக இருந்தாலும் அவனது தலையைக் கொய்யாமல் இவள் தலைச் சாய்ந்து படுத்திருப்பாளா? யாரோ பெற்ற பிள்ளைகள் என்றதால் தானே இவ்வளவு பொறுமையாகக் கண்டுக் கொள்ளாமல் இருந்து விட்டாள். ஒருவர் பிள்ளைகளுக்காக வேறு ஒருவர் தன்னுடைய உரிமைகளை இழந்து உதவிச் செய்ய துணிவார்களா!

தான் பெற்ற பிள்ளைகளை பொறுப்போடு வளர்ப்பது போல் , மற்றவர்கள் பிள்ளைகளை உரிமையோடு வளர்க்க மாட்டார்கள் என்பது இப்போது புரிகிறது. சிவபெருமானே!

குழந்தைகளைப் பெற்றெடுத்த தாயின் வயிறுதான் வேதனைத் தாங்காமல் தீயைப் போல பற்றி எரியும்.

பெறாத வயிறு தணிந்து தான் போகும் அவளுக்கு ஆக வேண்டியது என்ன! மனவருத்தம் ஏற்பட்டு வயிறு குமுறி எரிந்திடுமா ஈஸ்வரரே! அது போல கொடும்பாவியாகிய சோழ மன்னன் கொன்றது மாற்றான் பிள்ளை தானே என்று என்னுடைய பிள்ளைகளைக் கொன்று விட்டான்.. பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்து போய்விட்டது. இத்தனை காலம் ஆன பிறகும் கூட அவர்களது ஆன்மா எங்கே இருக்கிறது என்று யான் அறியவில்லை. யாரும் அதைப்பற்றி என்னிடம் சொல்லவும் இல்லை. கருத்தோடு என் பிள்ளைகளை வாங்கிச் சென்று, வளர்த்த காளியும் என்னிடம் பிள்ளைகள் இறந்த தகவல்களைச் சொல்லவில்லை.

பாவம் என் பிள்ளைகள். தாயும், தகப்பனும் இருந்தும் அனாதை குழந்தைகள் போல் தத்தளித்து ஏங்கி இருப்பார்கள், படைத்த பரமசிவனுக்கே தெரியாமல் போகக் கூடிய அளவில் நான் முன் ஜென்மத்தில் செய்த முன்வினைப் பயனா? என்று நினைத்து ஆதி நாராயணர் ஆத்திரம் அடைந்து பத்திரகாளியிடம் கோபம் கொண்டார். பத்திரகாளியே ! மன்னர்களாக வாழ்ந்த என்பிள்ளை இரண்டு பேர்களும், மீண்டும் உயிரோடு பூலோகத்தில் பிறந்து எழும்பும் காலம் வரை நீ மீளாச் சிறையில் சிறைக் கைதியாய் இருக்க வேண்டும் என்று சபித்தார்.

சாந்த குணமுள்ள திருமால் பிள்ளைகளின் பிரிவை தாங்க மாட்டாமல், சாந்த குணத்தை இழந்து சமாதனமில்லாமல் கொடும்சாபம் இட்டார். இவ்வாறு திருமால் கோபம் கொண்டு சபித்ததைக் காதில் கேட்ட அம்மை காளி, பயந்து வருத்த முற்றாள். எவ்வாறு என்றால், சோழ மன்னனால் கொல்லப்பட்ட என்னுடைய சான்றோர் பிள்ளைகள் ஜடத்தோடு எழும்புகின்ற நாள் வரையிலும் நீ சிறையாக இருக்க வேண்டும் என்று நாராயணமூர்த்தி தீட்டு விடவா முகத்திலே செய்ய வன்னி மண்டபத்தில் சிறையாக இரு என்றுச் சொல்லி காளிதேவியை சிறை வைப்பதற்கு உத்தரவிட்டார் .

இதை கேட்ட காளிதேவி மிகவும் மனம் வருந்தி செய்வதறியாமல் திகைத்து தீட்டு வடவா முகத்தில் செய்ய வன்னி மண்டபத்தில் ஈசன் செயல் எனவே சிறையாக இருந்தாள். அப்போது கூளிக்கணங்கள் பேய்கள், வாதைகள் எல்லாம் நாச்சியாராகிய நம்முடைய காளிதேவிக்கே இப்போது சிறை வாய்த்துவிட்டது என்றால் இந்த தேசத்தில் என்ன கேடு வரப் போகின்றதோ தெரியவில்லையே! நமக்கு மேலும் வாழ்வு இங்கே இருக்கப் போவதில்லை என்று மனம் வருந்தியது.

ஆனால் சில மூளி பேய் கணங்கள் ஏது சொல்லும் என்றால், மாகாளிக்கு சிறை வாய்த்து கவிழ்ந்திருக்கின்ற காரணத்தினால் எல்லாம் நமக்கு இனி ஏதுவாக அமைந்து விட்டது. நாம் நினைத்தபடி எல்லாம் செய்ய முடியும் என்று சொல்லி அந்த பேய் கணங்கள் எல்லாம் அங்கு ஆட்டம் பாட்டத்தோடு துள்ளி குதித்தன.

அப்போது நாராயணர் சிவபெருமானிடம் வல்ல பொருளை மறை காணாத ஓவியமே காளி சிறையில் கவிழ்ந்திருக்கின்ற காரணத்தினால் இந்த உலகில் வாழுகின்ற யாருக்கும் சுகம் வாய்ப்பது கிடையாது. அது மட்டுமல்ல காளி சிறையில் கவிழ்ந்திருக்கின்ற இந்த நாள் முதல் இந்த உலகில் யாரும் சுகமாக வாழ முடியாது. எனவே கலியை முடிப்பதற்குரிய வழியை நாம் விரைவில் பார்க்க வேண்டும். இந்த காளி தேவி அக்கினியிலே சிறையாக இருக்கின்ற காரணத்தினால் யாரும் சுகமாக இங்கே இருக்க முடியாது.

ஆகவே அந்த கலிய அழிப்பதற்குரிய வழியை பார்க்க வேண்டும் என்று அங்கே சிவபெருமானோடு கூறினார். உடனே சிவபெருமான் மாயவரே! தூயவரே! என்னோடு நீங்கள் மனம் கலங்கி இப்படி உரைப்பதற்கு காரணம் என்ன? நான் உங்களை கலியழிக்க வேண்டாம் என்று தடுத்தேனா? நாட்டுக்கலி தீட்டு அழிப்பதற்கு ஏது காண் மைத்துனரே என்னோடு பேசுவது. எப்போது கலியெழுத்து நற்பெயர் தாங்கள் எங்களுக்கு அருளுவீர்கள் என்று நாங்கள் எண்ணின் மிக வாடுகிறோம். ஆகவே இந்த தீட்டை அழித்து சிவஞானமுக்தி தந்து கைலையாகிய மேல் வீட்டை எங்களுக்கு எப்போது

அருளுவீர்என்று தவித்து முகம் வாடி நாங்கள் இருக்கின்றோம். எங்களுடைய மன வட்டத்தை போக்குவதற்கு தங்களால் மட்டும்தான் முடியும். எனவே அதற்குரிய வழிமுறைகளை தாங்கள் உடனடியாக பார்க்க வேண்டும் என்று சிவபெருமான் நாராயண மூர்த்தியிடம் கூறுகின்றார்.

**வினா விடை**:-

1. மாகாளியம்மை சான்றோர் மக்களை சோழ மன்னன் கொன்றச் செய்தியை எத்தனை ஆண்டுகள் கழித்து நாராயண மூர்த்தியிடம் கூறினாள்?
   12 ஆண்டுகள் கழித்து

2. மாகாளியம்மை சோழ மன்னனுக்கு கொடுத்த சாபம் எது?
   12 ஆண்டுகள் சோழனூரில் மழை பொழிய கூடாது. சோழனூர் தட்டழியப் பட்டுழற வேண்டும். சோழமன்னுடைய நாட்டில் பகலில் நரி ஓட வேண்டும். சோழன் வழி குலங்கள் பொடிப்படவேண்டும்.

3. மகாளியிடம் சான்றோர் மக்களை ஒப்படைக்கின்ற போது யார் யார் இருந்தார்கள்?
   சிவப்பெருமான், பிரம்மா, நாராயண மூர்த்தி, சங்கத்தார்கள், மற்றும் மேலோகவாசிகள்.

4. நாராயண மூர்த்தி மாகாளியிடம் சான்றோர் மக்களை வளர்ப்பதற்கு ஒப்படைக்கின்ற போது பிள்ளைகளுக்கு ஏதாவது தீங்கு வந்தால் என்ன தண்டனை கிடைக்கும் என்று கூறி பிள்ளைகளை ஒப்படைத்தார்?
   கொடும் சிறைவாசம் கிடைக்கும் என்று கூறி பிள்ளைகளை ஒப்படைத்தார்.

5. மாகாளியம்மை சான்றோர் மக்கள் இறந்த செய்தியை நாராயணமூர்த்தியிடம் கூறியதைக் கேட்டு நாராயணமூர்த்தி சிவபெருமானிடம் கூறிய பதில் யாது?

நாராயணமூர்த்தி சிவபெருமானிடம் மாகாளியிடம் நான் குழந்தைகளை ஒப்படைக்கின்ற போது நான் தனியாளாக இல்லை. நீங்கள் எல்லோரும் என்னோடு இருந்தீர்கள். அப்போது பிள்ளைகளுக்கு எந்த தீங்கும் வராமல் பாதுகாக்க வேண்டும் என்றுக் கூறி ஒப்படைத்தேன். ஆனால் அந்த பிள்ளைகளை பாதுகாக்க தவறியதோடு மட்டுமல்லாமல் பிள்ளை இறந்தச் செய்தியை உடனே வந்து சொல்லவில்லை. இத்தனை காலம் கழித்து அவள் நெஞ்சழு தத்தோடு இருந்து விட்டு வந்து கூறுகிறாள். அவளுடைய பிள்ளையாக இருந்தால் இப்படி இருப்பாளா? வேற்று ஒருவர் பிள்ளையாக இருக்கின்ற காரணத்தினால் தானே இப்படி பிள்ளையை கவனிக்காமல் இருந்தாள் என்று சிவபெருமானிடம் கூறினார். ஆகவே பிள்ளைகளை பாதுகாத்து வளர்க்க தவறியதால் சிறைத்தண்டனை வழங்கப் போகிறேன் என்றார்.

6. மாகாளியை நாராயணமூர்த்தி எங்கு சிறையாக இருக்க வைத்தார்?
   தீட்டு வடவா முகத்தில் செய்ய வன்னி மண்டபத்தில் சிறை வைத்தார்.

7. மாகாளி அம்மைக்கு எவ்வளவு காலம் சிறை தண்டனை வழங்கப்பட்டது?
   இறந்த சான்றோர்கள் செடத்தோடு உயிர் பெற்று எழும்பும் வரை ஆகும்.

8. மாகாளி சிறையாக இருக்கின்ற போது யாரை மனதில் நினைத்து தவமாக இருந்தாள்?
   எல்லாம் சிவன் செயல் என்று சிவபெருமானை நெஞ்சில் வைத்துச் சிறையாக இருந்தாள்.

9. மாகாளி சிறையாக இருக்கின்ற போது வருந்தியவர்கள் யார் யார்? கூளிக்கணம்,வாதை,பேய்கணங்கள்

10. மாகாளி சிறையாக இருப்பதை அறிந்த பேய்கள் கூளிக்கணங்கள் எல்லாம் என்ன கூறி வருந்தின?

மாகாளி சிறையாக இருப்பதால் நாட்டுக்கு என்ன கேடு வரப்போகிறதோ என்றுக் கூறி வருந்தின.

11. மாகாளி சிறையில் இருப்பதை பார்த்து சந்தோஷப்பட்டவர்கள் யார் யார்?
மூளிப்பேய்கள் எல்லாம் மாகாளி சிறையாக இருப்பதால் நமக்கு எல்லாம் மெய்வாய்த்து என்று எண்ணிச் சந்தோசப்பட்டன.

12. சிவப்பெருமான் காளி சிறையாக இருக்கின்ற செய்தியை அறிந்து நாராயண மூர்த்தியிடம் கூறியது யாது?
காளி சிறையாக இருப்பதால் இந்த உலகில் யாருக்கும் சந்தோஷம் வாய்க்கப் போவது கிடையாது. ஆகவே விரைவில் கலிஅழிக்க வழிப்பாரும் என்று வேண்டிக் கொண்டார்.

13. சிவப்பெருமான் நாராயணமூர்த்தியிடம் வைத்த வேண்டுகோள் யாது?
விரைவில் நாட்டுக்கலி தீட்டறுத்து எங்களுக்கு சிவஞான முக்தி தந்து கையிலை வீட்டை காண வழிச்செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தார்

## அகில வாசகம்

### லெட்சுமி தேவியை மகரமாய் மாற்றுதல்

லட்சுமியைத் தானழைத்து ஏதுரைப்பா ராதிமுதல்
சச்சுடராய் நின்ற தருணத் திரவியமே
இதுமுன் பிறப்பு இருந்தா யுருப்பிணியாய்
மதுவினியப் பெண்ணே மாயக் கலியறுக்க
நான்நிச்சித் திருப்பதினால் நாயகியே நீயுமொரு
பூனிரைச்சப் பொன்மகரப் பெண்மயில்போல் நீவளர
அலையி லறுமுகவன் அவன்பதியி னாழிதனில்
நிலையிலே நின்று நீவளரு கண்மணியே
நீவளரச் சூழ நிறைந்ததங்க மாமணியால்

பவளக்கால் மண்டபமும் பவளமணி மேடைகளும்
ஆனிபொன் வைரம் அதுவளரும் மண்டபமும்
தேனினிய மண்டபமும் தேரும்பூங் காவனமும்
சூழ அரங்குவைத்துத் தெய்வரம்பை சூழவைத்து
காளமொடு பேரிகையுங் கண்ணாளர் சூழ்ந்துநிற்க
அகரத் தெருவும் அரம்பையர்கள் தந்தெருவும்
சிகரத் தெருவும் சேர்த்துவைப்பே னுன்சூழ
நித்தம் வலம்புரிகள் நின்றுவுனைச் சூழ்ந்து
தித்தியென வேமுழங்கி சேவிக்க வைத்திடுவேன்
கோட்டைகள் சூழக் கோடிமண்டப முகித்து
வீட்டலங் காரம்போல் வேலையிலுந் தருவேன்
உந்தனுட மேனி உரைக்கெளிதாத் தங்கமெனச்
செந்தழல்போல் மகரச் சிலைபோல் வளர்ந்திருநீ
நானும்சிவமும் நல்தவசியிலே வருவோம்
நீனும் தவமிருந்த நிலமையதுகேட்டு
நாரணரை வைகுண்டமென நம்மகவாய் தானாக்கி
சீரான தெச்சணத்தில் சிறையும் இருக்கவைத்து
நாட்டு நருளின் நகர்சோ தனைபார்த்துத்
தீட்டுக் கலியறுத்துச் செவ்வுமனு தானெடுத்துத்
நாடுன் மகன்றனக்கு நல்லமுடியுங் கொடுத்துத்
தேடுந் தர்மச்சீமை செலுத்தசெங் கோல்கொடுத்து
அரசாள வைக்கவொரு ஆண்பிள்ளை நீபெறவே
துரைசானி போவெனவே சொன்னார்கா ணம்மையுடன்
கேட்டுமிக லட்சுமியும் கிளிமொழிவாய் தான்திறந்து
நாட்டுக் குடையவரே நாரா யணப்பொருளே
மகரச் சிலையாய் வாரிதனில் நான்வளர்ந்தால்
சிகரநற் கோபுரமே திருவுளமே நீர்தானும்
வருகுவ தென்னவித மாக வுருவெடுத்து
அருகில் நீர்வருக அடையாள மென்னவென்றாள்
அப்போது அய்யா ஆனந்த மேபெருகி
செப்புகிறோ மென்று திருவோ டிதுவு ரைக்க
மூன்று சடையில் முறுக்குச்சடை யொன்றெனவும்
பண்டுள்ள சூரியர்கள் பதிந்திருக்கு மென்விழியில்
நெற்றி தனில்பிறையும் நெடியவட அக்கினியும்
சுற்றிக் கனல்மேனி துய்யமாற்றெண் ணாயிரமாம்
பளிரெனவே லோகம் பதினாலுக் கோருருவாய்த்
துளிரெனவே வாரிச் சூழல வெகுகனலாய்க்

காதம் பன்னிரண்டில் கண்டகலி யன்றெரிய
தீதக் கனலாய்ச் செயகுண்டமும் பதித்துக்
காலில் தர்மமணியைக் கலிரெனவே தண்டையிட்டு
மேலில்பல வேதமதை மின்னுடம்பாக விரித்துப்
பெண்ணரசே நான்வருகும் பெருமைக் கடையாளம்
கண்ணரசே நீயுமென்மேல் கருத்திருந்தால் பிழைப்பாய்
இப்படியேநான் உன்னருகே வருவேன்காண்
அப்படியே அங்கிருந்து அன்றுதவசு பண்ணி
நாரணரை வைகுண்டராய் நல்மகவாய் எடுத்து
சீரான தெட்சணத்தில் சிறையுமிருக்க வைத்து
நாட்டுச் சோதனைக்கு நாமனுப்பித் தாம்பார்த்துக்
கோட்டிசெய்த பாவி குறுங்கலியைத் தானெரித்து
அதின்மே லுனக்கும் எனக்குமிகு ஆனந்தம்
மதுவாக ஈன்ற மதலைநா டாளுமடி
என்று பிறவிக்கு ஏற்றஅடையா ளமுரைத்து
நன்றினிய மாதே நடப்பதற்குச் சங்கடமேன்
உடனேதான் லட்சுமியும் உரைக்கிறா ளாதியுடன்
திடமான கோவே செய்ய மணிவிளக்கே
என்னை மகரச் சிலைபோல் பிறவிசெய்ய
என்ன விதமாய் இசைவீர்கா ணென்கோவே
என்றுரைக்க அம்மை ஏதுரைப்பா ரெம்பெருமாள்
நன்றுநன்று பெண்ணே நமக்குத்தொழி லோகடிது
அலையி லுனையும் ஆமதியப் பொன்மகரச்
சிலைபோல் வளருவெனச் சிந்தித்தா ரெம்பெருமாள்
வடகயிலை வாசலிலே வந்தலைந்த வாரிதிரை
மடமடென வந்து வாரியெடுத் தாயிழையைச்
செந்தூ ரலைவாரி திரைமே லெடுத்திருத்தி
அந்தூரு வாரி அம்மை தனையெடுத்துச்
சந்தன வாரி சமுத்திரத்தி னுள்ளிருத்திப்
பந்தியாய் வைத்த பரமமணிக் கோட்டையதுள்
தெய்வரம்பை சூழத் தேவரெல்லா மோலமிட
மெய்பரமக் கன்னியர்கள் மிகுவாய்க் குரவையிட
இடம்மான மெக்காளம் டகுடகா வென்றிடவே
மடம்மான வாத்தியங்கள் மடமடென வேயதிர
வலம்புரிக ளெல்லாம் மாதுவந்தா ளென்றூத
சிலம்புனைந்த ரத்தினங்கள் சில்விளக் கேந்திநிற்க
முத்துகள் சிப்பி முன்வந் தொளிவீச

கொத்துக் கொத்தாகக் கோமேதகஞ் சூழ
கன்னிமா ரெல்லாம் கால்கவரி வீசிநிற்க
தன்னிகரில் லாமறையோர் சாஸ்திரங்க ளோதிநிற்க
மகரச் சிலையாள் மாதுதிரு லட்சுமியாள்
சிகரகோ புரத்தாள் திருவுருவந் தான்வளர்ந்தாள்
பார்பதி மாதுமையும் பரமேஸ்வரித் தாயும்
சீர்பதியு மங்கே தினமூன்று நேரம்வர
ஈஸ்வரனும் வேதா இவர்கள் தினம்வரவே
வாசவனும் வானவரும் வந்துநிதம் போற்றிசெய்ய
செய்ய அமரரெல்லாம் சிவசிவா வென்றுநிற்க
வெய்யவனுஞ் சந்திரனும் மெல்லிபதம் போற்றிநிற்க
புஷ்ப மலர்தூவிப் பொன்னுலகத் தோர்சூழ
செப்பமுள்ள மகரச் சிலைபோல் திருவளர்ந்தாள்
மாதுதிரு லட்சுமியாள் மகரச் சிலைபோலே
ஒது மணியலைக்குள் ஒவியம்போ லேவளர
மாதை மகரச் சிலையாய் வளரவிட்டுத்
தாதணியும் நாதன் சங்கரரோ டேதுரைப்பார்
கூட்டுக்கிளி போலிருந்த கொடியிடையைப் போகவிட்டு
நாட்டி லிருப்பேனோ நம்முடைய மைத்துனரே
சீதை மகரச் சிலைபோ லங்கேவளரப்
பாதையது தேடாமல் பதிந்திருக்க ஞாயமுண்டோ
அப்போ துசிவனார் அவரேது சொல்லலுற்றார்
செப்போடு வொத்த திருமாலே நீர்கேளும்
நடத்தும்படி யுள்ள ஞாயமெல்லா மிப்போது
சடைத்து இருக்காமல் தானடத்து மென்றுரைத்தார்

## அகில வாசக விளக்கம்:

மாகாளி அம்மைக்கு சிறையைக் கொடுத்துவிட்டு அதன் பிறகு சிவபெருமானோடு எம்பெருமான் அடுத்து கலியழிப்பதற்கு என்ன செய்யலாம் என்று கேட்க அவர் தாங்கள் நிச்சயித்த படி நடத்திக் கொள்ளுங்கள் என்று சொன்னவுடனே அம்மை லெட்சுமா தேவியை நாராயண மூர்த்தி அழைக்கின்றார். லெட்சுமி தேவியிடம் சொல்லுகின்றார் சச்சுடராய் நின்ற தருணத் திரவியமே முன் பிறப்பில் அதாவது துவாபர யுகத்தில் நீ உருப்பிணியாக இருந்தாய். இப்போது மாயக்கலியை

அழிப்பதற்காக நான் நிச்சயத்து இருக்கின்ற காரணத்தினால் தாயே நீயும் ஒரு பூனிரச பொன்மகர பெண்மையில் போல் வளர வேண்டும்.

திருச்செந்தூரில் அலையில் ஆறுமுகனாகிய கந்தப்பெருமான் எழுந்தருளியுள்ள அந்தப் பதியில் இருக்கின்ற ஆழியாகிய கடலில் சென்று நீ மகர சிலையாக வளர வேண்டும். அப்படி நீ வளருகின்ற அந்த இடத்தினுடைய சிறப்பை நான் கூறுகின்றேன் கேள் என்று மகர அறையினுடைய சிறப்பை எம்பெருமான் கூறுகின்றார். எப்படி என்றால் நீ வளர இருக்குகின்ற அந்த மகர அறையானது தேனினிய மண்டபமும், தேரும் சிங்காசனமும் சூழ அரங்கு வைத்து தெய்வ ரம்பை சூழ வைத்து காலமொடு பேரிகையும் கண்ணாளர் சூழ்ந்து நிற்க அகர தெருவும், அரம்பையர்கள் தன்தெருவும் சிகரத்தெருவும் உன்னை சூழ்ந்து இருக்கும் படிச் சேர்த்து வைப்பேன். மேலும் சக்கர படையும் முரசொலிபவர்களும் உன்னை சூழ்ந்து பல தோழியர்களும் நின்று பணிவிடை செய்யும் படிச் செய்வேன்.

வலம்புரி சங்குகள் உன்னை சூழ்ந்து நின்று தித்தி தித்தி எனவே முழங்கி நின்று சேவிக்க வைத்து விடுவேன். கோட்டைகள் சூழ கொடிமண்டபமும் அமைத்து வைகுண்ட வீட்டில் எவ்வாறு அலங்காரம் செய்ய பட்டு உள்ளதோ அது போலும், வைகுண்ட வீட்டில் இருக்கும் போது எப்படி எல்லோரும் பணிவிடைகள் செய்தார்களோ அது போல் மகர அறையில் இருக்கின்றப் போதும் உனக்கு அந்த சிறப்பை நான் தருவேன் என்று லெட்சுமி தேவியிடம் நாராயணமூர்த்தி கூறினார்.

இவ்வாறு மகர அறையின் சிறப்பை எடுத்துக் கூறிய எம்பெருமான் அந்த மகர அறையில் சென்று எப்படி இருக்க வேண்டும் என்பதை எடுத்துக் கூறுகின்றார் அதாவது "உந்தனுட மேனி உரைக்கெளிதாக தங்கமென செந்தழல் போல் மகர சிலை போல் வளர்ந்திரு நீ" என்று ஜோதி ரூபத்தில் வளர்ந்து வரும் படி லெட்சுமி தேவியிடம் நாராயணமூர்த்தி கூறினார். அம்மை லெட்சுமா தேவியை மகராசலையாக வளர விட்டுவிட்டு சிவபெருமானோடு எம்பெருமான் பேசுகிறார். அந்த வேளையில் அடுத்து நடக்க இருக்கின்ற செய்தியை பற்றி

கூறுகிறார். அப்போது சிவ பெருமான் சொல்லுகின்றார். என்ன என்ன காரியங்கள் கலியழிப்பதற்காக செய்ய வேண்டியதும் நடத்த வேண்டியதும் இருக்கின்றதோ அவற்றையெல்லாம் உடனடியாக நாள் கடத்தாமல் உடனே செய்யும் படி கட்டளை இடுக்கிறார். அந்த நேரத்தில் நாராயணமூர்த்தி அகமகிழ்ந்து சிவபெருமானோடு சொல்லுகிறார் நல்லது தான் ஈஸ்வரரே நாம் அடுத்து சம்பூர்ண தேவனின் தவத்தை நிறைவேற்ற வேண்டும் என்று சொல்லி சம்பூர்ண தேவனின் தவநிலையைப் பற்றி எடுத்துரைக்கிறார்.

**வினா விடை**:-

1. அய்யா நாராயணமூர்த்தி கலி அழிப்பதற்காக முதலில் செய்தது யாது?
லெட்சுமி தேவியை அழைத்து மாயகலியறுக்க நிச்சயித்து இருப்பதால் நீ பூனிரசப் பொன்மகரப் பெண்மயில் போல் வளர வேண்டும் என்றார்.

2. அய்யா நாராயணமூர்த்தி அம்மை இலட்சுமாதேவியை எங்குச் சென்று மகர சிலையாக வளர கூறினார்?
ஆறுமுகன் வாழும் ஆழியாகிய கடலில்.(திருச்செந்தூர் திருப்பாற்கடலில்).

3. மகர அறையின் சிறப்பை விவரி?
நாராயணமூர்த்தி லெட்சுமி தேவியிடம் நீவளரச் சூழ நிறைந்ததங்க மாமணியால் பவளக்கால் மண்டபமும் பவளமணி மேடைகளும் ஆனிபொன் வைரம் அதுவளரும் மண்டபமும் தேனினிய மண்டபமும் தேரும்பூங் காவனமும் சூழ அரங்கு வைத்துத் தெய்வரம்பை சூழவைத்து காளமொடு பேரிகையுங் கண்ணாளர் சூழ்ந்துநிற்க அகரத் தெருவும் அரம்பையர்கள் தந்தெருவும் சிகரத் தெருவும் சேர்த்துவைப்பேனுன் சூழ நித்தம் வலம்புரிகள் நின்றுவுனைச் சூழ்ந்து தித்தியென வேமுழங்கி சேவிக்க வைத்திடுவேன் கோட்டைகள் சூழக் கோடிமண்டப முகித்து

வீட்டலங் காரம்போல் வேலையிலுந் தருவேன் உந்தனுட மேனி உரைக்கெளிதாத் தங்கமெனச் செந்தழல்போல் மகரச் சிலைபோல் வளர்ந்திரு நீ என்று இலட்சமி தேவியிடம் கூறினார்.

4. காளம் என்பது என்ன?
நல்வினைக்கு காரணமானப் பெரும்மழை அல்லது சக்கரப்படை

5. பேரிகை என்பது என்ன?
முரசு

6. நித்தம் வலம்புரி சங்குமுழங்கி இருக்கும் இடம் எது?
திருப்பாற் கடலில் அமைந்துள்ள மகர அறையில்.

7. நாராயண மூர்த்தி செந்தழல் போல் வளர்ந்து வர யாரிடம் கூறினார்?
அம்மை இலட்சுமா தேவியிடம்

8. நாராயண மூர்த்தி லெட்சுமா தேவியை ஏன் மகர சிலையாக வளர வைத்தார்?
கலியுகத்தை முடிப்பதற்கு கண்ணான ஒரு உயிரை உன்னுடைய வயிற்றில் பிறவி செய்ய வேண்டும் என்றும், நாட்டு நருளின் நகர் சோதனை பார்த்து தீட்டு கலியறுத்து செவ்வுமனு தானெடுத்து நாடும் மகன் தனக்கு நல்ல முடி கொடுத்து தேடும் தர்மச் சீமை செலுத்த செங்கோல் கொடுத்து சீமை அரசாள வைக்க ஒரு ஆண்பிள்ளை நீ பெற வேண்டும் என்பதற்காக மகர சிலையாக வளர விட்டார்.

9. அம்மை லெட்சுமாதேவி நாராயணமூர்த்தியிடம் நான் மகர சிலையாக திருப்பாற் கடலில் வளர்ந்து வந்தால் நீங்கள் எப்போது வந்து என்னை ஆட்கொள்வீர்கள் அதற்கான தருணம் என்ன என்று கேட்டதற்கு நாராயணமூர்த்தி கூறிய தருணம் எது?

மூன்று சடையில் முறுக்குச்சடை யொன்றெனவும் பண்டுள்ள சூரியர்கள் பதிந்திருக்க மென்விழியில் நெற்றி தனில் பிறையும் நெடியவட அக்கினியும் சுற்றிக் கனல்மேனி துய்யமாற்றெண் ணாயிரமாம் பளிரெனவே லோகம் பதினாலுக் கோருருவாய்த் துளிரெனவே வாரிச் சூழல வெகுகனலாய்க் காதம் பன்னிரண்டில் கண்டகலி யன்றெரிய தீதக் கனலாய்ச் செயகுண்டமும் பதித்துக் காலில் தர்மமணியைக் கலிரெனவே தண்டையிட்டு மேலில்பல வேதமதை மின்னுடம்பாக விரித்துப் பெண்ணரசே நான்வருகும் பெருமைக் கடையாளம் என்று நாராயணமூர்த்தி அம்மை லெட்சுமா தேவியிடம் கூறினார்.

10. நாராயண மூர்த்தி லக்ஷ்மாதேவியிடம் வைகுண்ட அவதாரம் நிகழ்த்த தான் எந்த ரூபத்தில் வருவதாக கூறினார்?
    ஜோதிசொருபனாக

11. பொருத்துக:-
    சூரியன் – விழியில்
    பிறை – நெற்றியில்
    தர்மமாமணி- காலில்
    வேதம் – உடலில்

12. மூன்று சடையில் முறுக்கு சடை-----------(யொன்றெனவும்)
13. பண்டுள்ள சூரியர்கள்பதிந்திருக்கும்---------- (மென்விழியில்)
14. நெத்திதனில்-------- (பிறையும்) நெடியவடவக்கினியும்
15. சுத்திகனல் மேனியது மாத்து------- (எண்ணாயிரமாய்)
16. நாராயணமூர்த்தி வைகுண்ட அவதாரம் நிகழ்த்த வரும் போது ஜோதி சொரூபனாக ஈரேழு பதினான்கு லோகங்களிலும் எத்தனை உருவாக இருக்கிறார்?
    ஒரு உருவாக

17. துரைசானி என்பதன் பொருள்என்ன?
    தலைவி என்பதாகும்.

18. நாராயண மூர்த்திதுரைசாமி என்றுயாரை கூறினார்?

லெட்சுமி தேவியை

19. நாராயண மூர்த்தி லெட்சுமிதேவியிடம் மகர சிலையாக எங்கு வளர கூறினார்?
வாரிதனில்(கடலில்)

20. நாராயண மூர்த்தி வைகுண்ட அவதாரம் நிகழ்த்த வரும் போது கடலின் நிலை எவ்வாறு இருந்தது?
கனலாக இருந்தது.

21. காதம் என்பது என்ன?
ஏழரை நாழிகை வழி தொலைவு (16 கிமீ அல்லது 10 மைல் தூரம்)

22. காதம் பன்னிரெண்டு எவ்வளவு தூரம்?
192 கிமீ அல்லது 1200 மைல்கள்

23. அய்யா நாராயண மூர்த்தி மேலில் மின்னுடம்பாக விரித்தது எது?
வேதத்தை

24. அய்யா நாராயண மூர்த்தி காலில் தண்டையாக அணிந்தது எது?
தர்மமாமணியை

25. அய்யா நாராயண மூர்த்தி லக்ஷ்மாதேவியிடம் இட்ட கட்டளை யாது?
கண்ணரசே நீயும் என் மேல் கருத்தாய் இருந்தால் பிழைப்பாய் என்றார்.

26. வைகுண்ட அவதாரத்தின் நோக்கம் என்ன?
நல்ல மக்களை சோதித்து எடுத்து நற்பேறு அருளவும், கோட்டிச் செய்து மக்களை துன்புறுத்தும் குறுங்கலியை அழிப்பதற்கும் ஆகும்.

27. லெட்சுமி தேவி நாராயண மூர்த்தியிடம் எப்படி என்னை மகர சிலை போல் பிறவிப் செய்வீர் என்றவுடன் நாராயணமூர்த்தி செய்தது என்ன?
அலையிலுனையும் ஆமதியப் பொன்மகர சிலைப்போல் வளர வேண்டும் என்றுச் சிந்தித்தார்.

28. லெட்சுமி தேவி நாராயண மூர்த்தியிடம் எப்படி என்னை மகர சிலை போல் பிறவி செய்வீர் என்றவுடன் நாராயணமூர்த்தி கூறியது என்ன?
நன்று நன்று பெண்ணே நமக்கு தொழிலோகடிது என்றார்.

29. "நன்று நன்று பெண்ணே நமக்கு தொழிலோ கடிது " இந்த வாக்கியத்தில் "தொழிலோகடிது என்பது கடினமான செயலைக் குறிக்கிறதா இல்லை விரைவை குறிக்கிறதா?
விரைவை குறிக்கும்.

30. நாராயண மூர்த்தி "அலையிலுனையும் ஆமதியப் பொன்மகர சிலைப்போல் வளர வேண்டும்" என்று சிந்தித்தவுடன் நிகழ்ந்தது யாது?
செந்தூர் அலைவாரி திரையானது வடகைலை வாசலிலே வந்து அம்மை லெட்சுமி தேவியை அழைத்து சென்றது.

31. செந்தூர் அலை வாரி திரையானது அம்மை லெட்சுமா தேவியை அழைத்து வந்து செய்தது என்ன?
சந்தனவாரி சமுத்திரத்தின் உள் இருந்த பரமமணிக் கோட்டையில்கொண்டு இருத்தியது.

32. சந்தனவாரி சமுத்திரத்தில் அமைந்துள்ள கோட்டை எது?
பரமமணிக் கோட்டை

33. பரமமணிக் கோட்டையின் சிறப்பு என்ன?
தேவரம்பை மாதர்களின் கூட்டம்,தேவர்களின் ஒலம் இடுகின்ற ஓசை,வாத்தியங்களின் ஒலி,மெய்பரம கன்னியர்களின் குரவை,வலம்புரிசங்குகள்எழுப்புகின்ற சங்கோசை நவரத்தினங்கள் சில் விளக்கு ஏற்றி நிற்கும் சிறப்பு, முத்து

சிப்பிகள் வீசுகின்ற ஒளி, கோமேதகங்கள் கொத்து கொத்தாக சூழ்ந்து இருக்கும் அழகு, மாமறையோர் சாஸ்திரம் ஓதும்சிறப்பு, கன்னிமார் கள்கவரி வீசுகின்ற அழகு என் பல சிறப்புகளோடு விளங்கியது பரமமணிக்கோட்டை.

34. சந்தனவாரி சமுத்திரத்தினுள் அமைந்துள்ள பரமமணிக் கோட்டையில் கேட்ட ஒலிகள் எவை?
தேவர்ளின் ஓலம், கன்னிமார்களின் குரவை ஒலி,மேளதாள வாத்தியங்களின் ஓசை,மாமறையோர் சாஸ்திரம் ஓதும் ஓசை முதலிய ஓசைகள் பரமமணி மண்டபத்தில் கேட்டுக்கொண்டிருந்து.

35. பரமமணிக்கோட்டையை சூழ்ந்துஇருந்ததுஎது?
கோமேதகம்

36. கோமேதகம் என்பது என்ன?
ஒன்பது வனகயான மணிகளும் ஒரு வகை ஆகும்.

37. பரமமணி மண்டபத்தில் சாஸ்திரம் ஓதியது யார்?
மாமறையோர்

38. பரமமணி மண்டபத்தில் ஒளி வீசி கொண்டிருந்தவை எவை?
முத்துகளும்,சிப்பிகளும்

39. பரமமணிக் கோட்டையில் சில் விளக்கு ஏற்றி கொண்டிருந்தவை எவை?
சிலம்புனைந்த ரத்தினங்கள்

40. பரமமணிக் கோட்டையில் தினமும் வந்துபோற்றியவர்கள் யார்?
சிவப்பெருமான், பிரம்மா, வாசலின், வானவர்கள்.

41. அம்மை லெட்சுமி தேவி மகர சிலையாக வளர்ந்து வரும் போது புஷ்ப மலர் தூவி நின்றார்கள் யார்?
பொன்னுலோகத்தார்.

42. ஓது மணியலைக்குள் ஓவியம் போல் வளர்ந்து இருந்தது யார்?
லெட்சுமி தேவி

43. பரமமணிக் கோட்டையில் தினமும் வந்து சிவசிவா என்று போற்றியவர்கள் யார்?
அமரர்கள்

44. அமரர்கள் என்பவர் யார்?
தேவர்கள்

45. பரமமணிக் கோட்டையில் தினமும் வந்து மெல்லி பதம் போற்றியவர்கள் யார்?
சந்திரன் மற்றும் சூரியன்

46. அம்மை லெட்சுமி தேவியை மகர சிலையாக பிறவி செய்து விட்டு நாராயணமூர்த்தி அடுத்து செய்தது என்ன?
சம்பூர்ண தேவன் மற்றும் பரதேவதையின் தவத்தை பார்க்க சென்றார்.

*******அய்யா உண்டு*******

அருள்நூல்

## சப்த கன்னிமார் பாடல்

முன் விதித்த விதி பயனால் அம்மைமார் ஏழு பேரும் அய்யா நாராயணனை தேடி தவமிருந்து நிறைவேற்றினர்.அத்தவத்தின் பெருமையால் தெட்சிணா பூமியில் மணவைப்பதி என்னும் தோப்பு பதியில் சென்று அவரைக் கண்டு மணம் புரிந்து மன்னவனும் தேவியுமாய் மகிழ்ந்திருந்த நியாயத்தைக் கதையாக வகுக்கலுற்றார்.

அக்கதையைச் சொல்ல இன்னதென்று யான றியேன். அதனைத் தெளிவாக வெளிப்படுத்த இறைவா உன்னுடைய அருள் வேண்டுகிறேன். சிவமாகிய உன் அருளால் இத்தொல் புவியில்

அதனை வேதவாக்காக எடுத்தியம்ப குறை ஒன்றும் இல்லாமல் நிறைவு செய்து அருள உம்மை வேண்டுகிறேன். தெட்சணாபதியில் எழுந்தருளிய நாத பிரம்மமே உன்னுடைய ஒப்புவுமையின்மையைச் சொல்ல நான் உன்னுடைய திருவருள் வேண்டுகிறேன்.

சிவபர ஆதிநாராயணக் கண்மணி ஆனவரே அம்மைமார் பாடலை தெளிவாக சொல்ல செயல் குரு நீயே அல்லால் இந்த உலகில் வேறு யாரும் உளரோ!

உன் திருவடிப் பேறு பெறும் பெருமைக்குரிய தெய்வமாதர் ஏழு பேரும் 12 ஆண்டு காலம் வனத்தில் தவம் செய்து நிறைவேற்றி, அன்று நீவீர் அருளிய படி தெட்சணாம பூமி வந்து பண்பாக உம்மை கண்டு மகிழ்ந்தனர்.

வந்தவர்கள் உம் அருளால் அவர்கள் காட்டில் பெற்று விட்டு சென்ற மக்களை கேட்டு வாதாடி நிற்க மக்களையும் ஈந்து அவர்களையும் உன்னோடு சேர்த்துக் கொண்டு தேவியும் மன்னருமாக இந்நாட்டை ஆண்ட கருணையை பாடுவேன். என்பது பறக்கும் கருடனைக் கண்டு உள்ளான் பறந்தது போலவும், குயில் கூவுவதை கேட்ட மந்திகள் தாமும் அவ்வாறு ஒலி எழுப்ப முயற்சித்தது போலவும், செந்தமிழ் பாவாணர்கள் முன்பு யான் பாடுவேன் என்பதை போன்றது ஆகும். இதில் குற்றம் குறைகள் ஒன்றும் வராமல் காத்திட உம்முடைய அருள் வேண்டுகிறேன்.

ஆதிபராசக்தி முதலான அனைத்து திருவருள் சக்திகளும் இக்கதைக்கு அருள் புரிய வேண்டுகிறேன். பரபிரம்மமாம் அரி நாராயணருடன் இவ்வுலகில் மிக வாழும் தேவி ஏழு பேரும் அன்பாய் இதற்கருள வேண்டுகிறேன்.

பெரும் புகழ்பெற்ற சான்றோரை ஈன்ற கோதை ஏழு பேரின் திருக்கல்யாண திருக்கதையைக் கூற என் குருநாதா உன் திருவருள் வேண்டி பணிகிறேன் .

ஸ்ரீமன் நாராயணரே தெட்சணம் எழுந்தருளி தேவமாதர்கள் ஏழு பேரை திருக்கல்யாணம் செய்து நாட்டை ஒரு சொல் ஒரு

குடைக்குள் ஆண்ட, காரணம் தன்னைக் கூற வெண் தாமரை யாளான அன்னை சரஸ்வதியே உம்மை போற்றி வணங்கி நிற்கின்றேன்.

அந்த தேவியர் ஏழு பேரும் கையிலையில் சிவபெருமானுக்கு பணிவிடை செய்திருந்தவர்கள். அவர்கள் தினமும் அரிகோண மாமலை என்ற அற்புதமான மாமலையில் உள்ள அயோக அமிர்த கங்கையில் நீராடி மகிழ்ந்து தங்கள் கற்பின் மகிமையால் கங்கை நீரை பந்து போல் திரட்டி கட்டி போல் எடுத்துக்கொண்டு போய் கைலாயபதியாகிய சிவனுக்கு அபிஷேகம் செய்து வந்தவர்கள். இவர்கள் சப்த மாதர்களின் அம்சமாக அன்னை பார்வதி தேவியோடு மகிழ்ந்திருப்பவர்கள். மரகதம், வள்ளி, வல்லி, சலிகை, சரகதக்கன்னி, சரிதை அரிமடவு என்னும் திரு நாமங்களுடன் இவர்கள் வாழ்ந்து வந்தார்கள்.

அரிகோண மாமலையைச் சூழ்ந்துள்ள அந்த மனோ ரம்மியமான வனத்தில் யாரும் போவதற்கு அறியார். தேவர்கள் அறியார்கள். தேவேந்திரன் முதல் வானவரும் போகறியார்கள். மூவரும் முனி சித்தாதிகளும் போகறியார்கள்.

ஒருவரும் போகறியாத அந்த அயோக அமிர்த கங்கை கரையில் ஒரு நாள் ஆளில்லை மேல் துயிலும் அச்சுதன் பச்சைமால் செல்கின்றார். சென்றவர் அந்த தேவமாதர்களின் ஆடைகளை எடுத்து அருகாமையில் நின்ற ஒரு ஆலமரத்தின் மேல் ஒளித்து வைக்கின்றார்.

அந்த தேவிகள் ஏழு பேரும் நீராடி கரையேறி தங்கள் ஆடைகளை பார்க்கின்றார்கள் காணவில்லை. அங்கங்கே தேடி பார்த்து காணாத காரணத்தால் அருகில் நின்ற ஆல மரத்தை அன்னாந்து பார்க்கின்றனர். அப்போது தங்கள் ஆடைகள் ஆலமரத்தின் மேல் இருப்பதை காண்கின்றார்கள். இது என்ன மாயமாய் இருக்கிறது. இங்கு எவரையும் காணவில்லையே! பூமியில் இருந்த நம்முடைய பொன் துகிலாகிய ஆடைகள் எப்படி ஆலின் மேல் பறந்து போச்சுதோ தெரியவில்லையே என்று வருந்தினார்கள்.

சுவாமி சிவனாருக்கு நாம் என்ன தவறு செய்தோமோ! கர்ம வினை பயனோ! வேதன் கட்டளையிட்ட படியோ! எடுத்தாரை

கண்டிலுமே என்று எண்ணி ஆலமரத்தில் ஏறி துகிலை எடுக்க துணிந்தார்கள்.

ஏழு தேவியரில் இளையவள் ஆலின் மேல் ஏறி துகிலை எடுக்கத் துணிந்தாள். அப்போது கோலத்திரு நெடுமால் காட்சி அளித்தார். அவரை கண்ட ஏழு தேவியரும் கோபத்துடன் அவரை எரிக்கத் துணிந்து அக்கினியால் போக கடவது என சாபமிட்டனர். அந்தச் சுனை கரையிலேயே கோலத் திரு நெடுமால் அக்கினியாகக் கிடந்தார்.

கண்டந்தத் தேவியர்கள் அவரை கனலாய் எரித்து விட்டோம் என்று மகிழ்ச்சியுடன் மீண்டும் அந்த சுனையில் இறங்கி நீராடினர்.

அந்த தேவியரை விட்ட கன்ற மாயவனார் தேவலோகம் சென்று ஏழு லோக தத்துவ வித்துக்களை எடுத்து தன் இதய கமலத்தில் அடக்கி கொண்டு அந்த கங்கை கரைக்கு வந்தார்.

நீராடிக் கரையறிய தேவியர்கள் மாயவரின் மாயையால் குளிரால் நடுங்கினர். குளிர் காய அக்கினியை தேடினர். மாயன் அக்கினியாக நின்றார். குளிரால் மதி மயங்கி அவர்கள் மகிழ்ச்சியுடன் அந்த மாயாக்கினியை சூழ்ந்து வட்டமிட்டு ஆவினர். இதனை பார்த்துக் கொண்டாடி மாயவனார் ஒரு கோலமதால் அவர்களை கொள்ளை கொண்டு மகிழ்ந்திடவே ஏழு பேரும் கர்ப்பமுற்றனர். ரிஷி கர்ப்பம் ரா தங்காது என்ற நீயதிபடி உடனே அந்த கங்கை கரையிலே ஏழு பேரும் ஏழு ஆண் குழந்தைகளை பெற்றனர்.

மாயன் அவர்களுக்கு வித்யாதர முனிவராக காட்சி கொடுத்தார். இவரோ எனக் கண்டு எரிக்கத் துணிந்தனர் முடியவில்லை. அய்யோ நம் பெண்ணரசே அறிவு குலைந்தோம். இப்போது கற்பை இழந்தோம். இது நம் கர்ம வினைப் பயனால் நிகழ்ந்தது. இத்தனை நாளும் இருந்த நெறியும் குலைந்தது.

சக்திக்கும் ஈஸ்வரருக்கும் இனி நாம் என்ன பதில் சொல்வோம். கானகத்தில் வந்த இடத்தில் இந்த மாயம் வருவது அறிந்திலமே! இந்த புனத்தில் இருக்கின்ற கிளி அன்னமும் நாம் பேச்சைக்

கேட்காமல் போகிறதே எனப் பெருமூச்சு விட்டபடி மதி மயங்கி தான் பெற்ற பிள்ளைகளை ஏறெடுத்து பாராமல் நாணியே மாமடவார் சிவனே என்று ஓம் நமச்சிவாய என்று சொல்லி வனத்தினூடே ஓடினார்கள்.

அண்ணரும் பிள்ளைகளை எடுத்து நாள்லொரு நாள் மட்டும் தேவேந்திரன் பசுக்களின் பாலை ஊட்டினார். பின்னர் கையிலைக்கு கொண்டு சென்று சாணார் என நாமமிட்டு, காணாத கற்பக பால் கையதிலே கொடுத்து அன்னை மாகாளியிடம் பிள்ளைகளை வளர்ப்பதற்காக கொடுத்து பிள்ளைகளுக்கு எந்த தீங்கும் வராமல் வளர்த்து தரவேண்டும் என்று வாக்கு மிக பெற்று அந்த அன்னையிடம் கொடுத்தருளினார். கொடுத்தவர் ஸ்ரீரங்கம் போய் செகமறியும் படியாக பள்ளி கொண்டிருந்தார்.

வனத்தில் சென்ற அந்த தாய்மார்கள் நமக்கு இவ்விதி ஏன் வந்தது? என்ன என்ன பாவத்தை செய்தோமோ? இந்த விதி வந்ததறியோமே! வன்னச் சிவனாரும் நம்மை மறந்தார். மாதுமை தாயும் நம்மை மறந்தார். இனி என்ன செய்வது என்று வருந்தியவர்களாக அந்த வனத்தில் சிவனார் அருள் பெற வேண்டி சிவனை நினைத்து தவம் இருந்தார்கள்.

வருவாய் நீ மகாபாரனே வந்தெங்கள் சங்கடங்கள் தீத்தருள்வாய், ஐவர்க்கு உதவும் ஆதிநாராயணரே! பச்சைமாலே! பால் கடல் துயிலும் பரந்தாமா! நாங்கள் அறியாமல் செய்த பிழையை பொறுத்து நாங்கள் பெற்ற மக்களையும் தந்து இந்த இராஜ்ஜியமும் ஆள வரம் அருளும். அய்யனே! என வேண்டி தவசி இருந்தார்கள்.

பண்டூசல் செய்த மாமுனிவர் வந்து எங்களை ஏற்று இன்பமுடன் மணம் முடித்து இந்த பாருலகம் ஆள வரம் தந்தருள்வாய் சிவனே! என்று வேண்டினார்கள். பன்னிரெண்டு ஆண்டு காலம் கடுந்தவம் புரிந்தனர். எவராலும் அமறுத்துரைக்க கூடாமல் இவர்களின் தவம் வளர்ந்து முத்தியது. இவர்களின் தவத்தின் உக்கிரத்தை பொறுக்க முடியாத அன்னை உமா மகேஸ்வரி ஈஸ்வரரை பணிந்து இவர்களின் தவம் பார்க்க எழுந்தருளும் என வேண்டினாள். அதற்கு அவர் உந்தன் அண்ணன் நாராயணர்

வராமல் நாமள் போவது சரியல்ல என்று சொல்ல அன்னை நாராயணனை எழுந்தருளச் செய்து அரம்பை மாதர் சூழ மூவருமாக தவம் பார்க்க எழந்தருளினார்கள்.

அம்மை உமையவளைக் கண்டு மகிழ்ந்த அந்த பெண்மணிகள் தாயே! திருவருளே! திருவருளே உருவான உனது தாள்கண்டு எத்தனை காலம் ஆகிவிட்டது என்று மகிழ்ந்து ஆனந்த கண்ணீர் சிந்தினார்கள். இமைப்பொழுது கூட எங்கள் இதயத்தில் இருந்து நீங்காமல் உன் திருவருள் கருணையால் கற்பகலா காத்த கருணையின் வடிவமே! நீயா எங்களை உலகில் தவறவிட்டாய்? இல்லை எங்கள் விதியால் வந்த வேதனையா இது? காத்திருந்தாய் என்றிருந்தோம்! எங்கள் கட்டழிய பார்த்திருந்தாயே தாயே!

ஈஸ்வருக்கும் ஈஸ்வரிக்கும் தொண்டு செய்து வந்ததல்லால் வேறு எந்த தவறும் நாங்கள் செய்து அறியோமே தாயே! இத்தனை காலமும் ஏனம்மா எங்களை தவிக்க விட்டாய்? உனது சொல் தப்பி நடந்தோமா? மண்ணில் வரவேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் நினைத்ததில்லையே! உன் சட்டம் மீறி ஒரு நாளும் நடந்ததில்லையே! காராவை கொல்லும் கொடும் பாவத்தை செய்தோமா? பிச்சையும் ஐயமும் இட்டு உண்ணாத அறம் இல்லாத பாவிகளை போல் அருந்தாமல் வாடும் நிலை எங்களுக்கு ஏன் வந்தது உனது அடியார்களாகிய எங்களுக்கு உன் கருணை இரங்க வேண்டுகிறோம் தாயே! என்று தொழுது நின்றார்கள்.
அம்மைமார்களின் வேண்டுதலை கேட்டு மனம் நெகிழ்ந்த அம்மை உமையவள் சிவபெருமானிடம் அவர்கள் தவத்தை ஏற்று அருள்புரிய வேண்டும் என வேண்டினாள். உடனே ஈசர் அவர்களை பார்த்து உங்கள் தவத்தை நான் ஏற்றோம் வெளியில் வாருங்கள் என்று அழைத்தார்.

தவநிலை கலைந்து எழுந்து வந்த அம்மைமார்கள் மறையொத்த மூவரையும் தாழ்ந்து பணிந்து, கனக திரவியமே கப்பல் கரை சேர்ந்தது போல் பெரு மகிழ்ச்சி அடைந்து பாமாலை சூட்டிப் போற்றினர்.

எங்கள் தவங் கண்டிரங்கி அருள் கொடுக்க வந்த மாதமே! மாதுமை மணவாளா! தண்ணொளியான சண்முகத்தாயே! நந்தகோவேந்தே! நாதாந்த வேதத்தின் நாயகா! நீதா! எங்கள் நாதா! சிவசிவா! உங்கள் திருவடியை போற்றுகின்றோம் என்றுப் பணிந்தார்கள்.

வேதங்களாலும் காண முடியாத வித்தகா! மாதவா! நீதவா! நிச ரூபச் சித்தா! சீதவாள் உமையே! தெய்வ தன் மணியே தொட்டது துலங்கும் அருள் திருப்பாதங்களை உடைய பாதவா! அயோக அமிர்தவனம் வந்து எங்களை தொட்ட பாங்கனே! தங்கள் திருவடி தொழுகு போற்றுகிறோம்.

மூவர்களும் அடிமுடி காண முடியாத முழுமுதற் பொருளே! தெய்வமணியே! தேவர்களுக்கும் எட்டாத திரவியமே! சிதம்பரத்தரசே! வனத்தில் எங்கள் கற்பை சோதித்து அகன்ற தாவத் துணையே எம் கணவா! தவமே உமது திருப்பாதம் போற்றி பணிகிறோம்.

நந்தி வாகனனே! உமையொரு பாகனே! பெற்ற இளம் கன்றை பறிகொடுத்த பசுபோல் துடித்து, உள்ளக் கிடக்கையை ஒருவருக்கும் சொல்ல முடியாத ஊமை போல் காட்டில் அடியார் ஏழு பேரும் ஆதரவற்ற அனாதைகளாக வாடி இருந்த நிலையறிந்து மனதிறங்கி எங்கள் வாட்டங் தீர்க்க வந்த மகாபாரனே! உம்மைக் கண்டோம் கவலை தீர்த்தோம்.

இனி எங்களை மீண்டும் கையிலைக்கு அழைக்காமல் நாங்கள் பெற்ற பிள்ளை ஏழும் இனவழியும் குறையாமல் தந்து எங்கள் நாயகனோடு இருந்து தரணி அரசாள வரம் அருளும் மாயாதிருக்கும் மறைமுதலே என்று வேண்டித் தொழுதனர்.

அனைத்து உயிர்களுக்கும் தாய் தந்தையாய் இருக்கும் அய்யாவே! மூல முதற் பொருளே! சச்சிதானந்த பேரொளியே! ஆனந்தமானவனே! அனைத்து ஆதாரங்களிலும் ஆட்சி புரிபவனே! அண்ட பிண்ட புவன சராசரங்களாகவும், அவற்றைக் கடந்து பரவெளியில் வீற்றிருக்கும் பரம்பொருளே! ஓங்கார பீடமாகிய கோண வட்டத்துக்குள்ளே குடி இருக்குகின்ற கோவே! ஈசனே! எங்கள் இன்னல்களை அகற்றி நாங்கள் பெற்ற

பிள்ளைகளை வழி முழுவதும் தற்காத்து பண்டுசெல் செய்த பார முனிவன் பாதார விந்தம் பணிந்து எந்நாளும் நாங்கள் அவரோடு சேர்ந்திருக்க வரம் அருள வேண்டும் என்று வேண்டினார்.

இதனை கேட்ட ஈசர் நாராயணரே இவர்கள் கேட்பவர்களுக்கு இன்ன விதம் என்று இசைந்து வரம் அருளும் என உரைத்தார். அதற்கு அவர் இவர்கள் கேட்ட வரம் முழுவதும் கெட்டியாய் நான் கொடுக்க நீர்த் துணையாக நின்றளும் என்று வேண்டிக்கொண்டு மடமாதே! பெண்ணரசே! மக்களுடைய தன்வழியில் சான்றோரிடம் நீங்கள் பிறந்து குழந்தைகளாய் இருக்கும் சமயம் நான் வருவேன் தெட்சணத்தில். தெட்சணத்தில் வந்து சிறந்த தவம் புரிந்து நிறைவேற்றி உங்களை வருத்தி மாமணம் புரிவேன். நாம் நம் மக்களை எடுத்து தர்மபுரி ஆண்டிடலாம் என்று வரம் தந்தருளினார்.

தந்தவர் வரத்தை வாங்கித் தார்குழல் ஏழு பேரும் முன்பு நாம் ஈன்றப் பிள்ளை மெய் குலம் தன்னில் தோன்றி மைக்குழல்மார்களெ ல்லாம் மானிடர் வழியே வந்து மேற்குலம் தன்னில் மாதர் விருப்பமாய் வாழ்ந்தாரன்றே.

**வினா விடை**:-

1. சப்த கன்னிமார்களின் பெயர்களை கூறு?
   மரகதம், வள்ளி, வல்லி, சலிகை, சரகதக்கன்னி, சரிதை, அரிமடவு.

2. சப்த மாதர்கள் யாரை நாடி தவம் இருந்தார்கள்?
   நாராயண மூர்த்தியை

3. நாராயண மூர்த்தி சப்தமார்களை எங்கு மணம் புரிந்து கொண்டார்?
   மணவைப்பதியில்

4. சப்த மாதர்கள் எத்தனை ஆண்டுகள் தவம் இருந்தார்கள்?
   12 ஆண்டுகள்

5. செந்தமிழ் பாடல்கள் பாடுவதில் சிறந்தவர்கள் யார்?

பாவாணர்கள்

6. சப்தமாதர்களின் பாடலை சிறப்பாக பாடி நிறைவேற்ற யார் யார் அருள்புரிய வேண்டும் என்று வேண்டினார்கள்?
சிவப்பெருமான், நாராயண மூர்த்தி, அம்மை உமையவள், சரஸ்வதி தேவி மற்றும் அனைத்து திருவருள் சக்திகளும்.

7. சப்த மாதர்கள் எங்கு வாழ்ந்தார்கள்? யாருக்கு பணிவிடை செய்தார்கள்?
சப்த மாதர்கள் கைலாயத்தில் வாழ்ந்து வந்தார்கள் சிவபெருமானுக்கும் அம்மை உமயவளுக்கும் தொண்டுச் செய்து வாழ்ந்தார்கள்.

8. சப்த மாதர்கள் அரிகோண மாமலையில் எங்கு நீராடினார்கள்?
அயோக அமிழ்த கங்கையில்

9. சப்த மாதர்களின் சிறப்பு என்ன?
கற்பில் சிறந்தவர்கள் சப்த மாதர்கள். அவர்கள் தங்கள் கற்பின் வல்லமையால் கங்கையில் நீராடி , கங்கை நீரை கட்டி போல் திரட்டும் வல்லமை கொண்டவர்களாக இருந்தார்கள்.

10. கங்கை நீரை கட்டி போல் திரட்டிச் சப்தமார்கள் என்ன செய்தார்கள்?
சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்தார்கள்.

11. அரிகோண மாமலையில் இருந்த கங்கையின் பெயர் என்ன ?
அயோக அமிர்த கங்கை

12. அரிகோண மாமலைக்கு யார் யார் இதுவரையிலும் சென்றதில்லை என்று சப்த மாதர்கள் கூறினர்?
தேவர்கள் ,தேவேந்திரன், வானவர்கள் மற்றும் சித்தாதிகள் யாரும் சென்றதில்லை என்று சப்த மாதர்கள் கூறினர்.

13. ஒருவரும் போக அறியாத அயோக அமைந்த கங்கை கரையில் சென்றவர் யார்?
ஆலிலை மேல் துயிலும் அச்சுதன் பச்சைமாலாகிய நாராயணர்.

14. சப்தமாதர்களின் ஆடையை எடுத்து எந்த மரத்தின் மேல் ஒழித்து வைத்திருந்தார்கள்?
ஆலமரத்தின் மேல்

15. சப்தமாதர்களின் துயில் எப்படி ஆலமரத்தின் மேல் சென்றது என்று ஐயமுற்றனர்?
பறந்து போச்சுதோ என்று யார் ஐயமுற்றனர்

16. சப்தமாதர்களினுடைய துயில் எத்தகையது?
பொன்துயில்

17. சப்தமாதர்களினுடைய ஆடை காணாத காரணம் எது என நினைத்து அழுதார்கள்?
சுவாமி சிவனாருக்கு நாங்கள் தவறு செய்தோமோ கர்ம வினை பயனோ வேதன் இட்ட கட்டளை படியோ யார் எடுத்தார் என்பது தெரியவில்லையே என்று வருந்தினார்கள்.

18. ஆலமரத்தின் மேல் ஏறி துயிலை எடுப்பதற்காக துணிந்தது யார்?
ஏழு தேவியரில் இளைய தேவி.

19. ஆலமரத்தின் மேல் ஏறி துயிலை எடுப்பதற்காக துணிந்த அந்த நேரத்தில் நிகழ்ந்தது என்ன?
கோலத் திரு நெடுமால் அய்ய நாராயண மூர்த்தி காட்சியளித்தார்.

20. நாராயணமூர்த்தி எங்கு சென்று ஏழு லோக தத்துவத்துக்களை எடுத்து வந்தார்?
தேவலோகம்

21. நீராடி கரையேறிய தேவியர்களின் நிலை எவ்வாறு இருந்தது?
குளிர் தாங்க முடியாமல் தவித்தார்கள்.

22. சப்தமாதர்கள் குளிர் தாங்க முடியாமல் என்ன செய்தார்கள்?
அக்கினியாக இருந்த நாராயணமூர்த்தியை ஆவினார்கள்

23. நாராயணமூர்த்தியை ஆவினவர்களின் நிலை என்ன?
ஏழு கன்னியர்களும் கர்ப்பம் முற்றார்கள்

24. சப்தமாதர்களுக்கு யாராக காட்சிக் கொடுத்தார்?
வித்யாதர முனிவராக காட்சிக் கொடுத்தார்

25. சான்றோர்களுக்கு யாருடைய பசுக்களினுடைய பால் கொடுக்கப்பட்டது?
தேவேந்திரனுடைய

26. சான்றோர்களை வளர்ப்பதற்கு யாருடைய கையில் ஒப்படைக்கப்பட்டது?
மாகாளியிடம் ஒப்படைக்கப்பட்டது.

27. சான்றோர்களை வளர்ப்பதற்கு மாகாளியிடம் ஒப்படைத்து விட்டு நாராயணமூர்த்தி எங்கு சென்றிருந்தார்?
ஸ்ரீரங்கத்தில்

28. சான்றோர் மக்களுக்கு எவ்வாறு பெயர் சூட்டினார்கள்?
சானார் எனப் பெயர் சூட்டினார்கள் .

29. சாணார் என்பவர் யார்?
தோணாதப் பொருளாகிய இறைவனை கண்டவர்கள்

30. சப்த மாதர்கள் ஏன் பிள்ளைகளை விட்டுவிட்டு தவத்திற்கு சென்றார்கள்?
நாணாத்தால் சிவனே தஞ்சம் என்றுச் சொல்லி தவத்திற்க்கு சென்றார்கள்.

31. தவத்திற்க்கு சென்ற தாய்மார்களின் நிலை என்ன?
எங்களுக்கு என்ன விதியோ?என்னென்ன பாவத்தை செய்தோமோ? என்று வருந்தி தவ நிலையில் இருந்தார்கள்.

32. சப்த மாதர்கள் தங்களை யார் யார் மறந்தார்கள் என்று கூறினார்கள் ?

சிவனாரும் மாதுமையும் தங்களை மறந்தார்கள் என்று கூறினார்கள்.

33. சப்த மாதர்கள் யாரிடம் தங்கள் சங்கடத்தை தீர்க்க வரவேண்டும் என்றுக் கேட்டார்கள்?
ஆதிநாராயணரே பச்சமாலே பாற்கடலில் துயிலும் பரந்தாமா அறியாமல் செய்த பிழையை பொறுத்து எங்களுடைய சங்கடத்தை தீர்க்க வரவேண்டும் என்று வேண்டினார்கள்.

34. சப்த மாதர்கள் எத்தனை ஆண்டு காலம் தவம் இருந்தார்கள்?
12 ஆண்டு காலம் தவம் இருந்தார்கள்.

35. சப்த மாதர்கள் சிவப்பெருமானிடம் கேட்ட வரம் யாது?
பண்டூசல் செய்த மாமுனிவர் எங்களை ஏற்று இன்பமுடன் மணமுடித்து இந்த பாருலுகம் ஆள வரம் தந்தருள வேண்டும்.

36. சப்தமாதர்களின் தவம் எவ்வாறு இருந்தது?
சப்தமாதர்களின் தவம் யாரும் மறுத்துரைக்க முடியாத வண்ணம் இருந்தது

37. சப்தமாதர்களின் தவத்தைப் பார்க்கப் போவோம் என்று யார் சிவப்பெருமானிடம் கூறினார்?
உமா மகேஸ்வரியான அம்மை உமையவள் சிவபெருமானிடம் அம்மைமார்களின் தவத்தைப் பார்க்கப் போவோம் என்றுக் கூறினார்.

38. சிவபெருமானிடம் அம்மைமார்களின் தவத்தைப் பார்க்கப் போவோம் என்று அம்மை உமையவள் கூறியவுடன் சிவப்பெருமான் யார் தங்களோடு வர வேண்டும் என்றார்?
நாராயண மூர்த்தி

39. சப்தமாதர்களின் தவத்தைப் பார்ப்பதற்கு யார் யார் சென்றார்கள்?
அம்மை உமையவளோடு அரம்பை மாதர்கள் சூழ, நாராயண மூர்த்தி, சிவபெருமான் ஆகியோர் சென்றார்கள்.

40. அம்மை உமையவளைப் பார்த்தவுடன் சப்தமாதர்களின் நிலை எவ்வாறு இருந்தது?
ஆனந்த கண்ணீர் சிந்தி இமைப்பொழுது கூட எங்கள் இதயத்திலிருந்து நீங்காமல் உன் திருவருள் கருணையால் கற்பகலா காத்த கருணையின் வடிவே நீயா எங்களை தவறவிட்டாய் என்று வருந்தினார்கள்.

41. சப்த மாதார்கள் எது கொடும் பாவமாக சொன்னார்கள்?
காராவை கொல்லும் கொடும் செயல், பிச்சையும் ஐயமும் இட்டு உண்ணாத அறம் இல்லாத செயல் போன்றவை கொடும் பாவமாக கூறினார்கள்.

42. தவம் நிறைவேறி வெளியே வந்த சத்தமார்கள் யார் யாரை வணங்கினார்கள்? சிவப்பெருமான், நாராயணமூர்த்தி, அம்மை உமையவள் ஆகிய மூவரையும் தாழ்ந்து பணிந்து வணங்கினார்கள்.

43. வேதங்களாலும் காண முடியாத வித்தகர் யார்?
நாராயணமூர்த்தி

44. அடிமுடி காண முடியாத முதற்பொருள் யார்?
சிவபெருமான்

45. நந்தி வாகனம் உடையவர் யார்?
சிவபெருமான்

46. ஊமைகள் கண்ட கனவது போல் தங்கள் உள்ளகிடக்கையை சொல்ல முடியாத ஊமை போல் காட்டில் ஆதரவற்ற அனாதைகளாக வாடி இருந்தோம் என்று கூறியவர்கள் யார்?
சப்த மாதர்கள்

47. சப்த மாதர்கள் சிவபெருமானிடம் வைத்த கோரிக்கை யாது?
இனி எங்களை மீண்டும் கையிலைக்கு அழைக்காமல் நாங்கள் பெற்ற பிள்ளை ஏழும் இனவழியும் குறையாமல் தந்து நாராயணமூர்த்தி எங்களோடு இருந்து அரசாள வேண்டும் என்று வேண்டினார்கள்.

48. நாராயண மூர்த்தி சப்த மாதர்களிடம் எப்போது வந்து ஏற்றுக் கொள்வதாக கூறினார்?
தெட்சனா பூமியில் வந்து சிறந்த தவம் புரிந்து நிறைவேற்றி உங்களை நான் திருமணம் செய்து கொள்வேன் அதன் பிற்பாடு தர்ம யுகத்தை ஆளலாம் என்று சப்த நாதர்களிடம் கூறினார்.

49. சப்தமாதர்கள் பூவுலகில் எங்கு வந்து வாழ்ந்து வந்தார்கள் ?
சப்தமாதர்கள் பெற்ற சான்றோர்கள் வழியில் வந்து வாழ்ந்து வந்தார்கள்

*******அய்யா உண்டு*******

## அருள் நூல்

## நடுத்தீர்வை உலா

பூமிதனில் நாரணர்தான் பொதுத்தீர்வை கேட்கிறநாள்
நேசமுடன் சீசரக்குச் சொன்னகுறி நேமமுடன்
புத்தியுள்ளமானிடர்கள் பொங்கமுதுடன்கேட்க
பந்தமுள்ள எம்பிரான் பாதமது காப்போம்

ஆதியிலேயே ஈசுரர்தான் அம்புவியெல்லாமெரிக்க
நீதியுடன்நேராகச்செத்த சனத்தையெல்லாம் சீக்கிரத்திலே யெழுப்பி
நற்குற்ற முள்ள பாவிகட்குக் கூர்நாகங் கொடுத்து
மெத்த மிகச்சபித்து பேயாலே தான் வதைத்து
தள்ளிவிட்டு நல்லோருக்கு மோட்சம் கொடுக்க வள்ளலுடன்
நாரணர்தான் வந்தவகை விள்ளுகிறேன்கேள்

பாவிகட்காய் மானிடர் போல் சமுத்திரத்தில் பிறந்து
மூன்று நாளாயிருந் தெழும்பிப் பூவுலகில் வந்தவுடன்
நாற்பது நாளிருந்து ஞாய வழிகாட்டி
அற்புதமாய்ச் சீசருக்கு சொன்னகுறி பொன்னுலகில்
நாம்போறோம் பூவுலகோரே கேளும்

மண்ணில் நடுத்தீர்க்க வாருமென்று சொன்னவுடன்
சீசர், எத்தனை நாளிருக்குதென்று வினவப் பின்
அதற்கே அரனுரைக்கும் வகையானது நித்தம்
நடக்கும் குறிகள் தன்னை நான் சொல்லுகிறேன்
என்றும் அடக்கமறச் சொல்லுகிறேன்அதுகேளும்

பஞ்சம்வரும் செழிக்கும் பாவத்தால் பகையாம்
வஞ்சப் பெருங்காற்றால் வையகத்தில் சஞ்சலநோய்
தீ நகரக்காந்தல் செகத்தோர்க்குத் தான் வயிற்றில்
மாநெருப்பாய்த் தங்கி வயிறு கழிந்து தீனமுடன்
மாள்வார் சிலபேர்கள் மாறாமலே சில நாள்

தாழ்வாருயர்வார் தான்கெடுவார் கோள் சண்டையாலே
சாவார்கள் அழிவார்கள் உண்டெனவே...
இரத்தமிகவோடவே மண்டலத்தில்...
நாடு பிழையாது நற்காலம் போயொழிக்கும்
கேடு தொடுத்துலகம் கெட்டுவரும் நாடுதனில்
மழை தழைத்துப் பெய்யாமல் வானம் சுருங்கி வரும்

களைகள் பயிரில் கலக்குமே விளையாது
வெள்ளத்தால் பஞ்சம்வரும் வெண்சாவியாகி விடும்
பள்ளத்தாலும் நெற்பயிர் நடுக்கும் சனங்களுற்ற
பட்டணங்கள் தோறும் பசிநோய் அதிகமதாய்
வட்டி அநியாயம் வாங்கிடுவார் தட்டழிந்து
பிள்ளையுடன் கொண்டபெண்ணைப் பேறாக விற்றிடுவார்

தள்ளிமையாய் கள்ளச்சிறைகள் வைப்பார்
வள்ளவிலாச் சூதுவிளையும் கடுஞ்சொல்களவும்
பொய்பெருத்து மாதருள்மேல் மோகமுற்று
வாடுவார் நீதமுள்ள ஞானங்கள் தப்பிவரும்
நாய்போல் சினந்திடுவார் ஊனக்கொலை புரிவார்

ஓயாமல் தீனதிய திருட்டுப் பெருத்துவரும்
சீமையெல்லாம் புரட்டுமுரட்டாகப் பேசிடுவார்
மருட்டியே என்தன் பணத்தை யிப்போது
தாவென்று சொல்லி சிந்தை கலங்கிடவே செப்பிடுவார்
நந்தலுறம் பொய்யாணை விட்டிடு வார்பொய்ச்
சத்தியமே பெருகும் மெய்யோனைத்தேடாமல்

விற்றிடுவார் வையகத்தில் ராஜனவன்கைக்கூலி
நடத்தியே வாங்கிடுவான் பேசிடுவான் ஞாயப்
பிழையாக ஆசையுள்ள அண்ணனுக்கு தம்பிபகை
அன்னயர்க்குப் பிள்ளைபகைகன்னி
பெண்களும் பகையாம் பண்ணிரியாமி
மருமகளுக்கு மாற்றானாய் மாறாமல்பூமிதனில்

மாமிதன் மேல் போர்ப்பகையாம் கூராண்மை அறிவு
மயக்கமாய் அண்ணனுடன் தங்கமுறைமை
தம்பிச்சொல்லுவார் முழுதுமே தரைதனிலே
தாயுமானும் சரசமிகப்பெருகி ஞாயவழிப்பாராமல்
நத்தியே நேசமுடன் சிற்றின்பம் செய்திடுவார்

சீமையெல்லாம் மயங்கி அத்தனையும் தேடார்கள்
அம்புவியெல்லாம் நித்தநித்தம் பெண்கள்
மோகம் பெருகிக்கண்ட கணவன்மேல்
பாவ மெனத்தோன்றாமல் பாருலகமெல்லாம்
அதிகக்கோபமுடன் பொய்யாற் கொலைகள்
செய்வார் பாவமதாய் முன்னாலே பெண்ரூபம்

முக்கோணமாய்ப் பிறக்கும் பின்னாலே ஆண்போல
பிறந்துவிடும் முன்னாலே ஆண்பிள்ளை பெண்பிள்ளைகள்போல
அரையின்கீழ் பிறக்கும் ஆண்பிள்ளைமீசை பெண்ணுக்கு
ஆகிவிடும் மட்டிகளாய் நாணுவார் நஞ்சுதின்பார்
நாக்கைப்பிடுங்கிடுவார் சீனமுடன்சாவார் கிணற்றிலே
நாணமுடன் ஆற்றிலேமடிவாரும் அக்கினியில் மாள்வாரும்
தாழ்மையாய் குத்திமிகச் சாவாரும் முகடராய் நாட்டமுடன்
பூலோகமெல்லாம் பிழையான துன்பத்தால் மாலோகச்
சக்கரத்தால் மடிவார்கள் பூவோகம் விசிறும்

பனியாலும் வீசக்காற்றாலும் வெயிலினாலும்
சீறுமிருகமதால் செத்திடுவாய், வீறுகெட்டு
நாளுக்குநாளாய் நடக்கவழி குறுகும், சேவிக்குமே
வானம் திசைமாறும் கூலிக்கும்பார்க்கும் பாழ்நரகில்
ஏறு அக்கினியால் நாள்தோறும் பூமி நடுக்கமுண்டாம்

வாழ்வோருக்கும் மேல்புறத்து நஞ்சைவிளையும்
அதற்குக் கீழ்புறத்து நஞ்சைவிளையாது
மேல்மழைகள் தான்கூடி மரத்துக்கொப்பு
நனைத்துவிடும்நாடி ஒருகொப்பு னையாது
மூடிவரும் கோழிமுட்டை ஒன்றிலே குஞ்சிண்டு மூன்றுவரும்
கோஎன்று பெட்டைக்கூவிவிடும்

நீசரால் வெள்ளத்தினால் சிலவூர்வேகுமே பள்ளமதாய்
தாழுமேசிலவூர் சமுத்திரம்வந்தே பெருகும்மாளும்
சிலவூர்மகிழ்ச்சியுடன் ஆளறிய அக்கினியாலே அழியும்

சிலவூர்கள் இக்குடனேமண்மாரி பெய்துவிடும்
நாடுதனில் ராசாக்கள் பாவிகளாய் நாள்தோறும்
வந்து பாசாங்குமந்திரியும் பாவிகளாய் கூசாமல்

பெண்ணாலும் பொன்னாலும் நிலங்கரையில்
மண்ணாலும் நித்தம்மடிவார் முன்னோர்கள்
உண்டுபண்ணி வைத்த உட்பொருளைத் தேடாமல்
கண்டதெல்லாம் தெய்வமெனக்கை யெடுப்பார் சண்டாளர்
குட்டியழித்திடுவார் கொல்லுவார் கொண்டவனை
முட்டியவர் தாயைமகன் கொல்லுவான் கெட்டுவிழ நெஞ்சுடனே

பேயால் நாடும் மருந்தாலே துஞ்சிவிடும் மாற
பில்லிசூனியத்தால் அஞ்சாமல் கொன்றிடுவார்
பாவமதாய் கூர்மையுடன் பாராமல் பன்னி உருக்காட்டி
பலியாகும் நன்றிகெட்டு தீவைப்பார் பகையால்
தீங்கான நோய்பெருகும் பான்மை வையகம்பாழாகும்

ஏவல்செய்ய சின்னபிள்ளைகள் சிற்றின்பம் செய்திடுமே
மண்ணில் சடைவாக வார்த்தை சொல்லும்
பின்னும் மந்தப்பாவம் பிணிகருத்தாய் பாலருகில்
மானிடர்க்கு காவலுருப் புண்ணியங் கசப்பாகும்
மேவரிய ஒருத்தனுடன் ஒப்பத்தெட்டு பேர்கள்
திருத்தமறவே திரிவார் தேசமதில்

வருத்தமாய் தேடிநித்தம் குருதாய் தகப்பன்
கூறுமொழிகேளார் திருத்தமுடனே சிவத்தைத்
தேடார்கள் கருத்துடனே பிச்சையது போடாமல்
பேய்க்குக் கொடுத்திடுவார் அச்சமுடன்
தெண்டமதற்கிடுவார் வஞ்சமறநாடு வுயர்ந்துவரும்

நாள்தோறும் பூமியெல்லாம் காடுந்தணிந்துவரும்
கண்டிருங்கோ வெள்ளி இடிகளாய் விழுமாம்
வில்போடும் மாறிமாறி வேளாண்மை குன்றிவரும்

மேல்மேலும் வெள்ளமது பெருகும் மேகத்திலே
இருந்து மீனும்விழும் மழையிலே மேகமதாய் வில்லும்

வெவ்வேறாகிவிடும் ஆகமத்தில் ஜனங்கள் வளர்த்தி
குன்றிவிடும்தாக்குப் பொறுக்காது
ஜனங்களுக்ஆயள்தான்குறையும்
காப்புக்கட்டி வைத்தமகன் கனபவுசாயிருக்கிறான்
மாமன்நானிருக்க மனம்போல் நடத்துகிறான்
அவன்பட்டம் பறித்திடுவேன் கொட்டிக் கலைத்திடுவேன்.
நாரணனும்

முற்றிற்று

## நடுதீர்கை உலா

### விளக்கம்:

ஆன்மாவுக்கு எப்படி நடு தீர்ப்பு அருளப்படுகிறது என்பதை இந்த பகுதியில் எம்பெருமான் அருளி இருக்கின்றார்.

பூமிதனில் நாராயணர் தான் பொது தேர்வை கேட்கிற நாள் அன்புடன் சீசருக்கு சொன்ன அறிகுறிகளையும் மானிடர்கள் அன்புடன் கேட்க பந்தமுள்ள எம்பெருமான் திருவாருள் காப்பதாக என்று இங்கே முதல் காப்பாக துவங்குகின்றார்.

ஆதிகாலத்தில் ஈஸ்வரன் இந்த உலகெல்லாம் தன்னுள் ஒடுக்கி இறந்தவர்களை எழுப்பி நடுதீர்ப்பு செய்து அதர்மிகளை நரகத்தில் தள்ளிவிட்டு நல்லவர்களாகிய தர்மகளுக்கு முக்தி அளித்தது போல், நாராயணரே நல்ல

வைகுண்டராய், கேட்டதைக் கேட்டபடி அருளும் கற்பக தருவாக ஈஸ்வரருடன் வந்து நடுதீர்ப்பு செய்ய வந்த செய்தியை சொல்லுகிறேன் கேளுங்கள் என்று துவங்குகின்றார்.

இக்கலி பூமியில் பிறந்த அப்பாவிகளுக்காய் நாராயணரே நல்ல வைகுண்டராய், பாற்கடலில் வெளிப்பட்டு முக்காலமும் அறிந்தவராய் மனுவை சோதித்தெடுக்க மனநிறம் காட்டி தெட்சணம் எழுந்தருளி நாற்பது நாட்களாக நல்ல உபதேசங்களை செய்து நியாய வழிகாட்டி அவதாரங்களை நிறைவு செய்துவிட்டு, சீசரிடம் நாம் பொன்னுலகமாகிய வைகுண்டம் போவோம் என்றும், அதன் பின் மண்ணில் நடுத்தீர்க்க வருவோம் என்றுச் சொல்லியருளினார்.

உடனே சீசர் தாங்கள் வருவதற்கு எத்தனை நாள் இருக்குது என்று கேட்டார். அதற்கு அய்யா வைகுண்டார் சீசரிடம் கூறிய பதில் எதுவென்றால் நாட்டில் பஞ்சமும் செழிப்பும் மாறி மாறி வரும். அதர்மச் செயல்களால் பகை உண்டாகும். மாசு நிறைந்த காற்றினால் நோய்கள் பெருகும். மன அமைதி கெடும். வயிற்றில் தீ நகர காந்தல் உண்டாக்கி வயிற்றுப்போக்கு அதிகரிக்கும். இதனால் சில பேர் மாள்வார்கள். வாழ்வில் உயர்வும் தாழ்வும் மாறி மாறி வரும். ஒருவருக்கொருவர் கோள் மூட்டி பெரும் பகையை உருவாக்குவார்கள். இதனால் பல சண்டைகள் உருவாகி ரத்த ஆறுகள் ஓடும். இதனால் பல அழிவுகள் ஏற்பட்டு பல பேர் அழிவார்கள்.

பூமி நல்ல விளைச்சலை தராது. நல்ல காலம் போய்விடும். அநீதியால் நாடு கெட்டு வரும். போதிய அளவு மழை பெய்யாது. வானம் சுருங்கி வரும். களைகள் பயிரில் கலப்பதால் பயிர்கள் நல்ல விளைச்சலை தராது. பயிர்கள் பால் பிடிக்கும் பருவத்தில் தண்ணீர் இல்லாமல் வெண்

சாவி ஆகிவிடும். பள்ளமான பகுதியில் நீர் தேங்கி பயிர்கள் அழியும்.

பூமி நல்ல விளைச்சலை தராமல் இருக்கின்ற காரணத்தினால் பட்டணங்கள் தோறும் பசி நோய்கள் அதிகரிக்கும். மக்கள் பஞ்சத்திலிருந்து தம்மை காத்துக் கொள்ள கடன் வாங்கினால் கடன் கொடுப்பவர்கள் அநியாய வட்டி வாங்குவார்கள். இதனால் தட்டழிந்து நிலை குலைந்து பிள்ளைகளுடன் கொண்ட மனைவியையும் விற்றுவிடுவார்கள். இவ்வாறு தவறு என்று தெரிந்தும் கள்ள சிறை வைப்பார்கள்.

நல்லதெல்லாம் நேர்மை குன்றிவிடும். கபடம், பொய் இவைகள் அதிகமாகும். காமம் மிகுதியால் பிறர் மாதர் மேல் மோகம் அதிக மாகி வாடுவார்கள். இதனால் நீதிநெறிகள் தவறும். மன ஊக்கமும் பொறுமையும் இல்லாமல் மக்கள் திடீரென நாய்கள் போல சினம் கொண்டு கோபப்பட்டு அந்த கோபத்தினால் பலவிதமான கெடுதல்கள் ஏற்படும். ஈன கொலைகளையும் செய்வார்கள். அது மட்டுமல்ல திருட்டு அதிகமாகும். கொலை கொள்ளை பெருத்து வரும். மக்கள் நேர்மை அற்றவர்களாக பொய்யும் புரட்டுரட்டுமாக பேசிடுவார்கள். கள்ள கபடமுடனே பொய் சொல்லுவார்கள். கபட நாடகம் ஆடுவார்கள். கடன் கொடுத்தவர்கள் கடன் வாங்கியவனை பயமுறுத்தி இப்பொழுதே என் கடனை கொடு என்று சிந்தை கலங்க பேசிடுவான். மனசாட்சி இல்லாமல் பிறருக்கு கேடு விளைவிக்கும் வகையில் பொய் சத்தியம் செய்வார்கள் பொய் சத்தியமே அதிகமாக பெருகும். மெய்யான இறைவனை தேடாமாட்டார்கள். இறைச்சிந்தனை அற்று நாத்திகம் பெருகும். ஆட்சியாளர்கள் எதற்கும் கைக்கூலியாகிய லஞ்சம் அதிகம் வாங்குவார். லஞ்சம் கொடுத்தவனுக்கு சாதகமாக நியாயப் பிழையாக பேசிடுவார்கள்.

ஆசையும் பாசமும் உள்ள அண்ணனுக்கு தம்பி பகைவன் ஆவான். அன்னையருக்கு ஆண் பிள்ளை பகையாக இருக்கும். கன்னி பெண்களும் தாய்க்கு பகையாக இருப்பார்கள். மாமியாரும் மருமகளும் போர் பகையாக இருப்பார்கள். காமம் மிகுதியால் அறிவு மயங்கி அண்ணனுடன் தங்கை முறை தப்பி கலவியில் ஈடுபடுவார்கள். தாயும் மகனும் காமம் மிகப் பெருகி நியாய நிலை தப்பி சிற்றின்பத்தில் ஈடுபடுவார்கள்.

மக்கள் காமம் மிகுதியாகி சிற்றின்பத்தில் மயங்கி இறைவனையும் தேட மாட்டார்கள். இந்த உலகம் எல்லாம் பெண்கள், மோகம் பெருகி கண்ட கண்ட ஆடவனுடன் கூடி மோகக் கலவி அதிக அளவில் செய்வார்கள். பாவம் என் தோணாமல் பொய் சொல்லி அதிக கோபம் உடன் கொலைகள் செய்வார்கள். பாவச்செயல்களின் காரணமாக, முன்பகுதி பெண் ரூபமாகவும் ,பின்பகுதி ஆண் ரூபமாகவும் குழந்தைகள் பிறக்கும். ஆண் பிள்ளை, பெண்பிள்ளைகளைப் போல அரையின் கீழ் பிறக்கும். பெண்களுக்கு ஆண்களைப் போல மீசை முளைக்கும்.

மக்கள் மூடத்தனமாக அறிவற்று தவறு செய்வார்கள். பின்னர் நாணமுற்று ஆற்றில் விழுந்தோ, கிணற்றில் விழுந்தோ, தீக்குளித்தோ, தாழ்மையாய் குத்திக்கொண்டோ வெட்டிக்கொண்டோ செத்து போக வேண்டும் என்று சாவார்கள். அறிவின்றி தவறான முறையில் பணம் காசு சேர்த்து அதனால் வரும் துன்பத்தால் மடிவார்கள் சிலர்.

பூலோகத்தில் மக்கள் தங்கள் தீவினைகளால் இயற்கை நிலைதடுமாறி அளவற்ற பனிப்பொழிவாலும், விஷ காற்றாலும், கடும் வெயிலாலும் , சீறும் மிருகங்களாலும் மடிவார்கள். நாளுக்கு நாள் நடக்கும் வழி குறுகும். நடத்தை பிழையால் ஒழுக்கம் கெடும் . வானம் திசை மாறும். மழை

பொழியாது. பஞ்சம் உண்டாகும். கூலிக்கு வேலை செய்யும் நரக வேதனை உண்டாகும்.

பூமியில் வெப்பம் அதிகமாகும். அடிக்கடி நிலநடுக்கம் உண்டாகும். நல்வாழ்வு வாழும் தர்மிகளுக்கு மேற்புறத்து நஞ்சை விளையும். அதற்கு கீழ்புறத்து நஞ்சை விளையாது. மழையானது ஒரு மரத்தில் ஒரு பக்கம் நனையும்படி மறுபக்கம் நனையாதபடியும் பெய்யும். ஒரு கோழி முட்டையில் இருந்து இரண்டு மூன்று குஞ்சுகள் உருவாகும். பெட்டைக் கோழியானது சேவலைப்போல் கூவும். (பெண்ணின் கருப்பையில் உருவாகும் கருமுட்டை இரண்டும் மூன்றாக பிரிந்து வளர்ந்து ஒரே பிரசவத்தில் பல சிசுக்கள் பிறப்பதையும் பெண்கள் ஆணாக மாறுவதையும் நிலையும் உருவாகும்)

அளவுக்கு மிஞ்சிய வெள்ளப்பெருக்கால் சில ஊர் நீரில் மூழ்கி விடும். மின்னல் இடியால் சில ஊர் அழியும். சில ஊர் கடலுக்குள் மூழ்கும். மகிழ்ச்சியுடன் மக்கள் சில ஊர்களில் வாழ்வார்கள். சில ஊர்கள் அக்கினியால் அழியும். சில ஊர்கள் மண் மாரியால் மூடப்பட்டு அழியும். பாவிகளே அதர்ம முறையில் ஆட்சி செய்யும் ஆட்சியாளர்களாக நாட்டில் நாள்தோறும் வருவார்கள்.

மந்திரிமார்கள் பாசாங்கு காரர்களாக இருப்பார்கள். சொல் வேறு செயல் வேறு உடையவர்களாக இருப்பார்கள். அவர்கள் கூச்சமே இல்லாமல் பெண்ணாகவும் பொன் பணமாகவும் நிலம் கரைகளாகவும் லஞ்சம் பெற்று அதனால் அழிந்து போவார்கள். இந்த உலகை படைத்து காத்து ரசித்தருளும் அனைத்துள்ளும் அந்தராத்மாவாக உயிருக்கு உயிராக இருக்கும் முதற்பொருளான பர பிரம்மத்தை தேடாமல் கண்டதெல்லாம் தெய்வம் என்று கையெடுத்து வணங்கித் திரிவார்கள் சண்டாளர்கள் .

பெண்கள் குழந்தைகளை கொன்று விடுவார்கள். கரு உருவாகுகின்ற போது அழித்து விடுவார்கள். கொண்ட கணவனையே கொல்வார்கள். ஒழுக்கங்கள் கெட்டுவிடும். மூடத்தனம் உடைய அந்த தாயை மகன் கொல்லுவான். விஷத்தாலும் பேயாலும் நாடு மருந்தாலும் கொன்றிடும் மரண பில்லி சூனியத்தாலும் அஞ்சாமல் மக்கள் ஒருவரை ஒருவர் கொன்று விடுவார்கள். மேலும் பன்றியானது மலம் தின்னுவதும் அசுத்தத்திற்கு இலக்கணமாகும். தீண்ட தகாததும் ஆகும். தான் செய்த பாவத்தின் காரணமாக புத்தி கூர்மையுடன் சிந்திக்க முடியாமல் தீண்டத்தகாத கீழ்த்தரமான செயல்களை செய்து துன்பப்படுவார்கள். பகையின் காரணமாக நன்றிகெட்டு தீ வைப்பார்கள். கொடுமையான ஆட்கொல்லி நோய்கள் பெருகும். அதனால் பெரும்பான்மையான வையகம் எல்லாம் பாழாகும்.

வெளி தூண்டுதலால் சின்ன பிள்ளைகள் சிற்றின்னும் செய்வார்கள். வயசுக்கு பொருந்தாத பேச்சு பேசும். மந்த புத்தியினாலும் நோய் நொம்பலங்களாலும் மனநிலை பாதிக்கப்பட்டு மானிடர்கள் தங்கள் ஆன்மாவை காக்கும் புண்ணியம் கசப்பாகும். விரும்பத்தகாத ஒழுக்கம் கெட்ட ஒருவனுடன் பல பெண்கள் ஒழுக்கம் இன்றி திரிவார்கள்.

தேசமதில் குரு, தாய், தகப்பன் கூறும் நல்ல மொழிகளை கேட்க மாட்டார்கள். மனம் ஒன்றி சிவத்தையும் கடவுளையும் தேட மாட்டார்கள். நல்ல எண்ணத்துடன் பிச்சை போடாமல் பேய்க்கு கொடுத்து விடுவார்கள். அச்சமுடன் தெண்டம் அதற்கு இடுவார்கள். மக்கள் பெருக்கத்தினால் நாடு மிக விரிவடையும். காடு சுருங்கி வரும். அதனால் மின்னலும் இடியும் உருவாகும். மழை பொழியாது. வேளாண்மை குன்றி விடும். மேன்மேலும் மலைமேகம் உண்டாகும். வானத்தில் இருக்கின்ற விண்மீனும் விழுந்துவிடும். மழையும் மேகமும்

வானவில்லும் வேறாகிவிடும். ஆகமத்தில் ஜனங்களின் வளர்ச்சி குன்றிவிடும்.

(கிரேதா யுகத்தில் மனிதனின் வளர்ச்சி ஒன்பது அடி, திரேதாயுகத்தில் எட்டடி, துவாபர யுகத்தில் ஏழடி, கலியுகத்தில் ஆறடி கலியுக முடிவில் நான்கு அடி ) மனிதனுடைய வளர்ச்சி குறைவதைப் போல் ஆயுளும் குறைந்து விடும்.

காப்பு கட்டி வைத்த மகன் அதாவது பணிவிடைக்காக வைத்த மகன் எல்லா சிறப்புகளையும் பெற்று இருக்கின்றான். எல்லா சிறப்புகளையும் பெற்று சிறப்போடு இருக்கின்ற போதும் இதற்கு காரணம் என்ன என்பதை உணர்ந்து கொள்ளாமல் ஆணவப் போக்கு மேலோங்கி விடுகிறது. மாமன் நான் இருக்க அதாவது மாமனாகிய இறைவன் நான் இருக்க என்னை கெணியாமல் அவன் மனம் போல் நடத்துகின்றான்.

இறைவன் சொன்ன நெறியோடு வாழாமல் பணிவிடைக்காரர்கள் அவர்கள் வைத்தது தான் சட்டம் என்று தாங்கல்களை வழிநடத்தி சென்று கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறு நடக்கும் பணிவிடை காரர்களுக்கு நான் கொடுத்த வரத்தத்தையும், பட்டத்தையும் பறித்து விடுவேன். மேலும் ஒற்றுமையை சீர் கொலைத்திடுவேன். குடிகெடுப்பேன் நாரணரும். அவ்வாறு வைகுண்டருடைய சட்டத்திற்கு மீறி தங்களுடைய மனம் போல் நடப்பவர்களுடைய வாழ்க்கையானது அழிந்துவிடும் என்பதை இங்கே நமக்கு உணர்த்துகின்றார். பணிவிடைகாரர்களாகிய இறைப்பணி செய்பவர்களுக்கு பணிவு வேண்டும் என்பதை அய்யா நமக்கு பல இடங்களில் கூறியிருக்கின்றார். பணிந்திருந்து பணிவிடைகள் செய்வாயானால் உயர்ந்த குடியாவாய் உயர் பிழைப்பாய் என் மகனே என்று கூறியிருக்கிறார்.

ஆகவே பணிவோடு இருந்தால் மட்டுமே இறைவனை அடைய முடியும். இறைவன் சொன்ன நெறியோடு வாழ்ந்து நாம் இறைவனுடைய பாதாரத்தை அடைய வேண்டும். இறைவன் நடுதீர்ப்பு செய்யும் நேரத்தில் அவர் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்வதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். ஆகவே இறைவன் வகுத்த நெறியோடு வாழ்ந்து தர்ம யுக வாழ்வைப் பெறுவோம்.

*********அய்யா உண்டு*********

# பட்டயப்படிப்பு

## மூன்றாம் பருவம்

## பாகம்-I

# அகிலம் கல்விச்சாலை

அகிலத்திரட்டு பாடம் படிக்க, அகிலத்திரட்டு வாசிப்பு பயிற்சி மேற்கொள்ள , பதி, தாங்கல்களில் அறப்பாடச்சாலை நடத்த, அகிலத்திரட்டு பாராயணப் பயிற்சி **வழங்கப்படுகிறது**.

- வகுப்புகள் ஆன்லைன் மூலமாகவும்,
- நேரடியாகவும் வழங்கப்படுகிறது.

## **தொடர்புக் கொள்ள வேண்டிய முகவரி**:

14/14-1, **மணலிவிளை**, **மண்டைக்காடு அஞ்சல்**,

**கன்னியாகுமரி மாவட்டம்**-629252.

**வாட்ஸ் அப் எண்**:9489655691

**வாட்ஸ் அப் குழுவின் பெயர்**: **அகிலம் அறிவோம்**

**தொடர்பு கொள்ள வேண்டிய அலைப்பேசி**: 9486880072,9489655691